நன்றி - நூலகத்திட்டம்



# சரிநிகர்

சரிநிகா சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

அடுத்த இதழ் ஜனவரி 15ல்

எமது புதிய முகவரி: 19/4, நாவல வீதி, நுகேகொட

இதழ்-162 டிச.24 - ஜனவரி 14, 1998 விலை ரூபா 10.00



# அரசாங்கத்திற்கு மாபெரும் வெற்றி !

## - சந்திரிகா

# அரசு எல்லா முனைகளிலும் தோற்றுவிட்டது !

## - ரணில்

அரசாங்கம் கடந்த நான்காண்டு கால யுத்தத்தில் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. புலிகளுக்கு இது ஒரு படுதோல்வியாக அமைந்துள்ளது. அவர்களது உறுப்பினர்கள் அவர்களிடம் இருந்து விலகிச் செல்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளை பெற்றோர்களிடமிருந்து பிரித்துச் செல்கிறார்கள் என்று அண்மையில் 'புரன்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். புலிகளிடம் அவர்களது போக்கில் மாற்றமேதும் எற்படவில்லை. என்று குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள், அவர்களுடன் பேசுவதானால் கால அட்டவணை ஒன்றின் அடிப்படையிலேயே பேசமுடியும் என்றும் தெரிவித்திருந்தார். ஆயினும் ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம், இதே சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னரைவிட இப்போது பலம்பெற்றிருக்கிறார்கள் என்றும், அரசாங்கம் தான் முன்னெடுத்த அனைத்துத் முனைகளிலும் பின்னடைவை எதிர்நோக்குகின்றது என்றும் தெரிவித்தார்.

(-மேலும் விபரங்கள் பக்கம் 4,5)

பக்கம் 10,11







## வன்னி :

## இலக்குத் தவறாத தாக்குதல்கள்

நன்றி - நூலகத்திட்டம்



# உலக நாடுகளினது கையாலாகாத்தனமும், அமெரிக்காவின் அயோக்கியத்தனமும்

**ஈராக்கைத்** தாக்குவதற்காக அமெரிக்கா முயற்சி செய்து வருகிறதென்றும் அதற்காக முஸ்லிம் மக்களின் நாடிபிடித்தறியும் முயற்சியில் இறங்கியிருப்பதாகவும், இலங்கை முஸ்லிம் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களை அமெரிக்க துாதுவராலயம் அழைத்து விருந்து கொடுத்து அவர்களோடும் இது குறித்து கலந்துரையாடிதென்றும் சென்ற இதழில் சரிநிகர் எழுதியிருந்தது.

சொன்னது போலவே அமெரிக்கா பிரித்தானியாவுடன் இணைந்து ஈராக் மீதான தாக்குதலை நடத்தி முடித்து விட்டது. ஜனாதிபதி கிளின்டன் மீதான மோனிக்கா லிவின்ஸ்கி விவகாரத்தில் எழுந்த ஒழுக்கவழுவுரைப் பிரேரணை விவாதத்தை திசை திருப்பும் நோக்குடனேயே ஈராக் மக்கள் மீதான இந்தத் தாக்குதல் இம்முறை தொடங்கப்பட்டது என்று கூறப்பட்டது.

டிசம்பர் 17 அன்று அமெரிக்க கொங்கிரசில் கிளின்டனுக்கு எதிரான ஒழுக்கவழுவுரைவிவாதிக்கப்படத் தினம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கிளின்டன் 16ஆம் திகதியன்று பிரித்தானியாவோடு அவசரப்பட்டு பேசி அமெரிக்க நேரத்தின்படி காலை 10 மணிக்கு ஈராக் மீதான தாக்குதலை நடத்தத் தொடங்கியிருந்தார்.

இந்த அவசர நெருக்கடி காலத்தை கவனத்திற் கொண்டு அமெரிக்க கொங்கிரசும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒத்தி வைத்தது. அது போல நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்கவென அமெரிக்க மக்கள் கிளின்டன் மீதான மொனிக்கா விவகாரத்தை துார எறிந்து விட்டு போர் ஆரவாரங்களில் இறங்கி விடுவார்கள் என்று கிளின்டன் கருதினார். ஆனால் இம்முறை அமெரிக்கா ராஜதந்திர ரீதியில் சர்வதேச சமூகத்தின் அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டது தவிர வேறேதும் நடக்கவில்லை. சீன அரசாங்கமும்,ரஷ்ய அரசாங்கமும் இந்த நடவடிக்கையைக் கண்டித்திருந்தன. பிரான்ஸ் இதை வன்மையாக மறுத்திருந்தது. உலகம் முழுவதும் அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தது. அரபுப் பிரதேச நாடுகள் இந்த யுத்தத்தை ஏற்க மறுத்தன. சர்வதேச புத்திஜீவிகள் இந்தத் தாக்குதல் தேவையற்ற நடவடிக்கை என்று அபிப்பிராயப்பட்டனர்.

முன்பெல்லாம் கெடுபிடியுத்த காலப்பகுதியில் இப்படியான அமெரிக்க சண்டித்தனத்துக்கு பதில் கொடுக்கும் வகையில் பதிலுக்கு தமது படைக்குவிப்பை சோவியத்யூனியன் செய்து வந்தது. அதன் உடைவுக்குப் பின் இந்நிலைமை மாறி விட்டது. அமெரிக்காவை தட்டிக் கேட்க ஆளில்லாத நிலை தோன்றியது.

ஈராக் 1990 ஓகஸ்டில் குவைட் எல்லைகளைத் தாக்கிய போது அதனை அத்து மீறலெனக் கூறி ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து ஐ.நா.வின் முகமூடியை அணிந்துகொண்டு அமெரிக்கா ஈராக்கை கடுமையாகத் தாக்கி பல அழிவுகளை ஏற்படுத்தியதுடன். வெளிநாடுகளிலுள்ள ஈராக்கின் சொத்துக்களை முடக்கியது. ஐ.நா.வுக்கூடாக பொருளாதாரத் தடையையும் விதித்தது. இன்று அமெரிக்க அத்துமீறலை எதிர்த்து செயற்பட வேறு நாடுகள் மட்டுமல்ல ஐ.நா.கூடத் தயாரில்லை. சில நாடுகள் மாத்திரம் காரசாரமான கண்டன அறிக்கைகளோடு சரி. ரஷ்யா 1994இலிருந்து அமெரிக்காவுக்கான துாதுவராக இருந்துவந்த 'வொலநொய்டொவ்'ஐ திருப்பி அழைத்துக் கொண்டது. அது போல மீண்டும் போர் தந்திரோபாயங்களை மறுசீரமைக்கப் போவதாக அறிவித்துள்ளது.

1991இல் ஈராக் மீதான வளைகுடா யுத்தின் மூலம் அமெரிக்கா சாதித்த இன்னொரு பக்கம் குறித்து இன்று அவ்வளவாக பேசப்படுவதில்லை. அது தான் மத்திய கிழக்கில் தனது படைத்தளங்களை நிரந்தரமாக அமைத்துக் கொண்டதும், தனது உற்பத்திகளுக்கான சந்தையாக மத்திய கிழக்கை ஆக்கிரமித்துக் கொண்டது. மத்திய கிழக்கில் தனது படைத்தளங்களை நிறுவிக் கொண்டதன் மூலம் அதனைச் சூழ உள்ள நாடுகளை நோக்கி மறைமுகமாக அச்சுறுத்தலையும் உளவு வேலைகளையும் செய்து வந்தது. மத்திய கிழக்கு நாடுகளை பாதுகாப்பதாகக் கூறி தனது படைக்குவிப்பு மற்றும் தளபாடக் குவிப்புகளை செய்திருந்த அமெரிக்கா இதுவரை அவற்றுக்கான செலவுகளை அந்தந்த நாடுகளிலிருந்தே கறந்து வருகிறது.

அது போல படிப்படியாக மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் சிவில் மற்றும் அத்தியாவசிய சேவைகளை நிர்வகிக்கின்ற பொறுப்புகளையும் அமெரிக்கா மேற்கொள்ளத் தொடங்கியது. இதனை செய்யும் அமெரிக்க நிறுவனங்களுக்கான செல்வுகளை அந்தந்த நாடுகளே பொறுப்பெடுக்கின்றன. குவைட் போன்ற நாடுகளில் இன்று அமெரிக்காவின் நிர்வாகம் அரசியல் வரை விரிந்துள்ளது.

இது தவிர முன்னர் ஜப்பானின் சந்தையாக இருந்த மத்திய கிழக்கு நாடுகள். வளைகுடா யுத்தத்தின் பின் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. ஆரம்பத்தில் நீண்டகால கடனடிப்படையிலும், மலிவான விலையிலும் தனது நாட்டு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தி ஜப்பானியப் பொருட்களை சரியச் செய்ததுடன் அரச நிர்வாகத்தை கைக்குள் போட்டுக் கொண்டு படிப்படியாக ஏனைய நாட்டு உற்பத்திப் பொருட்களை விரட்டியது. அது போல சதாம் உசைன் எந்த நேரத்திலும் தாக்கலாம் என்கின்ற பீதியை தொடர்ந்தும் நீடிக்கச் செய்து அதன் காரணமாகவே தாம் பாதுகாப்பு வழங்கி வருவதாகவும், கூறியது. இரசாயன ஆயுதங்களிலிருந்து பாதுகாக்கக் கூறி அதற்கென முகமூடிக்கருவிகளை பல ஆயிரக்கணக்கான டொலர்களுக்கு சந்தைப்படுத்தியது அமெரிக்கா. பின்னர் அந்த மூகமூடிக் கவசங்கள் பழையதெனக் கூறி புதிய வகை கவசங்களை மீண்டும் பல ஆயிரக்கணக்கான டொலர்களுக்கு சந்தைப்படுத்தியது.

இதைவிட முக்கியமாக எண்ணெய் விலையை தீர்மானிக்கின்ற சக்தியாகவும் அமெரிக்கா மாறியமையை பல உலக பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்படி அமெரிக்கா வளைகுடாவில் தொடர்ந்து நிலைகொள்ள பல காரணங்கள் உண்டு. இம்முறை ஈராக் மீதான தாக்குதலை எதிர்க்க பல வளைகுடா நாடுகளுக்கு உள்ளூர அக்கறை இருந்தும் அதனை வெளிப்படுத்த இயலாத அமெரிக்காவின் பிடியில் சிக்கியுள்ளமையை பல அவதானிகள் வெளிப்படுத்தியிருந்தனர். குவைட்டிலுள்ள அமெரிக்க படைத்தளததிலிருந்தே ஏவுகணைகள் பல ஏவப்பட்டன. அது போல சவுதி அரேபிய கடல் எல்லைக்குள் இருந்து கொண்டு தான் அமெரிக்க கப்பல்கள் நிலைகொண்டு அதிலிருந்து போர் விமானங்களை செலுத்தியிருந்தன என்பது கவனிக்கத்தக்கது. இவை போரை நிறுத்தும்படி கோரியிருந்தபோதும் அமெரிக்க-பிரித்தானிய செய்கையை கண்டிக்கவில்லை என்பதற்கு ஈராக் மீதான தாக்குதலை ஆதரித்தன என்பது அர்த்தமல்ல. அது போல ஈராக்கும் குவைட், மற்றும் சவுதி அரேபிய நாடுகளின் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று எதிர்பார்த்திருந்த போதும் அது நடக்கவில்லை. இந்த விடயத்தில் ஈராக் மிகவும் நிதானமாகவே நடந்து கொண்டிருந்தது. இது ஈராக்கின் மீதான நியாயப்படுத்தலை ஊக்குவித்தன.

ஈராக் இறுதியாக தெரிவித்திருக்கின்ற கருத்தின்படி 4 நாட்கள் நடந்த தாக்குதலில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. அது தவிர தாக்கப்பட்ட இலக்குகளில் 2600 தொன் அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியம், தொலைக்காட்சி நிலையம் என்பனவும் அடங்கும். மக்கள் செறிவாக வாழ்கின்ற பகுதிகளை நோக்கியும் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதல்கள் இலக்குப் பிசகாமல் நவீன தொழில்நுட்ப சாதனங்களும் செட்டலைட் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அப்படியெனில் இவ்விலக்குகள் பற்றி தெரிந்து தான் செய்திருக்கின்றன. இதனை அமெரிக்க சீ.என்.என். தொலைக்காட்சி சேவையில் காட்டப்பட்ட காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன. ஏற்கெனவே. பொருளாதாரத்தடையால் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் பாரிய நெற்களஞ்சியங்களை நோக்கிய தாக்குதல் திட்டமிட்ட மக்கள் மற்றும் பொருள் அழிப்பைத் தவிர வேறுஒன்றுமில்லை. இத்தாக்குதல் மூலம் ஒரு வருடத்துக்கு ஈராக்கை பின்னடையச் செய்திருப்பதாக தாக்குதலை முடித்துக் கொண்ட போது அமெரிக்கா தெரிவித்தமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

இந்த இலக்குகள் எப்படி சரியாக தெரிந்திருக்கிறது? ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதனைக் குழுவுக்கு தலைமை தாங்கிய ரிச்சர்ட் பட்லர் சீ.ஐ.ஏ. உளவு ஏஜென்ட் என்றும் வீணாக ஆரம்பத்திலிருந்தே பல சிக்கல்கள் அவரால் தான் ஏற்படுத்தப்பட்டிருந்தநன என்றும், ஈராக் நிரபராதி என்பதை ஒத்துக் கொள்ள இறுதிவரை அவர் தயாராக இருக்கவில்லையென்றும் தொடர்ந்தும் புதிய, புதிய இடங்களை குறித்துக் கொண்டிருந்தார் என்றும் அவர் சீ.ஐ.ஏ.க்கான பணியை மேற்கொள்வதற்காகவே வந்தவர் என்றும் ஈராக் தரப்பில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இதனை உறுதி செய்வதைப் போலவே தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் ஈராக்கின் ஆளுங்கட்சியான அரபுபாத் சோஷலிஸ்ட் கட்சியின் அலுவலகங்களைச் சோதிக்க முயற்சித்த போதே ஆயுதப் பரிசோதனைக் குழுவுடன் பிரச்சினை எழுந்தது.

தாக்குதலை நிறுத்தியதோடு ஆரவாரங்கள் அனைத்தும் நின்றுவிட்டன. ஆனால் இந்த சண்டித்தனத்தை தைரியமாக செய்துவிட்டு மீண்டும் தேவையேற்பட்டால் தாக்குவோம் என்று எச்சரிக்கை செய்திருப்பது உலகநாடுகள் அனைத்தினதும் கையாலாகத்தனத்தை நோக்கிய அமெரிக்காவின் சவால் என்பதை சகலரும் அறிய வேண்டிய தருணம் இது.

**-கோமதி**

# யாழ்ப்பாண அபிவிருத்தி: ஒரு அழகிய கனவு !

**வலிகாமம்** வடக்குப் பிரதேசம் தற்போது அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யுப்பட்டுள்ளது.

எழுபதுகளில் வலிகாமம் வடக்கின் பொருளாதாரம் மிகச்சிறப்புற்று விளங்கியது. வலிகாமம் வடக்குப்பகுதி மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். ஏனைய தொழில்களில் ஈடுபட்டோரும் பகுதி நேரத் தொழிலாக விவசாயம் செய்து வந்தனர்.

இதனால் 1977 பொதுத்தேர்தலிலும், 1982ல் மேற்கொள்ளப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றது. 1981ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கூட சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேகடுவவே கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தார்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக இப்பகுதி மக்களில் பெரும்பாலானோரின் சீவனோபாயத் தொழில் மீன்பிடித்தொழில். மயிலிட்டியில் குறிப்பிடத்தக்க மீன்பிடித் துறைமுகம் இருந்தது. தற்போது இவர்களுக்கும் தமது தொழிலைச் செய்ய முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வலிகாமம் வடக்கு விவசாயிகளும், மீனவர்களும் தமது அன்றாடச் சீவியத்திற்கே கஷ்டமான நிலையில் முகாம்களில் தமது காலத்தை ஓட்டி வருகின்றனர்.

1990ல் வலிகாமம் வடக்கு உற்பத்தி செய்யப்பட்ட விவசாய, மீன்பிடி, கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

இவற்றைவிட வெற்றிலைச் செய்கையும், பனை உற்பத்தியும் இப்பகுதியில் சிறந்து விளங்கின.

காங்கேசன் சீமெந்து ஆலையில் மணித்தியத்திற்கு 169 மெட்ரிக் தொன் சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது. இதன்மூலம் இலங்கையின் சீமெந்துத் தேவையில் 2/3பகுதி தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருந்தது. டொலர் அலுமினியம், தொழிற்சாலை, எல்.பி.கெம் வாளித் தொழிற்சாலை, தோலகட்டி நெல்லிரச வைன் தொழிற்சாலைகள் குறிப்பிட்ட துறைகளில் இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள். அத்துடன் இத்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மிகவும் தரமானவை என்ற கணிப்பும் பெற்றிருந்தன.

ஊர்காவற்துறையில் இயங்கிவந்த படகு கட்டும் தொழிற்சாலையில் பட்குகள் பழுது பார்க்கப்பட்டன. தெல்லிப்பழையில் இயங்கி வந்த நெசவு ஆலையின் உற்பத்திகள் வட மாகாணம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன. மேலும் சவர்க்காரம், பனை உற்பத்திப் பொருட்கள் போன்றனவும் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டன. இப்போது இப்பிரதேசங்கள் காடு மண்டிக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் 'மீட்கப்பட்டு' மூன்று வருடங்களாகின்றது. மீட்பு என்பது சர்வதேசரீதியாகப் பிரச்சாரம் செய்யவே தவிர மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கல்ல என்பது தற்போது நிரூபணமாகி வருகிறது. இந்தக் காடுகள் மண்டியுள்ள இப்பிரதேசங்களின் காடுகள் அழிக்கப்பட்டு இப்பகுதி வளங்கள் பயன்படுத்தப்படுவது என்பது இப்போதைக்கு வெறும் கனவு மட்டும் தானோ?

**- எழுவான்**

| பயிர் | பரப்பளவு ஹெக்டயர் | உற்பத்தி மெ.தொன் |
|---|---|---|
| மிளகாய் | 132 | 256 |
| வெங்காயம் | 970 | 1504 |
| பம்பாய் வெங்காயம் | 04 | 40 |
| குரக்கன் | 79 | 94 |
| கடலை | 54 | 54 |
| உழுந்து | 03 | 03 |
| உருளைக்கிழங்கு | 40 | 600 |
| எள்ளு | 04 | 03 |
| மரவள்ளி | 244 | 4880 |
| புகையிலை (பீடி) | 38 | 38 |
| புகையிலை சிகரட் | 32 | 32 |
| மரக்கறிச் செய்கை | 242.75 | |
| பழச் செய்கை | 51.50 | |
| மீன் உற்பத்தி | 1325 | |

நன்றி - நூலகத்திட்டம்



# மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை அரசு தட்டிக் கழிக்கிறது !

## -மனித உரிமைகள் தலைவர் குற்றச்சாட்டு !

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதாக அரசாங்கம் நம்பிக் கொண்டிருந்தது.

இராணுவம் பெரும் நிலப்பரப்பைக் கைப்பற்றி வருவது மட்டுமல்லாமல் சர்வதேச மட்டங்களிலும் புலிகளுக்கு பலத்த அடியைக் கொடுத்து வருகிறதாக அது கூறிவருகிறது. குறிப்பாக அமெரிக்காவை புலிகளுக்குக எதிராக திருப்பியதில் தனக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளதாக அது கூறி வருகிறது.

ஆனால் வன்னி யுத்தமும் தொடர்ந்து நடந்துவரும் நிகழ்வுகளும் புலிகளைப் பற்றிய சர்வதேச அரசாங்கங்களின் மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்ய வைக்குமளவுக்கு பெருகியுள்ளன. கடந்த 11ஆம் திகதி வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கையின் மனித உரிமை நிலவரம் பற்றிய அமெரிக்க காங்கிரசின் வட்டமேசை மாநாடு இதற்கு ஒரு உதாரணமாகும்.

சர்வதேச மன்னிப்புச் சபையினை சேர்ந்த ஸ்ரீபன் நிக்காட் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த ஜெரிலுடர்ஸ் மற்றும் பல மனித உரிமை அமைப்புக்கள் அரச சார்பற்ற அமைப்புக்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டுக்கு மனித உரிமைகள் குழுத் தலைவர் ஹான்ஸ் ஹோக்ரெப் அவர்கள் தலைமை தாங்கினார்.

இலங்கையின் சமீபகால பிரச்சினை பற்றி சுருக்கமாக விளக்கிய தலைவர் ஹான்ஸ் ஹோக்ரெப் , இலங்கை அரசாங்கம் சர்வதேச மத்தியஸ்தத்திற்காக பலர் முன்வந்த போதும் அதை தட்டிக் கழித்து வருவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் தேங்கிக் கிடக்கிறது என்றும் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு வடக்கு கிழக்கில் இயங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஆசிய பசுபிக் மையத்தைச் சேர்ந்த பெண்மணியான மலேன் அவர்கள் -இவர் மிக அண்மையில் இலங்கை நிலவரம் பற்றி அறிந்துவர இங்கு வந்து சென்றவர். - தான் இலங்கையில் கண்டு வந்த தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். 1996இலும் அதன் பிறகும் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிய பயிற்சிகளின் நோக்கம் இலங்கையின் மனித உரிமைகளைப் பேணலை முன்னேற்றுவதாகும் என்று சொல்லப்பட்ட போதும் உயர் தொழில் நுட்பகரமான ஆயுதங்களைக் கொண்ட நடவடிக்கைகட்கான பயிற்சிகள், கடல் படைப்பயிற்சிகள், நீண்டதூர ரோந்து நடவடிக்கைகள் மற்றும் விமானப்படைப் பயிற்சிகள் என்பன எல்லாம் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

கிட்டத்தட்ட 550 இலங்கைத் துருப்புக்களும் 115 அமெரிக்கத் துருப்புக்களும் இன்றுவரை இக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றன. அரசியல் ரீதியாக அமெரிக்கா புலிகளை ஒரு வெளிநாட்டு பயங்கரவாதக் குழுவாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக நலன்களே இவற்றைச் செய்வதற்கான காரணமாக இருந்துள்ளது. இதை இப்போது, பெருமளவு வியாபாரப் பின்னணியுள்ள ஒருவர் இலங்கையின் உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருப்பதன் மூலம் நாம் காணலாம்.

அவர் மேலும் தனது உரையின் போது, தான் இலங்கையில் இருந்த போது அரச கட்டுப்பட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ள வைத்தியர்கள் உட்பட பலரைக் கண்டு பேசி வந்ததாகவும் கிழக்கில் இலங்கைப் படையினரால் பெருமளவுக்கு சித்திரவதைகள் நடந்து வருவதாகவும் குறிப்பிட்டார். தலையை மூடிவைத்து மூச்சு திணறவிடல், கைது செய்யப்பட்டவரை விரல்களிலோ, கால் பெருவிரலிலோ கட்டித் தொங்கவிடல், இரும்புக் கம்பிகளால் அடித்தல் என்று இந்த சித்திரவதைகள் பலவகைப்படும்.

தான் சந்தித்த பாதிக்கப்பட்ட இருவரது காதுகளுள் பென்சில் செருகப்பட்டதால் அவர்கள் செவிடாகி இருந்தார்கள் என்றும், முழங்காலில் தாக்கப்பட்டதால் அவை மூட்டுக்கழன்றிருந்தன என்றும் தெரிவித்தார். மிகவும் கடுமையான அதிகாரிகள் தொடர்ச்சியாக கிழக்குக்கு அனுப்பப்பட்டதாகவும் இலங்கையிலேயே மிகவும் அதிகமான சித்திரவதை கிழக்கிலேயே நடப்பதாகவும் தனக்கு அங்குள்ள மக்கள் தெரிவித்ததாக அவர் கூறினார்.

கிழக்கில் புலிகளால் மக்கள் கடத்திச் செல்லப்பட்ட சம்பவங்களையும் அவர் கூறினார். அவர் தான் திருகோணமலைக்குச் சென்றிருந்த போது இலங்கை அரசாங்கத்தின் படைகளின் செல் அடிகளாலும், ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டதை அறிந்ததாகவும், இராணுவத்துக்கு தகவல் கொடுத்தவர்கள் என்பதற்காக சிலர் புலிகளால் கொல்லப்பட்டார்கள் என்று தெரிய வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

250 தமிழ் குடும்பங்களை கொண்ட ஒரு கிராமத்திலிருந்து அவர்கள் உடனடியாக வெளியேறும்படி அரசாங்கப் படைகள் கேட்டிருந்தார்கள் என்றும் தாம் எதற்காக வெளியேறும்படி கேட்கப்பட்டோம் என்பதை அறியோம் என்று தெரிவித்ததாகவும் கூறினர்.

தான் அங்கு தங்கியிருந்த போது மாங்குளம் இலங்கைப் படையினரால் கைப்பற்றப்பட்டது என்றும் புலிகளின் 26 உறுப்பினர்கள் (சிறுவர்கள்) கைது செய்யப்பட்டிருந்தார்கள் என்றும் தெரிவித்த அவர், இலங்கை அரசாங்கம் அவர்களை, உள்ளூர் தொடர்பு சாதனங்களில், புகைப்படங்களுடன் பிரச்சாரப்படுத்தியதன் மூலம் மேலும் துன்புறுத்தியுள்ளது. அரசாங்கத்துடன் வேலை செய்யும் ஒரு தமிழ்க்குழுவும் இச்சிறுவர்களை தமக்காக வேலை வாங்கியிருக்கிறது.

இராணுவ நிலையங்களுக்கு அருகிலுள்ள சிறுவர்கள் அவர்களுக்காக வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். பதினொரு வயதும் ஒன்பது வயதும் நிறைந்த இரண்டு சிறுவர்கள் இரண்டு வருடங்களாக இராணுவத்திற்காக அவர்களதும் பெற்றோரதும் விருப்பத்திற்கு எதிராக வேலைசெய்விக்கப்பட்டு வந்ததை தான் அறிந்ததாகவும், பெற்றோர் பயத்தில் அவர்களை வேலைக்குப் போகவிடாமல் மறிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். மன்னாரிலிருந்து செல்லும் பஸ்களில் படையினர் மெதுவாகச் செல்லும் தமது ட்ரக் வண்டிகளில் தொடர மக்களுடன் சேர்ந்து பயணம் செய்கிறார்கள். இந்த படையணியால் 17 கிலோமீற்றர் தூரத்தைக் கடக்க 4 மணி நேரம் எடுக்கிறது.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு இயங்குவதில்லை. ஏனென்றால் மக்களுக்கு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை. தாம் அங்கு முறையிட்டாலும் எந்த லாபமும் கிடைப்பதில்லை என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். மனிதப் புதைகுழிகள் பற்றி அவர்கள் கேட்டார்கள் எங்காவது புதைகுழிகள் கண்டு பிடிக்கப்படும் போது சர்வதேச சமூகமே கொதித்தெழுகிறது. ஆனால் எமது செம்மணி விவகாரத்தில் மட்டும் எந்த உணர்வையும் சர்வதேச சமூகம் ஏன் காட்டவில்லை என்று அவர்கள் கேட்டார்கள். எனக்கு அவர்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

இவ்வாறு அவர் தனது பேச்சில் தெரிவித்தார்.

சர்வதேச மன்னிப்பு சபையைச் சேர்ந்த ஸ்ரீபன் நிக்காட் பேசுகையில் இலங்கை மிகவும் உக்கிரமான மனித உரிமைகள் வரலாற்றைக் கொண்ட ஒரு நாடு என்று தெரிவித்தார். அதில் மக்கள் காணாமல் போகும் விடயங்களில் ஈராக்குக்கு அடுத்ததாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இலங்கைப் படைகளால் சித்திரவதைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மனிதப் புதைகுழிகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் உள்ளன. செய்தித் தணிக்கை அங்கு நிலவிவருகிறது. தேர்தல்கள் பின்போடப்படுகின்றன. மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் புலிகளைச் சந்தித்து சிறுவர்களை படைக்கு எடுப்பதில்லை என்று ஒப்புதல் வாங்கியிருப்பது ஒரு முக்கியமான விடயம். சர்வதேச மன்னிப்புச்சபை மனிதப் புதைகுழிகளைத் தோண்ட அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறது. புலிகள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டதாவது, அமெரிக்கப் படைகள் இப்போது ஒன்பது நடவடிக்கைகளில் இலங்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் இலங்கைப் படையினருக்கு பயிற்சி வழங்குவதுடன் சிறிய அளவிலான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மொத்தத்தில் இந்த மாநாடு இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் தொடர்பான அக்கறையையும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முடிவை கேள்வி எழுப்புதாகவும் அமைந்ததுடன், அமெரிக்க உதவிகள் எல்லாம் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அக்கறையில் ஏற்படும் வளர்ச்சியுடன் இணைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தின.

–ராமு

# ரத்தம் ஒரே நிறம், அது பெருக்கெடுத்து ஓடியது எவ்வாறு?



**கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன** லக்பிம 19981206 தமிழில் : சி. செ. ராஜா.

குமார் பொன்னம்பலத்தை நான் இங்கிலாந்திலுள்ள கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்திலேயே சந்தித்தேன். நாங்கள் இருவரும் முழுமையாகவே இருவேறு கோணங்களிலேயே இருந்தோம். நான் தேசிய இனப்பிரச்சினை பற்றிக் காட்டிய அக்கறை காரணமாகவே அவருக்கு என்னைப் பிடித்திருந்தது. இலங்கைக்கு வந்த பிறகும் எமது நட்பை அவர் மறந்திருக்கவில்லை.

1978 ஜே. ஆரின் அரசிலமைப்புக்குக் கறுப்புக் கொடிகள் போட்டுப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, வழக்கில் சிக்குண்டிருந்த நேரத்தில் கண்டியிலுள்ள எலிபன்ட் ஹவுஸிற்கு அருகே குமாரை அவசரமாக எதிர்பாராத விதமாகக் கண்டேன். "பாகு உனது வழக்கு பற்றி ஏன் சொல்லவில்லை? உனக்காக நான் எப்பொழுதும் உள்ளேன்" எனக் குமார் சொன்னார். அதனால், அதற்குப் பிறகு எனக்கு அரசியல் வழக்குகள் வந்த போதெல்லாம் நான் குமாரைத் தேடிப்போனேன். அப்போதெல்லாம் அவர் எது விதக் கட்டணமும் இல்லாது ஆஜரானார்.

1980 ஜூலை வேலைநிறுத்த வழக்குப் பதினொரு வருடங்களாக நடந்தது. அந்தக் காலம் முழுவதுமே குமார் ஆஜராகி வழக்கைத் தகர்த்தெறிந்தார். அவர் எனக்கு உதவிக்கு வராதிருந்தால் சிலவேளை ஜே.ஆரின் அரசாங்கத்தைக் கவிழ்க்கக் கிளர்ச்சிச் சதி செய்த குற்றச்சாட்டின் கீழ் நான் சிறையில் தேங்காய் மட்டை அடித்துப் பதப்படுத்துபவராக இருக்க வேண்டியிருந்திருக்கும்.

இப்போதும், சுவரினுள் துப்பாக்கி, குண்டுகள், பிஸ்டல் போன்றவற்றை ஒழித்து வைத்திருந்ததாகக் கூறி எனக்கு எதிராக வழக்கொன்று நடக்கிறது. அதற்கும் குமார் ஒவ்வொரு நாளும் வந்து எனது விடுதலைக்காகப் போராட்டத்தை நடத்துகிறார். ஜே. ஆரால் போட முடியாமல் போன சிறைச்சாலைக்குள் சந்திரிகாவால் என்னைப் போட முடியுமென நான் நினைக்கவில்லை.

குமார் பொன்னம்பலம் சமதர்மவாதியொருவர் அல்லர். அவர் பெரும் பணக்காரர் மட்டுமன்றி முதலாளித்துவம் பற்றி நம்பும் ஒருவர். மறுபுறம் தேசிய இனப்பிரச்சினை பற்றியும் நான் குமாரின் கருத்துக்களுடன் முழுமையாக உடன்படவில்லை. ஆனாலும், குமார் என்னைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உறுதியுடன் பேசும் ஒருவராகக் கருதி வருகிறார் என்றே நான் நினைக்கிறேன்.

அண்மையில் குமார் தொலைக்காட்சியில் தெரிவித்த கருத்துக் காரணமாகப் பெரும் சர்ச்சை யொன்று ஏற்பட்டுள்ளது. ஆனால், குமார் மட்டுமல்ல: பிரபாகரனும் புதிய கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார். அது போலவே தொண்டமானும் சில விடயங்களைச் சொல்லியிருந்தார். இவை எல்லாமே ஒரே சூழலினுள் ஏற்பட்டவை என்றே நான் நினைக்கிறேன். அந்தப் புதிய சூழல் ஏற்பட்டதோ தென் பகுதி உழைக்கும் மக்களின் செயற்பாட்டுத்திறனினூடாக யுத்தம், இனவாத கூக்குரல் ஆகியவற்றை உடைத்துக் கொண்டு வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டத் தொடர்கள் என்பன ஏற்பட்டதனாலேயே.

தபால், புகையிரத, தோட்டப்புற, ரெலிகொம், வங்கி, தனியார் துறை, மின்சார சபை, தொடர்பூடகங்கள், அச்சுத் தொழிலாளர், சமுர்த்தி ஊழியர்கள் ஆகிய எல்லாத் துறைகளுமே திரும்பத் திரும்ப வீதிக்கு வந்தன.

அது மட்டுமன்றி இவ் அடிப்படையின் மீது இடதுசாரிக் கட்சிகளுக்கிடையில் கூட்டொன்று ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. இடதுசாரிக் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் வெற்றிகரமாக அமைந்தன. அவ் அடிப்படையின் மீதே புதிய இடதுசாரி முன்னணியாக நாம் புலிகள் இயக்கத்துக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்தோம்.

இடதுசாரி சக்திகளின் ஒன்று திரள்வு காரணமாக பொ.ஐ.முவினுள் உள்ள தீவிரவாதப் பிரிவுகள் உடைந்து வெளியே வரத் தொடங்கியுள்ளன. அமைச்சரவையினுள்ளேயே இடதுசாரிப் பிரிவுகள் புரள்வுறும் விதத்தில் எழத் தொடங்கியுள்ளன. மறுபுறம் தமிழ் மக்கள் மத்தியில் இடதுசாரிகள் பற்றிய புதிய நம்பிக்கையொன்று ஏற்படத் தொடங்கியுள்ளது. அதனாலேயே தமிழ் த் தலைவர்கள் பயமின்றித் தமது கருத்துக்களை. வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

புலிகள் இயக்கமும் இப் பரிமாற்றத்திலிருந்து தப்பவில்லை. அவ் இயக்கத்தினுள்ளும் இடதுசாரிகள் பற்றிப் புதிய உரையாடலொன்று எழுந்துள்ளது. வசந்தராஜா, அன்டன் பாலசிங்கம் போன்றவர்கள் இடதுசாரிகள் பற்றி நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு எதிராக நடேசன், சத்தியேந்திரா போன்றவர்களே பேசுகிறார்கள்.

ஆனாலும், தென் பகுதிகளில் இடதுசாரிகளின் எழுச்சிக்கு அதிக கோபம் உண்டாக்கும் விதத்தில் எதிராகச் செயற்படும் இனவாத அமைப்புக்கள் நடவடிக்கைகள் பற்றியும் தமிழ் மக்கள் அறிவார்கள் என்பது சந்தேகத்துக்கிடமற்றது. விசேடமாக அனுருத்த ரத்வத்த இப்போது இனவாத, யுத்தவாத சக்திகளின் தலைமை சக்தியாகிருப்பது சிறு பிள்ளை ஒன்றுக்குக் கூட விளங்கும் விடயமாகும். இவ்வாறான அபாயகரமான சதியொன்று தெற்கில் இருப்பதால் இடதுசாரிகளின் ஒன்றுபடுதலொன்றை விரும்புவதற்குப் பலரும் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் இடதுசாரிகள் பலப்பட்டுள்ளனர்.

இவ் அரசியல் சூழலுக்குள் தமிழ்த் தலைவர்களுக்கும் பயம் இல்லாது போயுள்ளது. அவ் அச்சமின்மையின் ஒரு விளைவு தான் குமார் பொன்னம்பலத்தின் பேச்சு ஆகும். இனவாதிகள் நிலை குலைந்துள்ளதால் பயமின்றிப் பேச முடியுமெனத் தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியத் தொடங்கியுள்ளது. அதேசமயம் தமது இனத்தைப்பற்றி நேரடியாகவே சொல்லி, சிங்களமக்களுடன் கூட்டு ஒன்றை ஏற்படுத்த முடியுமென்ற உணர்வொன்று ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலை பற்றி அதிக கோபத்துடன் இருப்பவர்கள் கிளிநொச்சித் தோல்வியால் இப்போது துவண்டு போயுள்ள பெரும் இனவாதிகள் மட்டுமேயாவர்.

"குமார் நீ பயப்படாதே. உனது இதயத்தில் உள்ள நெருப்பு, வேதனைகளை வெளிப்படையாகவேசொல்லு. இன்று இடதுசாரி சக்திகள் திரும்பவும் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால் 1983 போன்ற இனக்கலவரங்களை ஏற்படுத்துவது இலேசானதல்ல" என்னால் குமாருக்குச் சொல்ல வேண்டியிருப்பது இவ்வளவுமே.

இனவாத யுத்தவாத பெரும் புள்ளிகள் அமெரிக்க, இஸ்ரேலியருடன் கூடிக்குலாவிக் கொண்டிருக்கும் அதேசமயம் வைக்கோல் வீடுகளில், சேரிகளில் வயிற்றுப் பசியைத் தணிக்கத் துடிக்கும் சிங்கள இளைஞர்கள் இவர்களின் பலிப்பூசைக்குக் கழுத்தை நீட்டினர். எல்லாச் சிங்களக் கிராமத்திலும் ஒன்றில் மகன் இல்லாது தாய் அழுகிறார். அல்லது பச்சிளங் குழந்தை ஒன்றைத் தோள்களில் சுமந்தபடி புருஷன் இல்லாது அழுகிறார் பெண் ஒருவர்.

தொலைக்காட்சிகளில் "போர்வீரர்கள்" பற்றிச் சினிமாப் படக்காட்சி காட்டுகிறார்கள். முழு மக்கள் மீதும் 18வீதமான வரி சுமத்தப்பட்டிருக்கையில் பெரும் புள்ளிகள் தமது சம்பளங்களை அதிகரித்துக்கொள்ள பைத்தியக்காரத்தனமான தர்க்கங்களை முன்வைக்கின்றனர். அதற்குள்ளே தமிழர்களைக் கொல்ல

—20

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரே கேள்வியும்

**நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் அமோகமான வெற்றியை ஈட்டினீர்கள். வரலாற்றில் மிகவும் முக்கியமான வாக்குறுதிகளுக்கான மக்களது ஆணையைப் பெற்றீர்கள். கடந்த நான்காண்டுகால உங்கள் நடவடிக்கைகளை, அவை தொடங்கப்பட்ட காலமுதல் இன்றுவரை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?**

இந்த இரு பொறிகளும்( தனிச் சிங்களச் சட்டப் பொறி, அதற்கெதிரான இனத்துவ யுத்தப் பொறி) நாட்டுக்கு பொருத்தமற்றவை என்று நான் தனிப்பட்ட முறையில் உணர்ந்தேன். ஒரு அரசியல் மாணவி என்ற முறையில் நான் இந்த விடயம்பற்றி மிகவும் நெருக்கமாக நண்பர்களுடனும், அக்கறையுள்ளவர்களுடனும் நீண்ட அளவில் கலந்துரையாடவும், விவாதிக்கவும் செய்தேன். நான் எந்த சந்தேகத்துக்கும் இடமில்லாமல் இந்தப் பொறிகளிலிருநது விடுபடவேண்டும் என்று உணர்ந்தேன். நான் உணர்ந்திருந்தாலும், எனது கட்சி கொஞ்சம் உணர்ந்திருக்கவில்லை. அவர்களும் இந்தப் பொறியில் அகப்பட்டிருந்தார்கள். அவர்கள் இந்தப் பேச்சை தேர்தல் காலத்தில் பேசுவதே கூடாது என்று கருதினார்கள். அவர்கள் எல்லோரும் மற்றைய சிங்கள அடிப்படையைக் கொண்ட கட்சிகளைப் போலவே சிந்தித்தார்கள். மார்க்சியக் கட்சிகள் உட்பட இப்படித்தான் நினைத்தார்கள். ஆனால், நான் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை, நான் பிரதம மந்திரியாவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே கிராமங்களுக்கு போனவள் என்பதால், தெளிவாக உணர்ந்தேன். நான் அவர்களுடன் மணிக்கணக்கில் பேசினேன். எனது அரசியல் நேரடியான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது.



நான் இந்த இனப்பிரச்சினை தொடர்பாக எனது சிறிலங்கா மகாஜனக் கட்சிக் காலத்திலேயே பேசினேன். மக்கள் இதற்கு ஆதரவு தருவார்கள் என நான் நம்பினேன். நான் எருதை அதன் கொம்பில் பிடித்தேன். குறிப்பாக 18 மாதங்களுக்குள் நடந்த நான்கு தேர்தல்களில் நான் இதைச் செய்தேன். தெற்கு மாகாண சபைத் தேர்தலில் - தெற்கு ஒரு சிங்கள பேரினவாத சிங்கள வெறிகொண்ட பகுதியாக கருதப்படுவது - நான் தயக்கத்துடன் ஒரு சில கட்டங்களில் இதைச் செய்து பார்த்தேன். அங்கே நிறைய ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவு மேலும், மேலும் தொடர்ந்து 'கவனம். தேர்தல் நேரத்தில் இப்படி எல்லாம் பேசாதே' என்று நான் அறிவுறுத்தப்பட்டேன். ஆயினும், நாம் அங்கு மாபெரும் வெற்றியைப் பெற்றோம்.

அப்போது நான் நியாயப்படுத்தப்பட்டேன். மக்களைப்பற்றி நான் நினைத்தது சரி என்பது தெளிவானதால், அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. இது சரியானது தான். நான் இப்போதும் நம்புகிறேன். பெரும்பான்மை மக்கள் எனது பக்கத்திலேயே நிற்கிறார்கள். ஆனால், இது நீண்ட நாட்களுக்கு இழுபடுமானால், தீர்வுக்கான ஆர்வம் மக்களிடம் குறைந்துவிடும்...

**ஆம். நீங்கள் ஒரு யுத்த நிறுத்தத்திற்குப் போனீர்கள். உங்களிடம் ஒரு பெரிய ஆணை இருந்தது.**

நான் புலிகளைப்பற்றி நிறையவே படித்துவிட்டேன். அவர்கள் சமாதான உடன்பாட்டிற்கு சும்மா வந்து குதித்து விட மாட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். பிரபாகரனை ஒரு இரக்கமற்ற, மிகவும் அரிதாகக் காணக் கிடைக்கும் ஒரு தலைவனாகவே நான் காண்கிறேன். அவரை அடோல்ப் ஹிட்லருடனோ, அல்லது அவர் போன்ற ஒரு சிலருடனோ தான் நான் ஒப்பிடுவேன். ஆயினும் ஒரு தலைவர் தனியாளாக இருக்க முடியாது என்றும், அதுவும் ஒரு கெரிலா யுத்த தலைவர் அப்படி இருக்க முடியாது என்றும் நினைத்தேன். இதை எனது ஆட்களுக்கு நான் விளங்கப்படுத்தினேன். அவரது எல்லா உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் அவரைப் போலவே தலைவர்கள் அல்ல என்று நம்பினேன்.

தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பல உற்சாகமான வரவேற்பினை நான் பதவிக்கு வந்தபோது கண்டேன் - அதுவும் பிரபாகரனால் ஆளப்பட்ட யாழ்ப்பாணத்தில் இருந்து எமக்கு ஆதரவு செய்தார்கள். நான் வெறுமனே ஊகிக்கவில்லை. நாம் கண்ட மக்களது விருப்பத்தினை உணர்ந்துதான். பேசுகிறேன். பிரபாகரனுடன் இருக்கும் பல உறுப்பினர்கள் மத்தியிலும் சமாதானத்தை விரும்புகிறவர்கள் இருக்கலாம் என்று நான் புரிந்து கொண்டேன். அவர்கள் கூட ஒரு தரம் 'சிங்கள'த் தலைவர் மீது நம்பிக்கை வைத்தார்கள் என்பதை விளங்கிக் கொண்டேன். நான் வென்ற பின் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆரவாரத்தை நீங்கள் அறிவீர்கள். அங்குள்ள சாதாரண மக்கள் மற்றும் புலிகளின் உறுப்பினர்கள் மத்தியில் நான் பிரபல்யமாக இருந்தேன். இந்த ஆதரவு பலத்தின்மீது நின்று உடன்பாட்டுக்கு வருமாறு அழுத்தம் கொடுத்தேன். ஆனால், உண்மையில் பிரபாகரன் அவரது மக்களையும் உறுப்பினர்களை விடவும் பலமானவராக இருந்தார். இரண்டாவதாக முன்னொரு போதும் இல்லாதவிதத்தில் வடக்கு மக்கள் ஒரு சிங்களத் தலைவருக்கு அவ்வளவு ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்தார்கள். அந்த மக்கள் பலத்தில் நின்றேன்.

**ஆம்.**

இதனால் தான் பிரபாகரன் தனது மக்களுக்கு பல பொய்களைச் சொல்ல வேண்டி ஏற்பட்டது. அவர்களது வெளிநாடுகளிலும் பிற தொடர்புசாதன நடவடிக்கைகளிலும் எனக்கெதிராக பல பொய்களைச் சொன்னார்கள். அல்லாவிட்டால், மக்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள். எனது அடுத்த சிந்தனை இதுதான். ஒரவரை வழிக்கு கொண்டுவர முடியாது என்ற ஒரு காரணமே அரசியல் ரீதியில் அவருடன் நான் பேசமாட்டேன்' என்று சொல்வதற்கு போதுமான ஒரு காரணம் அல்ல என்று நான் நினைத்தேன். அதற்குத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். ஒரு இஸ்ரேலியருக்கு பாலஸ்தீனியருடன் ஒன்றுபட முடியுமானால், ஒரு ஐரிஸுக்கு பிரிட்டனுடன் ஒத்துப்போக முடியுமானால், ஏன் எமக்கு முடியாது என்று யோசித்தேன். ஆகவே இது ஒரு இறுதித்தடவையான முயற்சியாக - என்னைப் பொறுத்தவரை மனிதாபிமான அடிப்படையிலான இறுதி முயற்சியாக நடந்தது. பலபேர் பல நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் தொழிற்தேர்ச்சியுடன் முயன்றார்கள். ஆனால், அவை வெற்றிபெறவில்லை. இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கம் எல்லாம் எவ்வளவோ முயற்சிகளை எடுத்தது.

ஆக, நான் நினைத்தேன். ஆகக் குறைந்தது இலங்கையில் தமிழர்களின் பிரச்சினையைப் புரிந்துகொள்கிற, மனிதாபிமான அடிப்படை கொண்ட ஒரு அரசாங்கம் உள்ளது என்றாவது இந்த மனிதனுக்கு உணர்த்துவோம் என்று நினைத்தேன். அதைத்தான் நான் செய்ய முயன்றேன். அதுதான் முதல்கட்டம் உறைந்த பனிக்கட்டியை உடைப்பது, உடைந்துபோன இருபகுதியை இணைக்கும் பாலத்தைக் கட்டுவது. இருபக்கங்கள் என்பது இலங்கை அரசாங்கமும் புலிகளும். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்குமிடையில், பிரச்சினை

## "அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது ஒரு மாபெரும் வெற்றியும், புலிகளுக்கு ஒரு மாபெரும் படுதோல்வியுமாகும்."

இருக்கவில்லை. நாம் நேர்மையாக இருக்கும்வரை அப்படி இருக்காது என்று எனக்குத் தெரியும். அதனால்தான் முதலாவது அணியை அனுப்பினேன். அந்த அணிக்கு நான் தெளிவாகக் கூறிவிட்டிருந்தேன். இது 'முதலாவது கட்டம்', இரண்டாவது கட்டம் இன்னும் தொழிற் தேர்ச்சியுடையதாக, அரசியல் தன்மைவாய்ந்த அணி போவதாக அமையும். அவர்கள் அரசியல் தீர்வு பற்றிப் பேசவிரும்பினால் - என்று கூறியிருந்தேன். இந்த முதலாவது அணி வெறுமனே நிலைமையைப் பார்த்து வரவும், நட்பை கட்டியெழுப்பவுமே அனுப்பட்டது. என்னிடம் நானும் பிரபாகரனும் எழுதிக்கொண்ட 42 கடிதங்களும் இருக்கின்றன. 42 அல்லர் 43. அவற்றை விரைவில்வெளியிட உள்ளேன்.

**பிரபாகரனின் மாவீரர் தினப்பேச்சை படித்தேன். அதில் அவர் தாம் சமாதானப் பேச்சுக்கு தயார் என்று கூறுகிறார். 'சமாதானப்பேச்சு' என்ற சொல்லை அவர் பயன்படுத்துகிறார். அரசியல் பேச்சுவார்த்தைக்கு இந்தச் சமாதானப்பேச்சு வழிசமைப்பதாக அமையும் என்பது அவரது கருத்து. சமாதானப்பேச்சுக்கு அவர் எந்த நிபந்தனைகளையும் தாம் முன்வைக்கப்போவதில்லையென்றும் ஆனால், சூழ்நிலை அப்படி ஒரு பேச்சை நடாத்துவதற்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அதைப்படிக்கும்போது, யாழ் மீதான கட்டுப்பாட்டில் சில விட்டுக்கொடுப்புக்களை நீங்கள் செய்யவேண்டும். (அவர்கள் அதை ஆக்கிரமிப்பு என்கின்றனர்) பொருளாதார தடையில் சில விட்டுக்கொடுப்புக்களை செய்யவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை அது வெளிப்படுத்துவதாகத் தெரிகிறது. புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு சர்வதேச மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்தின் முத்தியில் பேசத் தயார் என்று அவர் சொல்கிறார். ஏனென்றால், அவர்களுக்கு சிங்கள தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை இல்லையென்று அவர் விளக்குகிறார். இது நீங்கள் சொன்னதற்குப் பதிலாக வருகிறது. நீங்கள் ஒரு அரசியல் தீர்வுக்குப் போகத் தயாராக இருப்பதை வெளிப்படுத்தி வந்திருக்கறீர்கள் இதற்கு உங்கள் பதில் என்ன?**

நான் சொன்னதுபோலவே, புலிகள் எந்தவிதமான காரணங்களும் இன்றி சமாதானப்பேச்சை உடைத்த அக்கணத்திலிருந்து எமது நிலைப்பாடு ஒன்றாகவே தான் உள்ளது. அது மாறவில்லை. நாம் பேச விரும்புகிறோம். ஏனென்றால், எனக்கு இது யுத்ததால் தீர்க்கப்படுவதில் விருப்பமில்லை. நாங்கள் ஒரு இராணுவ அரசாங்கம் போன்ற ஒரு அரசாங்கம் அல்ல. நாம் இதை அரசியல்ரீதியாகவே தீர்க்க விரும்புகிறோம் என்பதுடன், அதில் உறுதியாகவும் இருக்கிறோம். இந்தக் கட்டத்தில் நாம் கலந்துரையாட விரும்புகிறோம். எங்களுக்கு மத்தியஸ்தம் தேவையில்லை. எங்களுக்கு வெளிநாட்டைச் சேர்ந்த மூன்றாம் மட்ட ஒழுங்குப்படுத்தல் மட்டும் போதும். இதற்குப் பலர் முன் வந்திருக்கிறார்கள். எம்மால் அவர்களுள் ஒருவரைத் தெரிவுசெய்ய முடியும்.

**அது ஒரு பொறுப்புள்ள அலுவலக செயற்பாட்டை கொண்டதாக இருக்குமா?**

கிட்டதட்ட அப்படித்தான். அத்துடன் நாம் நிறைய முன்நிபந்தனைகள் போடப்படாமல் அப்பேச்சு அமைவதையே விரும்புகிறோம்- நான் சொன்னதுபோல ஒரே ஒரு நிபந்தனை தவிர. அதாவது ஒரு மட்டுப்படுத்தப்பட்டநேர அட்டவணையுள் நாம் சமாதானப்பேச்சுக்கான தொடக்கத்தைப்பற்றிய முடிவுக்கு வரவேண்டும். அல்லாவிட்டால் புலிகள் தாம் மற்றைய காலங்களில் செய்த அதே வேலைகளைச் செய்வார்கள். அதாவது தம்மை இராணுவ ரீதியாக பலப்படுத்தும் வரை பேச்சுவார்த்தையை இழுத்தடித்துக் கொண்டு போவதும் அதன் பிறகு தாக்குவதும் என்ற செயற்பாட்டில் இறங்குவார்கள். எனவே நாம் ஓரளவுக்கு இறுக்கமான ஒரு நேர அட்டவணையைக் கொண்டிருக்க விரும்புகிறோம். அதைவிட வேறெந்த நிபந்தனைகளையும் நாம் கேட்கவுமில்லை. உண்மையில், இன்னொன்றும் அங்கே உள்ளது. அதாவது இந்த நாட்டின் ஒற்றுமை (Unity) பேச்சுவார்த்தைக்கு அப்பாற்பட்டதாகும்.

**ஆம், ஒற்றைத்தன்மை அல்ல, ஒற்றுமைத்தன்மை.**

→

நன்றி - நூலகத்திட்டம்



ஆம். ஒற்றுமைத்தன்மை. ஒற்றைத்தன்மை அல்ல. (Unitary not Unity)

**இந்தக்கேள்வி இராணுவ சமநிலை பற்றியது. 1995 இல் யுத்தம் தொடங்கிய பின்னரான சமநிமைபற்றியது. இந்தக் கேள்வியை உங்கள் அரசியல் எதிராளியிடமும் நான் கேட்டேன் புலிகள் பலமானவர்களாகவா அல்லது பலவீனமற்றவர்களாகவா இப்போது இருக்கிறார்கள்? சிலர் சொல்கிறார்கள். முன்பைவிட பலமாக இருக்கிறார்கள் என்று. பலர் அரசாங்கம் முன்னேறியிருக்கிறது புலிகள் பலவீனமுற்று விட்டார்கள் என்கிறார்கள். ஜனாதிபதி அவர்களே நீங்கள் இதை அதிகம் அறிவீர்கள்.**

நேர்மையாகச் சொல்வதானால், புலிகள் மிகமிகப் பலவீனமடைந்து விட்டார்கள். 1994 ஐ.தே.க அரசாங்கத்திடமிருந்து நாம் ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்ட போது புலிகள் வட மாகாணத்தை முழுக்க முழுக்க தமது ஆட்சியின் கீழ் கொண்டிருந்தார்கள். ஒரு சில சிறிய இராணுவ முகாம்கள் அங்கும் இங்கும் இருந்ததைத் தவிர புலிகளிடமே அதிகாரம் இருந்தது. இராணுவம் தம்மை இராணுவ முகாம்களுக்குள் சிறைப்படுத்திக் கொண்டிருந்தது. அது வெளியே வருவதில்லை. பலாலியில் இருந்தவர்கள் தண்ணீர் எடுப்பதற்கு வெளியே போவதற்கு புலிகளுடன் தொடர்பு கொண்டுபோய் எடுத்துவர வேண்டிய நிலை இருந்தது. இந்த நிலைமை தொடர்ந்து நடந்து வந்ததை நாம் கண்டோம். அது முழுக்க முழுக்க அவர்களது கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

நாம் முழுக்க யாழ். குடாநாட்டையும், மன்னாரின் சில பகுதிகளையும் எடுத்துக் கொண்டோம். தெற்றிலிருந்து வடக்கிற்கு இரண்டு பிரதான பாதைகள் செல்கின்றன. மன்னாரூடாகச் செல்லும் பாதையை நாம் முழுதாகக் கைப்பற்றி விட்டோம். நேரடியாக யாழ்ப்பாணம் போகும் பாதையில் 2/3பங்கை நாம் பிடித்து விட்டோம். அவர்கள் பல உறுப்பினர்களை இழந்து விட்டன்ர். பௌதீகரீதியாக அவர்களது பலம் மிகவும் குன்றிவிட்டது. அரசியல் ரீதியாகவும், தமது மக்களை இழந்துவிட்டிருப்பதால், அவர்கள் பலவீனமாகிவிட்டார்கள். வடக்கு மாகாணத்திலிருந்த 85 வீதமான மக்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருக்கிறார்கள். இவர்கள் எமக்கு உதவுகிறார்கள். உங்கள் பத்திரிகையின் செய்தியாளர்கள் அங்குபோய்வந்து சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நாம் இப்போது புலிகளுடன் இருந்ததைவிட மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். ஆனாலும், இன்னும் வழமைக்கு திரும்ப நிறைய மாற வேண்டி இருக்கிறது.


புலிகளுடைய புண்ணியத்தால் அங்கு அபிவிருத்தி வேலைகளை ஆறுதலாகவே செய்யவேண்டியுள்ளது. அங்கு அவை நடக்க அவர்கள் விடுவதில்லை. அங்கும் இங்குமாக அவர்கள் வெடிகுண்டுகளை வைக்கிறார்கள். இதனால், இந்நடவடிக்கைகள் தாமதிக்கின்றன. அவர்கள் மக்களை மிரட்டுகிறார்கள். இரண்டு மேயர்களைக் கொன்று விட்டார்கள். நாம் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பிறகு சிறப்பான முறையில் வேலைகளைத் தொடங்கினோம். அவர்கள் இந்த வழமைக்கு திரும்பும் நடவடிக்கைகளைக் குழப்பிக்கொண்டே இருப்பதால், நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும், இதை மிகவும் ஆறுதலாகவே செய்ய வேண்டியுள்ளது. யாழ்ப்பாண மக்களுக்கான எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் இப்படித்தான் தாமதிக்கின்றன. அந்த மக்கள் வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு இப்படிக் கூறியுள்ளார்கள். 'தயவு செய்து புலிகளைத் திரும்ப வரவிடாதீர்கள். புலிகளைவிட இராணுவத்தின் கீழ் இருப்பதையே நாம் விரும்புகிறோம்'

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது ஒரு மாபெரும் வெற்றியும், புலிகளுக்கு ஒரு மாபெரும் படுதோல்வியுமாகும். அவர்கள் தமக்கு உறுப்பினர்களைத் திரட்ட கஸ்டப்படுகிறார்கள். நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர்கள் பிள்ளைகளை பெற்றோர்களிட மிருந்து பிடுங்கிச் செல்கிறார்கள். பெற்றோர்கள் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

□

# இரு வேறு பதில்களும்

**"புலிகள் பலமாக உள்ளார்கள் என்றே நான் சொல்வேன். அவர்கள் இப்போது மரபுமுறை யுத்தத்தை நடத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள்"**



**ராம்:** ரணில் விக்கிரமசிங்க அவர்களே, நாட்டின் இன்றைய நிலைமை பற்றிய ஒரு ஒட்டு மொத்த மதிப்பீட்டை உங்களால் தர முடியுமா? முதலில் இனப்பிரச்சினை தொடர்பாக நடக்கும் யுத்த நிலமை, அடுத்து இனப்பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்டு வரும் அரசியல் முன்னெடுப்புக்கள்

**ரணில்:** ஒட்டுமொத்தமான ஒரு கருத்தைச் சொல்வதானால் அரசாங்கம் எல்லா முனைகளிலும் இறுகிப் போய் இருக்கிறது. புலிகளை ஒடுக்குவதற்காக ஜயசிக்குறு என்ற பெயரில் அரசாங்கம் ஒரு நடவடிக்கையைத் தொடர்கிறது. கிளிநொச்சியைக் கைப்பற்றுவது அதன் நோக்கமாக இருந்தது. ஆனால் கிளிநொச்சி இப்போது புலிகளின் கையில் இருக்கிறது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது லெனின் கிரர்ட் முற்றுகையிடப்பட்ட பின்னான இராணுவ நடவடிக்கை வரலாற்றிலேயே மிகவும் பெருமளவு பொருட்செலவுடன் நடாத்தப்பட்டதும் மிக நீண்ட காலமாக நடந்து வருவதுமான ஒரு நடவடிக்கை இதுவாகும். ஆனால் என்ன நடந்ததென்றால் ஒன்றன்பின் ஒன்றாகப் பின்னடைவுகளே ஏற்பட்டன.

இராணுவம் பரவலாக்கப்பட்ட போதும் அரசாங்கம் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை. அவர்களால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை விட்டுவிடவோ அல்லது பலப்படுத்திக் கொள்ளவோ முடியவில்லை. அரசியல் ரீதியாக இது அரசாங்கத்துக்கு ஒரு பின்னடைவே.

இந்த யுத்தத்தின் நோக்கம் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதும் அதன்பின் தீர்வுப் பொதிமூலம் அவர்களை அரசியல் ரீதியாக ஒதுக்குவதும் ஆகும். இதனால் தீர்வுப் பொதியை முன்கொண்டுவர முடியவில்லை. புலிகள் மிகவும் வேகமாக செயற்பட்டார்கள். தீர்வுப் பொதியும் தெற்கில் பல எதிர்பார்ப்புக்களை எதிர்நோக்கியது. இன்றைய முன்மொழிவுகளை பெரும்பான்மை எதிர்ப்பதனால் அரசுக்கு எந்தப் [illegible]ியும் இல்லாத நிலையே இருக்கிறது. எல்லா வளங்களையும் ஒன்று குவித்து யுத்தத்தை ஓராண்டில் வெல்லுவது என்ற திட்டமும் கூடத் தோற்றுவிட்டது என்றே நாம் நம்புகிறோம். பொருளாதாரம் சிதைந்து கொண்டிருக்கிறது. நாம் மூன்று வழிகளில் அழுத்தத்தை எதிர் கொள்கிறோம். எமக்கு மூன்று பகுதிகளில் பிரச்சினைகள் இருக்கின்றன.

முதலாவதாக அரசாங்கத்துக்கு பொருளாதாரத்தை முறையாக முகாமைத்துவப்படுத்த முடியவில்லை. அத்துடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் அது இழந்து விட்டது. இரண்டாவதாக வளங்கள் யுத்தத்திற்காக வீணாக்கப்படுவதால் தனியார் துறையை விருத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மூன்றாவதாக நாம் எமது ஏற்றுமதியை பாதிக்கும் ஆசிய நெருக்கடிக்கு எம்மைத் தயார்படுத்தவில்லை. இது அரசாங்கத்தை மிகவும் நெருக்கடியான ஒரு ஸ்தம்பித நிலையில் கொண்டு வந்து விட்டுள்ளது. தாம் எங்கே போகிறோம் என்பதை அவர் முடிவு செய்ய வேண்டும்.

**ராம்:** புலிகளின் தலைவர் பிரபாகரனது மாவீரர் தினப் பேச்சு பரவலான பிரசித்தம் பெற்றிருக்கிறது. அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**ரணில்:** இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அது முன்னைய பேச்சுக்களை விட வித்தியாசமானது. இது உண்மையில் வடக்கிலுள்ளவர்களை விட தெற்கில் உள்ளவர்களை நோக்கி பேசப்பட்ட ஒரு பேச்சாகவே தோன்றுகிறது. இலங்கை என்ற ஒரு நாட்டில் ஒரு தீர்வைக் காண்பது பற்றி அது பேசுகிறது. எல்லா முயற்சிகளும் சரிவராத பட்சத்தில் புலிகள் ஒரு சுதந்திர ஈழத்திற்காக போராடுவதால் நீங்கள் குறைகாண முடியாது என்று அது எச்சரிக்கவும் செய்கிறது. முதன் முதலாக பிரபாகரன் ஸ்ரீலங்காவை ஒரு பௌத்த நாடு என்று அங்கீகரித்து தெரிவித்துள்ளார். இதெல்லாம் அவர்கள் ஒரு பேச்சுவார்த்தையை விரும்புகிறார்கள் என்ற சமிக்ஞையைத் தருகிறது. அவர்கள் ஒரு அரசியல் தீர்வை விரும்புகிறார்கள் என்று தெரிவிக்கிறது. ஒரு விதத்தில் அரசியல் முன்முயற்சியை பிரபாகரன் அரசாங்கத்திடம் இருந்து தன் கையில் எடுத்துள்ளார் என்று சொல்லலாம் கடந்த ஆண்டு மே மாதத்திலிருந்து, அரசாங்கம் இரு தரப்பு கடிதப் பரிமாற்றத்தை மேற்கொண்டது முதல் இன்றுவரை முன்முயற்சி அரசாங்கத்திடமே இருந்தது. இப்போது பிரபாகரன் அதை தான் அரசாங்கத்திடமிருந்து எடுத்துள்ளார். இராணுவ முன்முயற்சியை தன் கையில் எடுத்ததைப் போலவே. இந்த நிலையை அரசாங்கம் சரியாக எதிர் கொள்ளாவிடில் அவர்கள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும்.

**ராம்:** பிரபாகரன் சமரசப் பேச்சுத் தொடர்பாகப் பேசவிரும்புவதாகத் தெரியவில்லை. அவர் அர்த்தமுள்ள ஒரு சமரசப் பேச்சுக்கு முன் செய்யப்பட வேண்டியன பற்றியே பேச விரும்புகிறார் என்பது பற்றி... அந்த நிலைப்பாடு மாறும் என நினைக்கிறீர்களா?

**ரணில்:** நல்லது, அதெல்லாம் அரசாங்கம் ஒரு நல்ல முடிவைத் தரக்கூடிய கால அட்டவணையை முன்வைப்பதில் தான் தங்கியுள்ளது. அல்லது பேச்சு முடிவற்றதாக அமைந்து விடும். இறுதியாக நடந்த சந்தர்ப்பத்தின் போது அவர்கள் புலிகளுடன் பேச அனுபவமற்ற ஒரு குழுவை அனுப்பினார்கள். புலிகளின் குழு அனுபவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. அந்தப் பேச்சில் பங்கு பற்றிய சிலர் முன்பு இலங்கை அரசாங்கத்துடனும் இந்திய அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள். ஆனால் அரசாங்கத் தரப்பில் எந்தவிதமான சமரசப் பேச்சிலும் அனுபவப்படாதவர்கள். இது மிகவும் அடிப்படையான ஒரு தவறு என நான் நினைக்கிறேன்.

இரண்டாவதாக (முன்னைய பேச்சின் போது) தான் பேச்சிலிருந்து விலகிக் கொள்வதாக பிரபாகரன் அறிவித்திருந்தார். ஜனாதிபதி குமாரதுங்க இதைக் கவனத்தில் எடுக்கவில்லை. கவனித்திருந்தால் அவர்கள் தம்மை தயார்படுத்தி இருக்கலாம். உண்மையில் இந்த விடயம் மிகவும் தேர்ச்சியற்ற விதத்தில் கையாளப்பட்டது. தமது கடந்தகால தவறுகளிலிருந்து கற்றுக் கொள்வதற்கான ஆற்றலில் தான் எல்லாம் தங்கியிருக்கிறது. இதுவரை ஜனாதிபதி குமாரதுங்க தான் கடந்த கால தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ளத் தயாரில்லை என்றே காட்டி வந்துள்ளார்.

**ராம்:** 1995இல் பேச்சுவார்த்தை முறிவடைந்த பின் நாம் பல இராணுவ நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு காலத்தைக் கடந்து வந்துள்ளோம். புலிகள் அப்போது இருந்ததைவிட பலமாகவோ பலவீனமாக அல்லது அதே நிலையிலா இருக்கிறார்கள் என்று சொல்வீர்களா?

**ரணில்:** புலிகள் பலமாக உள்ளார்கள் என்றே நான் சொல்வேன். அவர்கள் இப்போது மரபுமுறை யுத்தத்தை நடத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள், ஒரு பிரதேச அளவில் அவர்களுக்கு அந்த ஆற்றல் முன்பு இருக்கவில்லை. பூநகரி மீதான தாக்குதலிலும் அவர்கள் வெற்றி பெறவில்லை. ஏனென்றால் அவர்கள் தமது துருப்புகளை பட்டேலியன் வடிவில் அப்போது குவித்திருக்கவில்லை. ஆனால் அந்த நிலமை இப்போது இல்லை முல்லைத்தீவு, கிளிநொச்சியில் அவர்கள் பெற்ற வெற்றிகள் எல்லாவிதமான கணிப்பீட்டிலும் மாபெரும் வெற்றிகளே. ஏனென்றால் இவை புலிகளை சர்வதேச மட்டத்தில் மிகவும் சக்திவாய்ந்த ஒரு கெரில்லா அணி என்று அங்கீகரிக்க வைத்துள்ளன. இவையெல்லாம் அளவுக்கு அதிகமாக நாம் எமது சக்திகளை பரவலாக்கியலாதாகும். அத்துடன் புலிகளை நாம் தமது கெரில்லாக் குழுக்களை கொண்டு சிறிய இடங்களில் குவியப்படுத்தி செயற்பட அனுமதித்து விட்டோம். இந்த இடத்தில் நாம் எமது இராணுவத் தந்திரோபாயத்தைத் தலை கீழாக்கி விட்டிருக்கிறோம்.

ஐ.தே.க.வின் இறுதிக் கட்டத்தில் நாம் புலிகளை மூன்று இடங்களில் வைத்திருந்தோம். அவர்கள் வன்னிக் காடுகளில் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. அத்துடன் அவர்கள் கிழக்கில் தமது நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. அதேவேளை அரசாங்கம் கிழக்கில் தனது கவனத்தைக் குவித்திருந்தது. இப்போது நிலைமை மாறியுள்ளது. நாம் எல்லா இடமும் உள்ளோம். ஆனால் புலிகளின் பிரதான சக்தி முல்லைத்தீவில் உள்ளது.

**ராம்:** இராணுவ நடவடிக்கைகளுக்கு அரசியல் வழிகாட்டல் இருந்திருக்கிறதா? அல்லது அரசியல் தலையீடு என்று சொல்வீர்களா? இதுவிடயத்தில் அரசியல் தலைமைத்துவத்தின் பங்கை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**ரணில்:** இராணுவ நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் இருந்திருக்கின்றன. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இராணுவ நடவடிக்கையைப் பொறுப்பெடுத்திருக்கிறார். தங்கள் கருத்தை வெளிப்டையாகக் கூறிய தொழில்சார் இராணுவ அதிகாரிகள் இராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அல்லது இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் தான் முன்னர் நல்ல பயனைத் தந்தவர்கள். பிராந்தியங்களை வெல்வதற்காக படைவீரர்களை தியாகம் செய்யும் கொள்கை பலனளிக்கவில்லை. இது இராணுவத்துக்குள்ளேயே முறுகல் நிலையைக் கொண்டு வந்துள்ளது. இந்த நிலைமை தரையில் மாத்திரமல்ல கடந்த மூன்று வருடங்களாக திருமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையிலான கடல் மார்க்கப் பாதையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆற்றலை புலிகள் வெளிப்படுத்தியுள்ளனர். முதற்தடவையாக இப்போது அவர்கள் சில வானூர்திகளையும் வாங்கியுள்ளார்கள்.

இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட தளபாடங்களைப் பயன்படுத்தி கவச வாகனப் பிரிவு, பீரங்கிப் பிரிவு என்பவற்றையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள் 1983 முதல் 1994 வரை [illegible] 6000 முதல் 7000 வரை படையினர் பலியானார்கள். அதேவேளை கடந்த நான்கு வருடத்திலும் சுமார் 11,500 படையினரும் பலியாகியுள்ளனர்.

□

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டாவுக்கு எதிராக ஐ.தே.கவும் பொ.ஐ.முவும்

– சிமியோன்

தோட்டத்துறை உள்ளகக் கட்டமைப்புக்கான பிரத்தியேகமான அமைச்சொன்றை கடந்த ஆண்டு பொ.ஐ.மு. அரசாங்கம் தாபித்தது. அதன் அமைச்சராகத் தொண்டமான் நியமிக்கப்பட்டார். இவ்வமைச்சுக்கான 1999 ஆண்டுக்கான நி ஒதுக்கீடு, குழு நிலை விவாதத்தில் பட்டுள்ளது.

முரண்நகை என்னவென்றால் அரசாங்கத் தரப்பில் 16 பேரும், ஐ.தே.க. தரப்பில் 34 பேரும் தான் இதன் போது சபையில் இருந்துள்ளனர். தான் கொண்டு வந்த திருத்தத்தை ஏற்காமையால் வாக்கெடுப்பு நடாத்தக் கோரியதாக ஐ.தே.கவும், ஐ.தே.க. தனது இனவாத முகத்தைக் காட்டிவிட்டதாக ஆளுங்கட்சியும் ஒப்பாரி வைக்கின்றன.

மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் சென்றவர்கள் தமது தொழில்களிலும், களியாட்டங்களிலும் ஈடுபட்டுக் கொண்டு எப்போதாவது பாராளுமன்றம் செல்லும் நடைமுறையைக் கொண்டிருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. தோட்டத்துறை உள்ளகக் கட்டமைப்பு அமைச்சின் கீழான நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை இல. 510 குழு நிலையில் விவாதிக்கப்பட்ட போது, ஆளும் பொ.ஐ.முவில் 12 உறுப்பினர்களும், அரச ஆதரிப்பு தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் ஐவரும் மட்டுமே சபையிலிருந்துள்ளனர். மலையக மக்கள் சார்பான 10 பா.உறுப்பினர்களில் எஸ். சதாசிவமும், ஆர். இராஜரட்ணமும் மட்டுமே பிரசன்னமாகியிருந்துள்ளனர். வாக்கெடுப்பில் பிரேரணை தோற்றமைக்கு ஐ.தே.க. இனவாதம் மட்டுமன்றி ஆளும் பொ.ஐ.முயின் உறுப்பினர்களின் அக்கறையீனமும் புறக்கணிப்பும் கூட காரணமாகியிருக்கின்றது என்பதனை வசதியாக மறந்துவிட முடியாது. அது மட்டுமன்றி இ.தொ.கா. உறுப்பினர்களும் கூட இத்தோல்விக்கு காரணமாவர். தமது அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொள்ளாத ஆளும்கட்சி உறுப்பினர்கள் தமது அக்கறையீனத்தை மூடிமறைத்து, வெறுமனே ஐ.தே.கவை மட்டும் குற்றம் சுமத்துகின்றனா.

இலங்கையின் வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு நிதி ஒதுக்கீட்டு பிரேரணை ஒன்று குழு நிலை விவாதத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டதோடு அது தோற்கடிக்கவும் பட்டமை இதுவே முதற்தடவையாகும். இதன் பின்னர் ஐ.தே.கவினரும், பேரினவாத பத்திரிகைகள் சிலவும் தொண்டமான் பதவி விலக வேண்டும் என கூக்குரலிடத் தொடங்கியுள்ளனர். "தான் சாகும் வரை அமைச்சராகவே இருப்பேன்" எனக் கூறிக் கொண்டு அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்ட தொண்டமான் அவர்கள் பதவி விலகப் போவதில்லை என்பதோடு,தனக்கு யாரும் பாடம் புகட்டுவதற்குரிய காலம் கடந்து விட்டது எனவும் தனது மக்கள் சார்பான இலக்குகளை அடைவதற்கு தேவையான பொறுப்புணர்ச்சியும், புத்திக்கூர்மையும் இயலளவும் தனக்குண்டு எனவும் சாட்டையடி கொடுத்திருக்கின்றார்.

இலங்கை வரலாற்றில் ஐ.தே.கவினரின் இனவாத வரலாற்றுக்கு ஐம்பதாண்டுகள் பூர்த்தியடைந்து விட்டது. ஒவ்வொரு தருணத்திலும் மலையகத் தமிழரின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு ஆட்சிபீடம் ஏறுவதும், ஆட்சியைக் கைப்பற்றியவுடன் அவர்களின் முதுகிலேயே சவாரி செய்வதும் ஐ.தே.கவுக்கு மட்டும் அல்ல, ஸ்ரீ.ல.சு.கவுக்கும் கைவந்த கலையாகவே இருந்து வந்திருக்கின்றது.

தோட்டத்துறை உள்ளகக் கட்டமைப்பு அமைச்சின் அதிகார வரம்பிற்குட்படாத பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து, முறைகேடான முறையில் அதனை ஏற்கக்கோரி பிரேரணையைத் தோற்கடித்தமை ஐ.தே.கவின் இனவாதமே என்கிறார் சதாசிவம் எம்.பி. மேலும் குப்பிலாம்பில் இருந்து மின்னொளி பெறவும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தவும் இவ்வமைச்சு முயன்றதாகவும் கூறியுள்ளார்.

எனினும் இவ்வமைச்சு மலையகத் தமிழருக்கு ஏதும் அற்புதங்கள் செய்து விடவில்லை. கட்சி ஆதரவாளர்களுக்கு கொந்தராத்து கொடுப்பதற்கு மட்டுமே இதுவரை பயன்பட்டுவந்துள்ளது என்பது இ.தொ.கதவை எதிர்க்கும் மற்றைய மலையகக் கட்சிகளின் அபிப்பிராயமாக உள்ளது.

எனினும், தொடங்கப்பட்டுள்ள கலாசார நிலையங்கள், வாசிகசாலைகள், மின்விநியோகத் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் என்பன முறையாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் 50 ஆண்டுகால பொருளாதார புறக்கணிப்புகளில் இருந்து விடுபட மலையகத் தமிழருக்கு அது ஒரு திறவுகோலாக அமைய முடியும் என்பது இ.தொ.கா சார்பானவர்களின் கருத்தாக இருக்கிறது.

வீடமைப்பு, சுகாதார வசதிகள், கல்வி, போக்குவரத்து தொடர்பாடல், அஞ்சல் தொடர்பு என்பன விருத்தி செய்யப்படுவது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்கு மிக முக்கியமானதாகும்.

ஆனால், கடந்த இரண்டாண்டு கால தோட்டத்துறை உள்ளகக் கட்டமைப்பு அமைச்சின் நடவடிக்கைகள் போதுமானதாகவோ, திட்டமிடப்பட்டதாகவோ இல்லாத அதேவேளை, அதன் வினைதிறனை வெளிக்காட்டப் போதிய கால அவகாசமின்றி நிதிஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டமை மலையகமக்கள் எதிர்கொள்ளும் பேரினவாத நெருக்கடிக்கு ஒரு சான்றாகும்.

ஆக, இரத்தினபுரியிலும், பசறையிலும், ஆளும் தரப்பு நடந்து கொண்ட முறையும், குழுநிலை விவாதத்தில் ஐ.தே.க. நடந்து கொண்ட முறையும் ஒன்று தான். அதன் அரசியல் விதிமுறையும் ஒன்று தான். ஒன்று விட்டுப் பிடிப்பது. மற்றது விடாமலேயே தடுப்பது.

இதனை எதிர்கொண்ட ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் வழமை போலவே தமது இனவாத முகத்தையே வெளிக்காட்டியுள்ளன. ஐலன்ட் பத்திரிகை, ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் அமைச்சு மீதான நிதி ஒதுகீட்டை தோற்கடித்த அமைச்சர் தொண்டமான் தானே தோற்றுப் போனார் எனவும், அவர் பதவி விலக வேண்டும் எனவும் கோரியுள்ளது.

பேரினவாத சித்தாந்த பிடியில் சிக்குண்டு போயுள்ள கட்சிகள், பத்திரிகைகள், மதகுருமார் ஆகியோர் மலையக தமிழர்கள் ஒரு சுய கௌரவமுள்ள சமூக சக்தியாக வளர்ச்சியடைவதை ஜீரணிக்க முடியாதவர்களாக இருப்பதனையே நடைபெறுகின்ற சம்பவங்கள் காட்டுகின்றன. மலையக தமிழ் மக்கள் வழிநடத்தும் சமூக சக்திகள் தேவையான முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியமானதாகும்.

# வேவல்வத்தை வன்முறைகள் : சாம்பல் பூத்த மேடுகளுள்ளிருந்து நெருப்பு?

– பிரம்மபுத்திரன்

இரத்தினபுரி தோட்டங்களான வேவல்வத்தை, ராசாகலை, ஏக்கஸ்லேன்ட், வெல்லாவல, திக்குமுக்கலான, கலபொட உட்பட 20 தோட்டங்களில் இனவெறியாட்டம் நடத்தப்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்டன.

484 லயன் குடியிருப்புக்கள் தீக்கிரையாக்கப்பட்டதோடு பலகோடி ரூபா பெறுமதியான தொழிலாளர்களின் உடமைகளும் சூறையாடப்பட்டு விட்டன. செய்வதறியாது திகைப்புற்ற நிலையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு போதுமான நிவாரணமோ, பாதுகாப்போ அரசாங்கத்தால் இதுவரை வழங்கப்படாத அதேவேளை, வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் எவருமே இதுவரை கைது செய்யப்படவுமில்லை.

பேரினவாத பத்திரிகைகள், அரச நிறுவனங்களான பொலிஸ், நீதிமன்றம், போக்குவரத்துத் துறை, அஞ்சல்சேவை, தோட்டநிர்வாகம், வைத்திய நிலையங்கள் என்பன கூட்டாக அங்கு வாழும் தமிழ் மக்களை நெருக்குவதில் ஈடுபட்டிருப்பதனை, மூன்று மாதத்தின் பின்னர் அங்கு சென்ற போது மீண்டும் காண நேர்ந்துள்ளது.

வன்முறையிலீடுபட்ட குற்றவாளிகளில் ஐந்து பேரைக் கைது செய்து, உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்த பொலிசாரும், நீதிமன்றமும் அப்பாவித் தொழிலாளர்களை 70 நாட்கள் தடுத்து வைத்து துன்புறுத்தியுள்ளது. வன்முறை வடுக்களுடன் தீராத சுமையைத் தாங்கிக் கொண்ட குடும்பங்கள் இதனால் பெரும் அவலத்தைச் சந்தித்துள்ளன.

இரண்டு பெரும்பான்மைக் குண்டர்களின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட திலிப் குமார், கருணாநிதி ஆகியோர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. 30 ஆண்டுகள் தோட்டத்தின் கணக்குப்பிள்ளையாக கடமையாற்றிய ஐ.வேலு என்பவர் 70 நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் எவ்வித குற்றச்சாட்டுமின்றி விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனினும், இவருக்கு வேலை வழங்க முடியாதென வேவல்வத்தை தோட்ட நிர்வாகி பத்திரண மறுப்பதோடு, அவருக்குரிய சம்பளத்தை வழங்கவும் மறுப்பதாகக் கூறப்படுகிறது. மேலும், கைதுசெய்யப்பட்டு குற்றச்சாட்டு எதுவுமின்றி உதயசூரியன், முருகையா, முருகானந்தன், ராஜமூர்த்தி, செல்லம்மா, ஜோதிவேல் ஆகிய தொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள போதும், அவர்களுக்கு தோட்ட நிர்வாகம் வேலை வழங்க மறுத்து வருகிறது. இவர்கள் அனைவரும் குடும்பத்தவர்கள். இவர்களது குடும்பங்கள் மிகவும் துவண்டு போயுள்ளன.

வேவல்வத்தை எரிப்புக்கு மிகமுக்கிய சூத்திரதாரிகளான குணசேகர வின் மகன் சுதந்த, சனி மாத்தாயா என்பவரின் மகனான சிசிற ஆகியோர் மிகச் சுதந்திரமாக நடமாடுவதோடு மிரட்டலிலும் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

பேருந்துகளில் தமிழ் மக்களுக்கெதிரான பாரபட்சங்களும், துன்புறுத்தல்களும் தொடர்கின்றன. வைத்தியசாலைகளில் பெரும்பான்மையான வைத்தியர்களும், தாதிகளும், ஊழியர்களும், சிங்களவரைக் கொன்ற புலிகள் என கொடூரமாகத் திட்டியும், சபித்தும் விரட்டுவதாக தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

எவ்வித பாதுகாப்புமற்ற நிலையில் நடுத்தெருவில் விடப்பட்டு நடைப்பிணங்களாக்கப்பட்ட இம்மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் மலையக மக்களால், அஞ்சல் வழியாக அனுப்பப்பட்ட புத்தகப் பார்சல்கள் உரியவர்களைப் போய்ச் சேரவில்லை. சிலருக்கு பார்சல் உடைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்ட பின்பே வழங்கப்பட்டுள்ளன.

பெயருக்கு அமைக்கப்பட்டுள்ள வேவல்வத்தை பொலிஸ் நிலையம், ஒரேயொரு தமிழ் பொலிஸ்காரரை மட்டுமே கொண்டுள்ளது. பொலிசார், பெரும்பான்மை இனத்தவருடன் குடித்து கும்மாளமடித்துக்கொண்டு தமிழ் தொழிலாளர்களை மிரட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

வேவல்வத்தை நகரில் தமிழ்க் கடைகள் பல மீண்டும் தற்காலிக கொட்டில்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில கசிப்பு விற்பனையில் மீண்டும் ஈடுபட்டுள்ளன. தோட்டத்திற்குள் கசிப்பு வியாபாரம் சோபை இழந்துவிட்டபோதும், பெரும்பான்மை இனத்தவரது கடைகளிலும், தமிழ்க் கடைகள் சிலவற்றிலும் கசிப்பு வியாபாரம் அமோகமாக நடக்கிறது.

வன்முறைக்குப் பலியான தொழிலாளர்கள் குடும்பத்துக்கு தலா 9000/- நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிவாரணம் வழங்கலிலும், பாரபட்சங்கள், புறக்கணிப்புக்கள் நடந்துள்ளன. சில குடும்பத்தவருக்கு 2000/- மட்டுமே கிடைத்துள்ளது. சிலருக்கு அதுவும் கூட கிடைக்கவில்லை.

இ.தொ.கா., வேவல்வத்தை நகரில் ஒரு அலுவலகத்தை அமைத்துள்ள போதும் தொழிலாளர்கள் பல் வழிகளில் வாழ்கின்ற போதும், தமிழ் தொழிலாளர் மீதான அடக்கு முறைகளையோ, அவமானங்களையோ, தடுக்கத் திராணியற்றவர்களாக மலையக அரசியல் தொழிற்சங்க சக்திகள் இருப்பதை தொழிலாளர்கள் வாய் விட்டே கூறுகிறார்கள்.

மூன்று மாதங்களாக எரிந்து போன லயன்களை மீண்டும் கட்டியெழுப்ப எந்த விதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட ில்லை

நான்கு மாதங்களில் சகலருக்கும் புதிய வீடுகள கட்டித்தருவதாக வாக்குறுதியளித்த அமைச்சர் தொண்டமானோ, ரத்னசிறி விக்ரமநாயக்கவோ, ஜோன் செனவிரட்னவோ அந்தப் பக்கமே மீண்டும் போகவில்லை. வீடு கட்டும் பணி என்ன ஆனது என்பது எவருக்கும் தெரியவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் நடுத்தெருவில் விடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றனர்.

சகல ஆவணங்களையும் இழந்து விட்ட மக்கள், சீருடைகள், பாடநூல்கள் அனைத்தையும் இழந்துவிட்ட மாணவர்கள், உயிரிலும் மேலான அடையாள அட்டை இழந்த இளைஞர்கள், நம்பிக்கை வரண்டுபோன பெரியவர்கள். பெரும்பான்மை இனத்தவரோடு சென்று வாழ விரும்பி சிங்கள மொழிமூலம் கல்விகற்ற போதும் ஆவணங்கள் இழந்த பின்னர் சிங்கள பாடசாலை அதிபர்கள் மீண்டும் சான்றிதழ்கள் வழங்க மறுக்கும் அவலம்.

சோகமும், துயரமும் நிரம்ப அச்சத்துடனும், பீதியுடனும், எதிர்காலத்தை எதிர்கொள்ளும் களையிழந்து போன முகங்கள். நாங்கள் சந்தித்த அந்த மனிதர்கள் தான் எத்தனை புனிதமானவர்கள். இந்த நாட்டுக்காக உழைத்ததைத் தவிர அவர்கள் செய்த குற்றம் தான் என்ன...?

நன்றி - நூலகத்திட்டம்



கடந்த ஒக்டோபர் 10 சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைகள் விருது இலங்கையைச் சேர்ந்த சுனிலா அபேசேகரவுக்கு வழங்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்துக்கு 50 வருடங்கள் பூர்த்தியடைவதையொட்டி நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சியொன்றில் வைத்து சுனிலா அபேசேகர கௌரவிக்கப்பட்டு இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. 1948 டிசம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் சாசனம் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின் 1953இலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை இந்த விருது ஐவருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னர் இவ்விருதைப் பெற்ற உலகப் பிரமுகர்களில் நெல்சன் மண்டேலா, எல்நோர் ரூஸ்வெல்ட், ஊதாண்ட், பிஷொப் அபெல் முரசோவா, மார்டின் லூதர் கிங் ஆகியோரும் அடங்குவர்.

சுனிலா அபேசேகர, அடிப்படையில் புரட்சிகர இயக்க செயற்பாட்டிலிருந்து இந்த இடத்தை வந்தடைந்தவர். புரட்சிகர அரசியல் செயற்பாட்டிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டபோதும் தொடர்ச்சியாக மனித உரிமைகள் மற்றும் பெண்ணிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய முதன்மை பெண்ணியவாதிகளில் சுனிலா ஒருவர். இலங்கைப் பெண்ணியவாதியாக வெளிநாடுகளில் நன்றாக அறியப்பட்டவரும் கூட. 1990இல் ஆரம்பிக்கப்பட்ட இன்போர்ம் (Inform) எனும் (இலங்கையின் நிலவரம் குறித்த மாதாந்த அறிக்கை வெளியிடும்) நிறுவனத்தின் இயக்குனராக உள்ளார். (மனித உரிமை மீறல்கள் குறித்து கண்காணிப்பு — அறிக்கையிடல் தேவையானவர்களுக்கு விபரங்களை கிடைக்கச் செய்தல் என செய்யப்படும் இந்நிறுவனத்தை இவரது தந்தையாரான மேர்ஜ் இயக்கத்தின் தலைவராக இருந்த சார்ள்ஸ் அபேசேகர நடத்தி வந்தார்.) பல மனித உரிமைகள் மற்றும் பெண்ணிய இயக்கங்களில் நிர்வாக உறுப்பினராகவும் செயற்பாட்டாளராகவும் இருந்து வருகிறார்.

1975இல் பெண்ணின் குரல்' அமைப்புடன் சேர்ந்து செயற்படத் தொடங்கி பின்னர் "பெண்ணின் குரல்" சஞ்சிகையையும் நடத்தி வந்தார். 1976இல் (1971 ஏப்ரல் புரட்சியின் பின் தலைமறைவு இயக்கமாக செயற்பட்டு வந்த) ஜே.வி.பி.யில் இணைந்தார். கொழும்பு கிழக்குக்கான அமைப்பாளர் மட்டத்தில் செயற்பட்டதுடன் ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "Red Power" பத்திரிகைக் குழுவிலும் பணியாற்றி வந்தார். ஜே.வி.பி.யின் விடுதலை கீதம் ("விமுக்தி கீ") எனும் கலைக்குழுவிலும் செயலாற்றியிருந்தார். சுனிலாவின் கலைப்பணி இத்தனை குறுகியது அல்ல. அவர் அதற்கு முன் 1968இல் மேடை நாடகங்களிலும் நடித்துள்ளார். திரைப்படங்கள் சிலவற்றிலும் நடித்துள்ளார். விடுதலை கீதங்கள் கெசட் நாடாக்கள் மற்றும் திரைப்படங்கள் சிலவற்றில் பாடியுள்ளார்.

1979இல் ஜே.வி.பி.யுடன் இணைத்து மனித உரிமைகள் நிறுவனம் ஒன்றை ரெஜி சிறிவர்தன, இந்திக குணவர்தன (தற்போதைய அமைச்சர்) ஆகியோர் அமைத்த போது அதில் இணைந்து பணிபுரிந்தார்.

1980இல் கருத்து முரண்பாடுகள் காரணமாக ஜே.வி.பி.யில் இருந்து விலகி மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் குறித்த விடயங்களில் தீவிர அக்கறை காட்டத் தொடங்கினார். 1984இல் பெண்கள் தொடர்பூக நிறுவனம் எனும் அமைப்பைத் தொடங்கினார். இவ்வமைப்பு இன்று இலங்கையின் பல்வேறு பெண்கள் அமைப்புகளை ஒன்றிணைக்கும் வலைப் பின்னலின் மைய அமைப்பாகவும் இருந்து வருகிறது.

சர்வதேச மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் குறித்த மாநாடுகளில் இலங்கையிலிருந்து பெரும்பாலும் சுனிலா கலந்து கொள்வதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கம் விடுகின்ற அறிக்கைகளை மறுத்து மாற்று அறிக்கைகளை தயாரித்து அளிப்பவராக சுனிலா இருந்து வந்துள்ளார். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் சுனிலா பெண்ணிய, மனித உரிமைகள் பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகிறார்.

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் இவரும் ஒருவர்.

நான்கு பிள்ளைகளுக்கு சுனிலா இன்று தனியொரு தாயாகவும் தந்தையாகவும் பிள்ளைகளை வளர்த்து வருபவர். இந்த நால்வரில் இருவர் வசி, சுனில் ஆகியோர் லீனா (முன்னாள் ஜே.வி.பி.யின் பெண்கள் பிரிவு பொறுப்பாளராக இருந்தவர். பின்னர் ஒரு விபத்தில் இறந்து போனார்.)வின் பிள்ளைகள். இன்று அவ்விருவரும் சுனிலாவின் வளர்ப்பிலேயே வாழ்கின்றனர்.

46 வயதான சுனிலாவுக்கு 30 வருடகால செயற்பாட்டு அனுபவம் உண்டு. உலகில் சோஷலிசப் பெண்ணியவாதியொருவருக்கு கிடைத்த முதல் ஐ.நா.மனித உரிமை விருதென்றும் இதனைக் கூறலாம். மறுபுறம் இவரின் மனிதாபிமானப் பார்வையானது இவரது அரசியலையும் விழுங்கிவிட்டதென்றும் இன்று சுனிலா வெறும் "மனிதாபிமானி" மாத்திரம் தான் என்கின்ற விமர்சனமும் பரவலாக கூறப்படுவதையும் கருத்திற் கொள்வோம். சுனிலாவுடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.



# "மனிதத்துவத்தைக் கொண்ட சமத்துவமே எனது எதிர்பார்ப்பு!"

—ஐநாவின் மனித உரிமைகளுக்கான விருது பெற்ற மனித உரிமையாளரும் பெண்ணிலைவாதியுமான சுனிலா அபேசேகர

**தமிழ்ச் சூழலோடு உங்களுக்கு ஏற்பட்ட உறவையும், அதன் அரசியல் சூழலை நீங்கள் விளங்கிக் கொண்டதையும் கூறுங்களேன்?**

1970களில் யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழியிலும் பாடநெறிகள் நடந்த காலத்தில் நான் யாழ் போய் வருவவேன். அப்போது அங்கு பல தமிழ் நண்பர்கள் கிடைத்தார்கள். நித்தியானந்தன், நிர்மலா, சித்திரா போன்ற பலரின் நெருங்கிய நட்புக் கிடைத்தது. இந்த உறவின் காரணமாக யாழ்ப்பாணப் பிரயாணம் அதிகரித்தது. தர்மசேன பத்திராஜவுடன் பொன்மணி திரைப்படத்துக்கு பங்களித்தோம். எங்களுக்கு தமிழர் பண்பாடு, அவர்கள் எதிர்கொள்ளும் விசேட பிரச்சினைகள் என்பவற்றை உணரக் கிடைத்தது. அவர்களின் பல்வேறு நடைமுறைகளுடன் தொடர்புற கிடைத்தது. பிரச்சினைகள் வளர்ந்து கொண்டிருந்த போதும் எனது தொடர்பு இருந்து கொண்டே இருந்தது. நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்ட போது முதல் நாள் இரவு புறப்பட்டு சென்று காலையில் ஒரு முறை சந்தித்து விட்டு பின்னர் மீண்டும் ஜெயிலரோடு சண்டை பிடித்து மாலையும் சந்தித்து விட்டு வருவேன். அவர்கள் சிறைகள் மாற்றப்படும் போது தொடர்ந்தும் வெள்ளிக்கிழமைகளில் புறப்பட்டுச் சென்று பார்வையிட்டு வருவேன். இவ்வுறவுகள் வெறுமனே தத்துவார்த்த ரீதியான அல்லது, அரசியல் ரீதியான புரிதலோடு நீடித்தவை அல்ல. அதற்கு அப்பால் நட்புறவுக்கூடாக இவை நீடித்தன. பிற்காலங்களில் எனது பிள்ளைகளையும் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு கூட்டிச் செல்வதில் எனக்கு விருப்பமதிகம். அப்படி அழைத்து செல்லப்படுகின்ற போதெல்லாம் பிள்ளைகள் அங்கு உடைந்து சிதைந்து தரைமட்டமாகிவிட்டிருக்கும் இடங்களைக் காட்டி பல கேள்விகளைக் கேட்பார்கள். அவர்களுக்கு அவை குறித்த விளக்கத்தை நான் கொடுப்பேன். இந்த நினைவுகள் அவர்களை ஒரு போதும் இனவாதத்துக்கு இட்டுச் செல்லாது. அவர்களுக்கு பிரச்சினையை விளங்கிக் கொள்ள வாய்ப்புகளைக் கிட்டச் செய்வது அவசியம். அரசியல் ரீதியாக மட்டும் இவற்றை நோக்குவதில் எனக்கு உடன்பாடில்லை.

ஜே.வி.பி.யுடன் நான் உறவை முறித்துக் கொண்ட சந்தர்ப்பத்தில் கூட மனித உணர்வுகளை மதிக்காததில் ஏற்பட்ட பிரச்சினையே மேலெழுந்தது.

**இப்படியான மனிதாபிமானப் பார்வை, அரசியல் ரீதியாக பார்க்கவிடாதபடி செய்து விடுமல்லவா?**

நான் எனது அரசியல் வாழ்க்கையில் மனிதாபிமான முறையிலேயே செய்து வந்துள்ளேன். மனிதத்துவம் என்பது புரட்சிகர அரசியலொன்றின் மூலமாவே சாத்தியப்படும் என்பதை நம்பியல்லவா நாங்கள் அரசியல் செய்யத் தொடங்கினோம். பெண்ணியம் குறித்த செயற்பாடுகளையும் அதே மனிதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டல்லவா செய்யத் தொடங்கினோம். அரசியலின் பேரால் நான் ஒருபோதும் மனிதத்துவத்தை விலைகொடுக்க விரும்பவில்லை.

1987-1989 காலப்பகுதிகளில் எனக்கு ஜே.வி.பி.யால் அச்சுறுத்தல் இருந்தது. அப்போது ஒரு முறை ராஜகிரிய பகுதியில் சிறுமியாக இருந்த எனது மகளையும் கைபிடித்துக் கொண்டு பாதையில் சென்று கொண்டிருந்த போது இருவர் எங்களையும் தாண்டி ஓடிக் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சிவில் உடை தரித்த படையினரும் விரட்டி வந்தார்கள். வந்த படையினர் என்னிடம் கேட்டார்கள் எங்கே அவர்கள் என்று. எனக்கு தெரியும் அவர்கள் ஒளிந்திருந்த இடம். ஆனால் நான் வேறு இடத்தைக் காண்பித்து அவர்களைத் திசை திருப்பினேன். பின்னர் வந்து எனது அரசியல் நண்பர்கள் சிலருடன் இது பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அவர்கள் "உன்னைக் கொல்லப் பார்க்கும் ஜே.வி.பி.காரர்களை நீ ஏன் பிடித்துக் கொடுக்காமல் போனாய்" என்று என்னைத் திட்டினார்கள். ஆனால் அப்படிச் செய்ய என்னால் முடியாது. அவர்கள் என்னைக் கொல்ல வந்திருந்தாலும் கூட நான் பிடித்துக் கொடுக்க முடியாது. அப்படிச் செய்திருந்தால் நான் அரசியல் செய்து பிரயோசனமில்லை.

**நீங்கள் ஜே.வி.பி.யில் இருந்து விலகிய போதிருந்த காரணத்தையும் தற்போது நீங்கள் கூறிய சம்பவத்திலும் அரசியல் இல்லையா? ஏன் இவ்விரண்டையும் அரசியல் ரீதியில் உங்களால் எதிர்கொள்ளமுடியாமல் போனது?**

இலங்கையின் அரசியல் ஒரு தத்துவார்த்த அரசியல் இல்லையே. தொடர்ச்சியாக ஒருபுறம் ஊழலும் மறுபுறம் வன்முறையும், குரூரமும், நிறைந்த அரசியலே இருந்து வருகிறது. இந்த சட்டகத்துக்குள் யூ.என்.பி., ஸ்ரீ.ல.சு.க., ஜே.வி.பி., புலிகள் என எவரும் விதிவிலக்கில்லை. இப்படிப்பட்ட சூழலில் மனிதத்துவத்தை அரசியலால் எதிர் கொள்ளலாம என்று நான் நினைக்கவில்லை. இவையனைத்தும் வர்க்க, இன, சாதிய, பால்வாத அதிகாரத்துவத்தை நிலைநாட்டவென இப்படிப்பட்ட செயல்களைச் செய்கின்றன. குறுகியகால நலன்களுக்காக மனிதத்துவம் பற்றி சிறிதும் அக்கறை கொள்வதில்லை. எனவே நான் மனிதத்துவத்தை அரசியலால் எதிர்கொள்ள வாய்ப்பில்லை. இப்படி உங்களுக்குத் தோன்றவில்லையா?

**பொதுவாக சுனிலா தனது அரசியலை இழந்து விட்டதாக விமர்சனம் உள்ளதே?**

துரதிருஸ்டவசமாக எனது மனிதத்துவத்துக்கு அரசியலில் இடமில்லை.

**இதுவரை காலம் உங்களை ஒரு சோஷலிசப் பெண்ணியவாதியாகவே அடையாளம் கண்டு வந்தனர். இன்றைக்கும் அது செல்லுபடியாகுமா?**

ஆம், இன்றும் நான் அடிப்படையில் சோஷலிச விடுதலையையும், புரட்சிகர சமூக மாற்றத்தையும் வேண்டி நிற்கிறேன். நான் நம்புகின்ற சோஷலிசம் மனிதத்துவத்தை மதிக்கின்ற சோஷலிசமே. வேடிக்கை என்னவென்றால் இலங்கை அரசு கூட "ஜனநாயக சோஷலிசக் குடியரசு" என்று தான் அழைக்கப்படுகிறது. எனவே சோஷலிசம் என்பது இன்று பல்வேறு வகையில் அர்த்தம் கொள்ளப்படுகிற சூழலில் மனிதத்துவத்தை இலக்காகக் கொண்ட சமத்துவத்தையே நான் எதிர்பார்க்கிறேன்.

**ஐ.நா.வால் இது வரை வழங்கப்பட்டுள்ள விருதுகளில் பெண்ணிலைவாதிகள் எவருக்காவது இது வழங்கப்பட்டுள்ளதா?**

கடந்த 10 வருடங்களாகத்தான் மனித உரிமைகள் சட்டகத்துக்குள் பெண்ணியம் குறித்தும் பேசப்படுகிறது. அதுபோல பெண்ணியத்தையும் மனித உரிமைகள் நடவடிக்கைகளோடு சேர்த்துப் பார்ப்பதும் இந்த சிறு காலப் பகுதிக்குள் தான். "பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே!" எனும் கோஷம் சமீப காலமாகத் தான் ஓங்கி ஒலிக்கின்றது. அந்த வகையில் மனித உரிமைகள் நடவடிக்கைகளுக்கும் பெண்கள் செயற்பாடுகளுக்குமாக பெண்ணிலைவாதியொருவருக்கு கிடைத்த முதல் விருது இதுவென்று கூறலாம். விருது வழங்கப்படுகையில் பெண்கள் பிரச்சினை, ஆயுத மோதல், முரண்பாடுகளைத் தீர்த்தல் (Conflict Resolution) என்பவை தொடர்பாக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் செயற்பட்டமைக்காக வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**மனித உரிமையாளரான உங்கள் பார்வையில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் பற்றி என்ன சொல்வீர்கள்?**

இந்த அரசாங்கம் ஆட்சியில் அமர்கையில் என் போன்ற பலர் நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால் இன்று எல்லோரும் அதிருப்தியடைந்திருக்கிறோம். யாப்பு விடயத்தை எடுத்துக் கொண்டால் அதில் அடிப்படை உரிமை பகுதியில் சில திருத்தங்களையும் கோரியிருந்தோம். அப்பகுதியில் உயிர் வாழ்வதற்கான உரிமை, பொருளாதார உரிமை என்பவை திருத்தப்பட வேண்டும் என்று கேட்டிருந்தோம். உயிர் வாழும் உரிமை உத்தேசத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொருளாதார உரிமை உள்ளடக்கப்படவில்லை. தொழில் புரிவதற்கான உரிமை குறிப்பிடப்படவில்லை. ஆனால் தொழிற் பாதுகாப்புக்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு தொழில் புரிவதற்கான உரிமை இன்றி தொழிலை பாதுகாப்பதற்கான உரிமை இருந்து என்ன பிரயோசனம். மேலும் முன்னைய சட்டங்கள் அப்படியே செல்லுபடியாகும் என்கின்ற பிரிவும் உள்ளது. அதன்படி மரண தண்டனையும் அப்படியே அமுலில் இருக்கும். அப்படியென்றால் வாழ்வதற்கான உரிமை வழங்கப்படுகின்ற போது சட்டங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. யாப்பின் ஆரம்பத்தில் இது ஒரு பல்லின நாடென்பதை உறுதிப்படுத்தவில்லை. இப்படியாக மனித உரிமையை எடுத்துக் கொண்டாலே பல விடயங்களை உத்தேச யாப்பில் குறிப்பிடலாம்.

தொழிலாளர் சாசனத்தை பிரகடனப் படுத்துவதாகக் கூறிய அரசாங்கம் இன்னும் அதனைக் கருத்திற் கொள்ளவில்லை. இன்று அதனை முன்னெடுக்கும்படி எந்த தொழிற் சங்கங்களும் கதைக்கத் தயாராயில்லை ஏனென்றால் அது தொழிலாளர்களை விட முதலாளிகளைப் பாதுகாக்கின்ற சாசனமாகவே ஆக்கப்பட்டுள்ளது. மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை, ஊழல்களையும் வன்முறைகளையும் ஒழிப்பதாகக் கூறிய போதும் அதே சேற்றில் அரசாங்கம் மூழ்கி விட்டுள்ளது. காணாமல் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழு விசாரணை முடிக்கப்பட்டு அதன் அறிக்கை இன்றும் மக்களுக்கு அறிய வாய்ப்பில்லை. முறைப்படி ஜனாதிபதி செயலகத்துக்கூடாக அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். இன்னும் அப்படிச் செய்யப்படவில்லை. ஜனாதிபதியிடம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அவ் ஆணைக் குழுவில் சாட்சி கூறிய தாய்மார், மனைவிமார், பிள்ளைகள் என எவரும் அதனை அறிய முடியாதுள்ளது. நட்டஈடு வழங்கப்படவில்லை. நீதி கிடைக்கவில்லை. அவற்றில் ஈடுபட்ட பலரது பெயர்களும் அதில் உள்ளன. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் பயப்படுகிறது. அப்படி நடவடிக்கை எடுத்துவிட்டு யுத்தமொன்றைச் செய்ய முடியாது என்று நம்புகிறது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இனி பாதிக்கப்படப் போபவர்களுக்கும் இனி இப்படி நடக்காது என்பதற்கு எந்த வித நம்பிக்கையோ உறுதியோ இல்லை.

தமிழ் சிறைக்கைதிகளின் நிலைமைகளை எடுத்துக் கொண்டால் இன்று வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி வீணாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். வெலிக்கடை, களுத்துறை, அனுராதபுரம் என பல சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல்கள் நடந்துள்ளன. அவர்களுக்கு திருப்பித் திருப்பி வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் எதுவும் உருப்படியாக இல்லை. இன்றைய செம்மணி புதைகுழி வரை எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம். மனித உரிமைகள் குறித்து திருப்தி கொள்ளக்கூடிய எதுவும் இன்று இல்லை.

**இந் நிலைமையை ஐ.தே.க. அரசாங்கத்தோடு ஒப்பிட்டால்..?**

இத்தனைக்கும் மத்தியில் மனித உரிமையாளர்கள் செயற்படுகின்ற வாய்ப்புகள் தற்போதைய அரசாங்கத்தில் உண்டு. தடையில்லை.

**முன்னர் இல்லாததா?**

ஆம், 88-90 போன்ற காலப்பகுதிகளில் அவ்வாறு இருக்கவில்லை. ஆனால் மனித உரிமைகளை மீற வேண்டும் என்கின்ற திட்டமிட்ட நோக்கம் இந்த அரசாங்கத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பிரேமதாச அரசாங்கத்துக்கு அப்படி இருந்தது. அரசாங்க விரோதிகளை கூண்டோடு அழிக்கின்ற திட்டமிட்ட நோக்கம் பிரேமதாசவுக்கு இருந்தது. அது மட்டுமல்லாமல் கலவரங்களைக் கூட கூறலாம், 82, 83 கலவரத்தைக் கூட ஜே.ஆர் அரசாங்கம் திட்டமிட்டுச் செய்தது. அந்தளவு கொள்கை ரீதியாக திட்டமிட்டு மீறுகின்ற நோக்கம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. இந்த அரசாங்கம் நடைமுறையில் நிறையத் தவறுகளை இழைத்து வருகிறது. அக்கறையீனமாக, பொறுப்பீனமாக நடந்து கொள்கிறது என்கின்ற குற்றச்சாட்டைத் தான் வைக்கமுடிகிறது.

நேர்காணல்: என்.சரவணன்


நன்றி - நூலகத்திட்டம்



றொறன்ரோ உலகத் திரைப்பட விழாவிற்கு வந்திருந்த *சந்தோஷ் சிவன்* சரிநிகருக்கு அளித்த நீண்ட நேர்முகத்திலிருந்து முக்கியமான பகுதிகளைத் தருகிறோம். சந்தோஷ் சிவனுக்குத் தமிழ் அவ்வளவாகப் புரியாது என்பதால் உரையாடல் ஆங்கிலத்திலேயே நிகழ்ந்தது. *Terrorist* படத்தில் பங்கேற்றிருந்த ஆயிஷாவும் உடனிருந்தார். சரிகருக்காக சந்தோஷ் சிவனைச் சந்தித்தவர்கள் *பா.அ. ஜயகரன், கருணா.* மொழிபெயர்ப்பும் தொகுப்பும்: சேரன்.



Terrorist படத்தில் மல்லியாக நடித்த ஆயிஸா



# “ராஜீவ் காந்தியின் கொலைதான் என்னை TERRORISTஐ எடுக்கத் தூண்டியது”

-சந்தோஷ்சிவன்

# ”தன்னையும் அழித்து, இன்னொருவரையும் அழிக்க எப்படி ஒருவரால் முடிகிறது?”

**Terrorist என்ற படத்தை எடுக்க வேண்டுமென்ற உந்துதல் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**

ராஜீவ் காந்தியின் படுகொலை தான் உந்துதல். எப்படி ஒருவருக்குத் தன்னையும் அழித்து இன்னொருவரையும் அழிக்க முடிகிறது? இந்த Suicide Killerஇன் மனநிலை எப்படி இருந்திருக்கும்? இந்த மாதிரியான செயல்கள் மனித இயற்கையிலேயே உள்ளதா அல்லது இத்தகையதொரு செயலைச் செய்ய அவளை உந்தித் தள்ளியது எது? அளப்பரிய கடப்பாட்டுணர்வு தானா? அல்லது வேறும் ஏதாவதா? இத்தகைய கேள்விகளே இந்தப் படத்தை எடுக்க என்னைத் துாண்டியது. ஆவேசம் வந்த மக்கள் திரள் ஈடுபடுகிற வன்முறைகளைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், ஒரு தனிநபர் இவ்வாறு திட்டமிட்டு இயங்குவது என்பது புரிந்து கொள்வதற்குச் சிக்கலானது. ஒரு Terroristஐப் பற்றிப் படம் எடுக்க வேண்டும் என்று விரும்பிய அதே நேரம் பயங்கரமான வன்முறைக் காட்சிகளையும் காட்ட நான் விரும்பவில்லை. வன்முறையைத் தெய்வீகமானதாக உயர்த்துவது எனது நோக்கமில்லை.

**Terrorist என்ற வார்த்தைப் பிரயோகமே உங்களுக்கு இருக்கக்கூடிய அரசியலைக் காட்டவில்லையா? Terrorist என்ற சொல், அமெரிக்கா மேலாதிக்கப் போக்கினை நியாயப்படுத்துகிற ஒரு கருவியாகவே பயன்பட்டு வருகிறது. இந்தப் படத்தின் தலைப்பிடலைப் பார்க்கிற போது உங்களுடைய கருத்தியலும் அதுதான் என்றல்லவா தோன்றுகிறது?**

Terrorist என்று நாங்கள் சொல்கிற போதே இது மக்கள் மத்தியில் பயத்தைக் கிளப்புகிறது? சாதாரண மனிதனை இவர்கள் கிலி கொள்ள வைக்கிறார்கள். எல்லா Terrorist களும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர் தான். விடுதலைப் புலிகளுக்கு கடப்பாட்டுணர்வு அதிகமாக இருக்கக் கூடும். Terrorist என்பது அமெரிக்கக் கருத்தியலுடன் தொடர்பானது என்பதில் எனக்கு உடன்பாடில்லை.

**உங்களுடைய படம் மிகவும் தாக்கமான படம். போராளியின் மென்மையான பக்கங்களையும் அது காட்ட முனைகிறது. தான் சார்ந்த சமூகத்துக்கான தனது போராட்டக் கடமையுணர்வுக்கும் தனது சொந்த மெல்லனுபவங்களின் பிடிப்புக்கும் இடையே ஊடாடுகிற ஒரு தவிப்பை — ஒரு இடைவெளியை — நீங்கள் அணுக முயன்றிருக்கிறீர்கள் என்று Terroristஐ நாங்கள் புரிந்துகொள்ள முடியுமா?**

நீங்கள் சொல்வது மெத்தச் சரியானது. விடுதலைப் புலிகள் பற்றியோ அல்லது அரசியல் தொடர்பாகவோ நான் எதுவும் சொல்ல முயலவில்லை. நான் ஒரு தனிநபரை எடுக்கிறேன். அவருடைய மனதின் உள்ளோட்டங்கள் என்ன என்பதைப் பார்க்க முயல்கிறேன். அவருடைய கடப்பாட்டுக்கும் மனதுக்கும் என்ன வகையான இடைஉறவுகள் இருக்கும் என்று பரிசீலிக்க முயல்கின்றேன்.

**இந்தப் படம் தொடர்பாக முக்கியமான வேறொரு பிரச்சினையும் எங்களுக்கு உள்ளது. இந்தியாவிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியோ, அல்லது போராட்டங்கள் பற்றியோ, அல்லது யுத்—தத்தின் விளைவான சமூக அவலங்கள் பற்றியோ எவ்வளவு துாரம் தெரியும் என்ற பிரச்சினை இருக்கிறது. தமிழ் நாட்டில் கிடைக்கக் கூடிய செய்திகளும் ஒன்றில் போராட்டம் தொடர்பாக "வீரம்", "மானம்", "தியாகம்" போன்ற உன்னதப் படுத்தல்—களாகவும் அல்லது வெறும் படுகொலை—களாகவும் பயங்கரவாதமான சித்திரிப்—பாகவுமே உள்ளன. இந்த நிகழ்வுகளின் மறுபக்கங்களாக இருக்கக்கூடிய சாதாரண மக்களின் உணர்வுகள், அவலங்கள் பற்றி ஒன்றுமே தெரியவருவதில்லை. ஏற்கெனவே வந்த திரைப்படங்களிலும் — புன்னகை மன்னன் — போன்றவை — தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு பயங்கரவாதமாகவே சித்திரிக்கப்பட்டிருக்கிறது. ஹொலிவூட் படங்கள் பலவற்றில்' பயங்கரவாதிகளாக அரபு. இஸ்லாமிய மக்களையே தொடர்ந்தும் சித்திரித்து வருகிறார்கள். இலங்கைத் தமிழ் மக்களாகிய எமக்கு இது பற்றிய எமது நிலைப்பாட்டை வலியுறுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இந்தப் பின்னணியில் வுநசசழசளைவ படம் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

Terrorist படத்துக்கூடாக இது பற்றிய எந்தக் கருத்தையும் நான் சொல்ல வரவில்லை. அப்படி ஏதாவது கருத்து எனக்கிருந்து, அதனை நான் இப்படத்துக்கூடாகச் சொல்லியிருந்தாலும் நிலைமையை அமு மாற்றிவிடப்போவதில்லை. ஒரு யுத்தச்சூழலில் இரண்டு பகுதியினருமே தாம் சொல்வதும், செய்வதும் சரி என்று நம்புகிறார்கள். அப்படி நம்பிக்கொண்டுதான் பிழையான காரியங்களையும் செய்கிறார்கள். இரண்டு பகுதியினரோடும் எனக்கு முற்று முழுதான உடன்பாடு இல்லை. எப்பொழுது அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்களோ அப்பொழுது தாங்கள் செய்வது நியாயம் என்று ஒருவராலுமே சொல்ல முடியாது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது அவருடன் சேர்ந்து பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது என்பது பயங்கரவாதம் தான். எனது படம் இது பற்றி ஒரு விவரணம் அல்ல.

**ஏன் இந்தப் படத்தைத் தமிழில் எடுக்க வேண்டுமென்று யோசித்தீர்கள்? ஹிந்தி—யிலோ, மலையாளத்திலோ கூட நீங்கள் இதனை எடுத்திருக்கலாம் தானே?**

Terrorist என்றவுடன் தமிழ்ச் சூழல் தான் எனக்கு ஞாபகம் வந்தது. அதுதான் தாக்கம் மிக்கதாகவும் இருக்கிறது. □



நன்றி - நூலகத்திட்டம்



# அரட்டுவ: ~~முதலாவது பொருளியல்~~ தரகு முதலாளித்துவ பத்திரிகை ?

අරටුව

ශ්‍රී ලංකාවේ ප්‍රථම සිංහල ආර්ථික පුවත්පත

"இலங்கையின் முதலாவது பொருளியல் பத்திரிகை" என்கின்ற தடித்த எழுத்துடன் சேர்த்து "அரட்டுவ" என்கின்ற பெயரில் வாராந்தப் பத்திரிகையொன்று நவம்பர் தொடக்கம் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

பொருளியல் விவகாரங்களை வெளிக் கொணர்கிற அரட்டுவ என்கின்ற இந்தப் பத்திரிகையின் தமிழ் அர்த்தம் "மரவைரம்" என்பதே.

உண்மையிலேயே இந்தப் பத்திரிகை பொருளியல் விவகாரங்களைப் பற்றிப் பேசுவதற்கென்றே உருவாக்கப்பட்டிருக்கிற பத்திரிகை தான். உள்ளூர் வெளியூர் பொருளியல் நிலமைகள், அதன் தந்திரோபாயங்கள் மற்றும் அவை குறித்த செய்திகள், பேட்டிகள், ஆய்வுக் கட்டுரைகள், சந்தை நிலவரங்கள் என்பனவற்றை வெளியிட்டு வருகிறது. சுருக்கமாகக் கூறுவதானால் இந்தப் பத்திரிகை இலங்கையின் உள்ளூர் முதலாளிமார் சிலரின் சந்தை வாய்ப்புகளை பலப்படுத்துகின்ற வகையில் தங்களின் பலத்தை வெளிக்காட்டுவதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள பத்திரிகையென்பதையே காட்டுகிறது.

"சர்வதேச வலைப் பின்னலுடன்(internet) இணைத்துக் கொண்ட இலங்கையின் முதலாவது பொருளியல் பத்திரிகை" என்று ஆசிரியர் தலையங்கப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் வெப் தளத்தின் விலாசம் www.aratuwa.lk என்று குறிப்பிட்டுள்ளது.

அதே ஆசிரியர் தலையங்கப் பகுதியில் ஆசிரியரின் பெயருக்கு முன் ஆரம்பகர்த்தா-'லலித் கொத்தலாவல' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது உங்களுக்கு ஓரளவு பின்னணி விளங்கியிருக்க வேண்டும்.

லலித் கொத்தலாவல வேறு யாருமல்ல செலிங்கோ நிறுவனம், செய்லான் வங்கி, புளு டயமன்ட் நிறுவனம் என இலங்கையின் முக்கிய பல நிறுவனங்களின் இயக்குனரும் இலங்கையின் முதன்மை தொழிலதிபர்களில் ஒருவருமான இவர் பொருளாதாரத் துறையில் மாத்திரமல்ல சமீப காலமாக அரசியல் விவகாரங்களிலும் பேசப்படுபவர்.

## லலித் கொத்தலாவல — பின்னணி

இனப்பிரச்சினையில் சகல கட்சிகளையும் இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வரும் முயற்சியெனக்கூறி சர்வகட்சி மாநாடு, பேச்சுவார்த்தை சமரச முயற்சியென ஆரவாரங்களைப் புரிந்து கொண்டிருந்த வர்த்தக சமூகத்தின் தலைவரும் இவர் தான். இலங்கை அரசின் "தேசமான்ய" விருதினைப் பெற்றவர். இதைத் தவிர இவரைப் பற்றி எவரும் அறியாத கதையொன்றும் உண்டு. சிங்கள வீரவிதான இயக்கத்துடன் மறைமுகமாக பணிபுரிகின்ற முக்கிய தொழிலதிபர்களில் இவரின் பெயரும் உண்டு. ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இறங்கியிருக்கும் வர்த்தக சமூகத்துடன் இவரும் இறங்கியிருந்தபடியால் இவருக்கும் சிங்கள வீரவிதான இயக்கத்துக்கும் உறவு தற்போது சுமுகமாக இல்லையென்கின்ற கதையும் அடிபடுகின்றது.

இந்தப் பத்திரிகையில் தொடர்ச்சியாக வர்த்தகப் பிரச்சினைகள் எனும் பகுதியில் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டுள்ளோரின் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார் லலித் கொத்தலாவல. தனது வர்த்தக நிறுவனங்கள் அனைத்தினதும் விளம்பரங்கள் இதில் இடம்பெறுகின்றன. 12 (broadsheet size) பக்கங்களில் நான்கில் ஒரு பகுதி இப்படியான விளம்பரங்களைக் கொண்டுள்ளன.

ஏன் திடீரென்று இப்பத்திரிகையை இவர் ஆரம்பிக்க வேண்டுமென்கின்ற கேள்விக்கு பல்வேறு கதைகள் உண்டு.

## 94 மாயையும் பத்திரிகைகளின் வீழ்ச்சியும்

இது ஒரு கிளர்ச்சி அலை உள்ள காலமாக இல்லை. முன்னர் பிரேமதாச காலத்தில் இருந்த ஒருவித கிளர்ச்சித்தனமான ஆரவாரமான அரசியல் ஆர்வமும் உணர்ச்சிமிகுந்ததுமான காலமாக இது இல்லை. 94இல் பொது ஜன ஐக்கிய முன்னணியை பதவியில் அமர்த்துவதில் பாரிய பாத்திரத்தை பத்திரிகைகளும், வெகுஜன மற்றும் தன்னார்வ இயக்கங்களும், புத்திஜீவிகளும் ஆற்றியிருந்தனர். அந்த மாயையிலிருந்து இன்னும் விடுபடாதோர் பலர். இந்த அரசாங்கத்தை அம்பலபடுத்துவது தங்களின் முன்னைய நிலைப்பாட்டை சந்தேகிக்கச் செய்யும் என்றும் நேர்மையாக ஒத்துக்கொள்வதை கௌரவப் பிரச்சினையாக கொண்டும் இன்னும் இந்த அரசாங்கத்தை பாதுகாக்கும் தரப்பினர் சிலர். இவர்கள் வெறும் தனிநபர்களாக மாத்திரமல்ல அமைப்பு ரீதியான சக்திகளாகவும் உள்ளனர்.

இப்படிப்பட்ட சக்திகள்-குறிப்பாக வெகுஜன-தன்னார்வக் குழுக்கள்-மக்களின் போராட்ட குணாம்சங்களை கேலிக்கூத்தாக்குவதில் முக்கிய பாத்திரத்தை ஆற்றியுள்ளன. 94 அலைக்குப் பின்னர் காத்திரமான போராட்டங்களை இது வரை இந்த சக்திகள் நடத்தியதில்லை. ஆர்ப்பாட்டம் என்கின்ற பெயரில் சர்வதேச நினைவு தினங்களில் செய்யப்படும் ஆர்ப்பாட்டங்களைக் கூட காலாகாலத்தில் நடைபெறும் சம்பிரதாய மதச் சடங்குகளைப் போல ஆக்கி அவற்றின் காத்திரத்தை இழக்கச் செய்து மக்களை சலிப்படையச் செய்வதில் இச்சக்திகள் ஆற்றிய பாத்திரம் அபாரமானது.

இப்படிப்பட்ட சலிப்பும், வெறுப்பும், ஆத்திரமும் இந்த கட்டமைப்பை நோக்கியும், இக்கட்டமைப்பை பாதுகாக்கின்ற இயந்திரங்களின் மீதும் மையப்படுத்தக்கூடிய, மையப்படுத்த வேண்டிய முக்கிய சக்திகள் அனைத்தும் அரசாங்கத்தை பாதுகாக்கின்ற நிலையில் மக்களை விழிப்பூட்டுவதற்கான வாய்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அல்லது முட்டுக்கட்டை போடப்பட்டதாகவே உள்ளது. இந்த நிலையானது அத்தனை துயரங்களும் உருமறைப்பு செய்யப்பட்டு மக்களின் போராட்ட அலை தணிக்கப்பட்டு ஒரு இன்று கிளர்ச்சிகர அலைக்குரிய காலமாக இல்லாமல் ஆக்கிவிட்டுள்ளது.

இப்படிப்பட்ட நிலை பத்திரிகைகளின் விற்பனை வீழ்ச்சிக்கும் காரணமானது. பிரேமதாச காலத்தில் அறுபதினாயிரம் பிரதிகள் வரை விற்பனையான மாற்றுப்பத்திரிகைகள் இன்று பத்தாயிரத்துக்கும் குறைவாக ஆகியிருப்பதும் இதன் விளைவாகவே. சகல பத்திரிகைகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டது. எனவே அப்படி ஒரு கிளர்ச்சிகரமான சூழல் அமையப்படாத நிலையில் வெகுஜன-அரசியல் மற்றும் செய்திப் பத்திரிகைகளின் ஆரம்பிப்புகள் வர்த்தக நோக்கமற்றவையாகத் தான் இருக்க முடியும். விற்பனையை இலக்காகக் கொண்டு இந்தச் சூழலில் பத்திரிகைகள் தொடங்கப்படுவதென்பது சந்தை நிலைவரத்தை சரியாக அறியாததாகத்தான் இருக்க முடியும். மேலும் அப்படி தொடங்கப்படுபவை ஏலவே உள்ளவற்றிலிருந்து மாறுபட்டிருப்பதும் நிபந்தனைக்குரியவை. இருப்பனவற்றை செய்ய இன்னொன்று எதற்கு?

## புதிய வரவு எதன் அறிகுறி?

எனவே இப்படிப்பட்ட நிலையில் பத்திரிகைகள் பலவற்றின் வரவு ஆச்சிரியத்தை ஊட்டுகின்றன. சில பத்திரிகைகள் புதியனவற்றைத் தொடுகின்றன. இவை ஓரளவு இருப்புக் கொள்கின்றன. ஆனால் சமீப காலமாக சிங்களச் சூழலை எடுத்துக் கொண்டால் புதிதாக முளைக்கின்ற பல பத்திரிகைகள் ஏனையவற்றிலிருந்து. பெரிதாக மாறுபடவில்லை. வாராந்தப்பத்திரிகைகள் மாத்திரம், ச(த்)திய, யுக்திய, ராவய, சத்தின, நிதஹாச, அரட்டுவ... என பத்திரிகைகள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதை விட மாதமிருமுறை, மாதாந்தம் என்றும் வேறு பத்திரிகைகளும், பல சஞ்சிகைகளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட சூழலில் அரட்டுவ பத்திரிகையின் தோற்றம் நிச்சயமாக வர்த்தக நோக்கைக் கொண்டிருக்க முடியாது. விளம்பர அல்லது வேறு அரசியல் நோக்கங்களுக்காகத் தான் இருக்க முடியும். டிசம்பர் 11ஆம் திகதியிலிருந்து மாதாந்தமாக வெளிவரத் தொடங்கியிருக்கும் "சத்தின' எனும் இன்னுமொரு பத்திரிகையின் நோக்கத்தைத் தேடிப்பார்த்த போது சுனில் அபேவர்தன என்பவர் (இவர் முன்னாள் நவ சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த பெண் பாராளுமன்ற உறுப்பினர் குசலா அபேவர்தனவின் மகன். இன்று இலங்கைக்கான கோக்காகோலா கம்பனியின் பெருமளவு பங்குகள் இவருக்கு உரியது. இவர் இப்பத்திரிகையைத் தவிர "நிதஹச" (சுதந்திரம்) மற்றும் "Independent" எனும் பெயரில் கலரில் 40 கிராம் வெள்ளைத்தாளில் ஆங்கில வாராந்தப் பத்திரிகையையும் தொடக்கியிருக்கிறார். இது ஒக்டோபரில் இருந்து வெளிவரத் தொடங்கியுள்ளது.) தான் எதிர்கால அரசியல் நுழைவுக்கு களமமைக்கின்ற நோக்கிலேயே இந்த பத்திரிகைகளை தொடக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த வகையில் அரட்டுவ பத்திரிகைக்கும் நிச்சயம் ஒரு நோக்கமுண்டு. அந்த நோக்கம் தனது வர்த்தக ஏகபோகத்தை சுயவிளம்பரம் செய்கின்ற நோக்கமாகவும் இருக்கலாம்; அல்லது எதிர்கால அரசியல் நோக்கங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம். ஏற்கெனவே சிங்கள வர்த்தகர்களைப் பலப்படுத்துவதே தமிழ்த் தேசியத்தை வீழ்த்த முக்கிய ஆயுதமென்று சிங்கள வீரவிதான இயக்கம் நாடளாவிய ரீதியில் சிங்கள வர்த்தகர் சங்கங்களை ஆரம்பித்து செயல்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் பயங்கரவாத பூச்சாண்டித் தனத்தைப் பயன்படுத்தி தமிழ் வர்த்தகர்களை விரட்டுவது, விட்டுவிட்டு ஓடச்செய்வது, அவற்றைக் கைப்பற்றுவது, புதிய தமிழ் வர்த்தகர்களுக்கான வாய்ப்புகளை கிடைக்காமல் செய்வது என அவ்வியக்கம் ஏற்கெனவே பணிகளை ஆரம்பித்து விட்டது. அந்த வகையில் சிங்கள வர்த்தகர்களைப் பலப்படுத்துகின்ற அந்த தந்திரோபாயங்களில் ஒன்று தான் இந்த அரட்டுவ பத்திரிகையா என்கின்ற கேள்வியும் எழுகின்றது. ஏனெனில் பெண் தொழிலாளர்கள், சிறு உற்பத்தியாளர்கள், பெரு முதலாளிகள், என பல தரப்பினரது கட்டுரைகள், வெளிவந்திருக்கின்றன. ஆனால் இது வரை வெளிவந்துள்ள ஐந்து இதழ்களில் தமிழ்-முஸ்லிம் வர்த்தகர்களைப் பற்றியோ தமிழ் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இனவாத சிக்கல்கள் குறித்தோ எதுவும் எழுதப்படாதது இந்த சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன.

## மூலதனத்துக்கு ஆபத்து?

திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு இந்த வருடத்தோடு 20 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த 20 வருடகால விளைவாக இலங்கை அந்நியநாடுகளின் முதலீடுகளை நிபந்தனையின்றி திறந்துவிட்டுள்ளது. இன்று மனித வளம், இலங்கையின் கனிய வளம் என இலங்கையின் தேசிய சொத்துக்கள் அத்தனையும் அந்நியருக்கு சுரண்ட வழிதிறந்துவிடப்பட்டுள்ளமையானது உள்ளூர் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரை அந்நிய முதலீட்டாளர்களுடன் கூட்டு சேர்ந்து சுதேச சொத்துக்களை தாரைவார்த்துக் கொடுக்கின்ற தரகர்களாக ஆக்கியது. உற்பத்தித்துறையைச் சார்ந்த உள்ளூர் முதலாளிகளையும் பல்தேசிய தரகு முதலாளிகளாக ஆக்கியது. இப்படிப்பட்ட தரகர்களில் ஒருவரே இந்த லலித் கொத்தலாவல.

அண்மைய இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் வர்த்தக சமூகத்தின் முயற்சியையும் கூட இந்தப் பின்னணிகளோடு தான் நோக்க வேண்டியுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினை வன்முறைகள், குண்டு வெடிப்புகள், யுத்த நெருக்கடிகள் என்பற்றின் காரணமாக வெளிநாட்டு (கூட்டு) மூதலீடுகளுக்கான ஆபத்து நேர்ந்துள்ளது. இதன் காரணமாக இலங்கை எனும் சந்தை மட்டும் பாதிக்கப்படவில்லை. அவர்களின் மூலதனமும் சேர்த்து பாதிக்கப்படுகிறது. எனவே தான் இன்று தவிர்க்க முடியாமல் இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் (அந்நிய முதலீட்டாளர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவும்,) தவிர்க்க இயலாமல் நேரடியாகவே அரசியலில் தலையிட வேண்டியவர்களாக ஆகினர். அதன் விளைவு தான் வர்த்தக சமூகத்தின் சர்வ கட்சி மாநாடு மற்றும் இத்தியாதிகள்.

லலித் கொத்தலாவல மத்திய வங்கி குண்டு வெடிப்பின் போது செலிங்கோ நிறுவனத்தில் வைத்து காயப்பட்டு இரத்தம் சிந்தியவரென்றும், அவரது ஒரு கண் அதிகம் பாதிக்கப்பட்டதென்றும் எனவே அவரால் இனப்பிரச்சினையின் கோரத்தை நேரடியாகவே அனுபவிக்க முடிந்தவர் என்றும் "சர்வகட்சி மாநாட்டு" முயற்சிகளில் இவரின் பாத்திரமும் அந்தப் பின்னணிகளைக் கொண்டது என்றும் கூறுகின்ற சிலரும் உள்ளனர். ஆனால் முதலாளித்துவத்தின் வடிவத்தையும் அதன் தந்திரோபாயங்களையும் விளங்கிக்கொள்கின்ற எவருக்கும் அவை காரணங்களாக இராது.

இப்படிப்பட்ட நிலையில் தான் ஒரு முதலாளியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பத்திரிகையையும் அவரின் பின்னணி பணிகளையும் முதலாளித்துவக் கூட்டு தனது மூலதனத்தை பாதுகாக்க எடுக்கும் முயற்சிகள் குறித்தும் அவதானம் கொள்வதன் மூலமாக இந்த பத்திரிகையின் வரவை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும்.

இதே வேளை ஒன்றைக் குறிப்பிட வேண்டும். தமிழ் சிவிலியன்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் எப்படி சிங்களப் பத்திரிகைகளில் பேசாப்பொருளாக வைத்திருக்கும் பெரும்போக்கு தொடர்கின்றதோ அது போல தமிழ் பத்திரிகைகளில் இது தங்களின் தேசம் என்கின்ற உணர்வுக்கு வாய்ப்பற்றவர்களாக ஆக்கப்பட்டதனாலோ என்னவோ "ஒட்டு மொத்த" இலங்கையின் தேசிய அபிவிருத்தி, பொருளாதாரம் போன்ற விடயங்களும் தமிழ்ச் சூழலில் பேசாப்பொருளாக இருக்கின்றன. சிங்களப் பத்திரிகைகளில் தேசிய அபிவிருத்தி, தேசிய சீரழிவுகள், தேசிய பொருளாதாரம் சிவில் நிர்வாகம் என்பன குறித்து அதிகம் பேசப்படுகிற அதே வேளை தமிழ் பத்திரிகைகளில் இவை குறித்து அதிகமாக அலட்டிக்கொள்ளாத போக்கை எவரும் அடையாளம் காணலாம்.

அந்த வகையில் இந்த அரட்டுவ எனும் பத்திரிகையின் வரவு மேற்கூறிய காரணங்களோடு சிங்களச் சூழலில், பொருளாதாரம் குறித்த விடயத்தை மட்டுமே பேசுபொருளாக்கியிருக்கும் தனிப்பத்திரிகையாகவும் கொள்ளலாம்.


–ஜென்னி

අරටුව

ශ්‍රී ලංකාවේ ප්‍රථම සිංහල ආර්ථික පුවත්පත

நன்றி - நூலகத்திட்டம்





## டிசம்பர் 10 மனித உரிமைகள் தினம்:

# வடக்கு-கிழக்கும் மனித உரிமைகளும்!

மேலேயுள்ள படத்தை நீங்கள் ஏற்கெனவே பார்த்திருப்பீர்கள். இந்தப் படம் வீரகேசரியிலும் சரிநிகரிலும் வெளியாயிற்று.

கடந்த வாரத்தில் ஒருநாள் எம்முடன் பேசிக் கொண்டிருந்த அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதிநிதி இந்தப்படம் வன்னியில் எடுக்கப்பட்டது என்பதை நம்ப மறுத்தார். சோமாலியா அல்லது ருவாண்டா-வில் எடுக்கப்பட்ட படம் இது. பத்திரிகைகள் தமது விற்பனைக்காகவும், அரசின் மீது பழி சுமத்துவதற்காகவும் இப்படத்தைப் பிரசுரித்திருந்தன என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது.

அவர் மட்டுமல்ல இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விடயத்தில் அரசின் புள்ளி விபரங்களை நம்பியிருப்பவர்களுக்கு இது வன்னியில் எடுக்கப்பட்ட படம் என்பதை நம்புவது சிரமம் தான்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒபடகே அவர்கள் அண்மையில் வன்னிக்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பி வந்த பின்னர் மேலும் ஐம்பத்திரண்டாயிரம் பேருக்கு நிவாரண உதவி வழங்கச் சிபார்சு செய்தார்.

இதன் பின்னராவது, (ஒபடகே புலிகளுக்கு நிவாரணம் வழங்கச் சிபார்சு செய்யமாட்டாரென அவர்கள் நம்புவார்களாயின் ) அவர்கள் தமது நம்பிக்கையை மறுபரிசீலனை செய்வார்களோ தெரியவில்லை.

இன்னொரு அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதிநிதியோ, நாங்கள் வன்னியில் வேலை செய்கிறோம். எங்களுக்குத் தெரியாமல் இப்படி இருக்க வாய்ப்பில்லை என்று அடித்துக் கூறினார்.

நாங்கள் குடும்பத்தாருடன் அச்சிறுவனைச் சேர்த்து எடுக்கப்பட்ட புகைப்படத்தைக் காட்டினோம். அதன் பின்னர், இது போஷாக்-கின்மையால் ஏற்பட்ட பிரச்சினையாக இருக்காது. சிறுவனுக்கு ஏதாவது நோயாக இருக்கலாம் என்றார்.

அவருடைய வாதங்கள் குறித்து அதிகம் விளக்க வேண்டியதில்லை. பொ.ஐ.ஐ.முன்னணி அரசு ஆட்சி பீடமேறிய பின்னர் அடிப்படை மனித உரிமைகள் விடயத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று நிறுவ முயலும் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளில் அவரும் ஒருவர். அவ்வளவு தான்.

இவ்வாறானவர்கள் இப்போதைய பொ.ஐ.மு. ஆட்சியில் மனித உரிமைகள் மேம்பாடடைந்-திருப்பதாகவும், யுத்தம் நடாத்தும் பிரதேசத்திற்கே உணவும், நிவாரணமும் வழங்கும் உலகில் உள்ள ஒரே அரசாங்கம் பொ.ஐ.மு. தான் எனவும் கூறுவர்.

அத்தோடு ஐ.தே.க. ஆட்சியின் போது (87-89 காலகட்டத்தில்) ஏறத்தாழ அறுபதி-னாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்கள். இப்போது அவ்வாறான நிலைமை இல்லை என்றும் இது மனித உரிமைகள் விடயத்தில் இந்த அரசாங்கம் நியாயமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது என்றும் சொல்வர்.

உண்மை தான். தெற்கில் அவ்வாறான நிலைமை - அதேயளவு எண்ணிக்கையில் -காணாமல் போவது அல்லது கொல்லப்படுவது இல்லைத் தான். ஆனால் மனித உரிமைகள் என்பது வெறும் எண்களுடன் சம்பந்தப்பட்ட விடயம் அல்லவே. வடக்கு கிழக்கு நிலைமைகள் அம்மக்களுடைய அன்றாடம் 'வாழும் உரிமை'க்கு எவ்வாறு ஆப்பு வைக்கின்றன என்பதைச் சொல்லித் தெரிய வேண்டும் என்பதில்லை.

வன்னியில் மக்களைப் பட்டினி போடுவதனூடாக புலிகள் நடாத்தும் போராட்டத்தின் மீது வெறுப்பக் கொள்ள வைப்பதும், அவ்வாறு வெறுப்படையும் மக்களை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளுக்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர வைப்பதும் அரசின் நோக்கமாக இருக்கிறது என்பது மிகச் சாதாரணமாகப் புரிந்து கொள்ளக்கூடிய உண்மை.

இதற்காகவே ஏற்கெனவே உள்ள பொருளாதாரத் தடைகளோடு அரசு திட்டமிட்டு கடந்த ஜுலையிலிருந்து நிவாரண வெட்டையும் அமுல்படுத்தியிருக்கிறது.

இந்தப் பொருளாதாரத் தடை வன்னிக்கு மட்டுமானது அல்ல. எந்தெந்தப் பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லையோ அவ்வப் பிரதேசங்களுக்கெல்லாம் பொருளாதாரத் தடை அமுலில் இருக்கிறது.

மூதூரில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம், வாகரைப்பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம், வடமராட்சியில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் என அவை நீளும்.

இவை ஒருபுறமிருக்க மறுபுறத்தே அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று சொல்லிக் கொண்ட போதும் கீழ்வரும் சில உதாரணங்கள் அவ்வாறல்ல என்பதை நிறுவுகின்றன.

யாழ்ப்பாணத்தில் கிளாலியில் கடந்த வாரம் இரு சிறுவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்.

மட்டக்களப்பில் சஞ்சீவன் என்ற மாணவன் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட சம்பவம்.

யாழ்ப்பாணத்தில் படையினரின் தடுத்து வைப்பின் போது இருவர் கொல்லப்பட்ட சம்பவம்.

→

| பெயர் | பால் | வயது | நிரந்தர முகவரி | தற்காலிக முகவரி |
|---|---|---|---|---|
| *சம்பவம் — 01 —* | | | | |
| **98 ஒக்.01ம் திகதி கிபீர் தாக்குதலின் போது காயமடைந்தோர்:** | | | | |
| வீரமுத்து கிருஸ்ணசாமி | ஆண் | 41 | ஜீவநகர் முத்தையன்கட்டு | |
| கிருஸ்ணசாமி லக்ஷ்மி | பெண் | 38 | ஜீவநகர் முத்தையன்கட்டு | |
| *சம்பவம் — 02 —* | | | | |
| **98 ஒக்.22ம் திகதி தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற போது இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டோர்:** | | | | |
| சுப்பையா பாலராசா | ஆண் | 50 | பளைப்பனை வன்னிவிழாங்குளம் | 03ம் வட்டாரம், யோகபுரம் |
| செல்லையா தங்கையா | ஆண் | 52 | பளைப்பனை வன்னிவிழாங்குளம் | கிடாய்பிடித்தகுளம் வவுனிக்குளம் |
| *சம்பவம் — 03 —* | | | | |
| **98 நவ.01ம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடுவில் ஷெல் தாக்குதலால் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.** | | | | |
| கொல்லப்பட்டோர்: | | | | |
| வெற்றிவேலு சுதன் | ஆண் | 18 | புளியங்கூடல் ஊர்காவற்றுறை தெற்கு | 173, புன்னைவீராவி விசுவமடு |
| முருகையா நாகேஸ்வரன் | ஆண் | 17 | தென்னிந்திய திருச்சபை விசுவமடு | |
| காயமடைந்தோர்: | | | | |
| ராமலிங்கம் கந்தையா | ஆண் | 60 | விபுலானந்தர் தெரு மாதகல், யாழ்ப்பாணம் | 10வது மைல்கல் விசுவமடு |
| பரமசிவம் உதயனன் | ஆண் | 24 | 63/3, முரசுமோட்டை | D3, தொட்டியடி விசுவமடு |
| *சம்பவம் — 04 —* | | | | |
| **98 நவ.14இல் கிபீர் தாக்குதலில் கொக்காவிலில் இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.** | | | | |
| கொல்லப்பட்டோர்: | | | | |
| சாம்பசிவம் அருட்செல்வன் | ஆண் | 25 | மருதநகர் கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு |
| ராசு லக்ஷ்மி | பெண் | 75 | புத்துவெட்டுவான் | |
| காயமடைந்தவர்: | | | | |
| முத்தையா ரமணிதரன் | ஆண் | 28 | யாழ்ப்பாணம் | பாண்டியன்குளம் |



முல்லைத்தீவு மாவட்டம்-சுதந்திரபுரத்தில் கொல்லப்பட்ட பெண்மணி

*சம்பவம் — 05 —*

98 நவ.21இல் கிபீர் தாக்குதலின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிப்பு எனும் இடத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கராசா ஞானேஸ்வரி | பெண் | 19 | கொக்குதொடுவாய் | முறிப்பு, முல்லைத்தீவு |
| பாலச்சந்திரன் முகுந்தன் | ஆண் | 09 | கொக்குதொடுவாய் | முறிப்பு, முல்லைத்தீவு |
| களகலிங்கம் ஜெகனேஸ்வரன் | ஆண் | 11 | கொக்குத்தொடுவாய் | முறிப்பு, முல்லைத்தீவு |

காயமடைந்தோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| குணம் தெய்வமதன் | ஆண் | 16 | | முறிப்பு, முல்லைத்தீவு |
| தங்கராசா தங்கேஸ்வரி | பெண் | 16 | கொக்குத்தொடுவாய் | முறிப்பு, முல்லைத்தீவு |
| ராஜதுரை சுகந்தன் | ஆண் | 21 | | முறிப்பு, முல்லைத்தீவு |

*சம்பவம் — 06 —*

98 நவ.22இல் கிபீர் தாக்குதலின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கோட்டைகட்டியகுளம் எனுமிடத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஒன்பது பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| மோகன்ராஜ் நிலானா | பெண் | 07 | பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| செவ்வந்தி ஜேசப்பு | ஆண் | 60 | பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| லக்ஷ்மணன் நாகேந்திரன் | ஆண் | 23 | 5வது பாலம், பரந்தன் | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |

காயமடைந்தோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| ஜேசுராசா ஜெனிபா | பெண் | 11 | பாரதிபுரம் கிளிநொச்சி | சிவன்கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| ஜேசுராஜா அனுசாந்தன் | ஆண் | 03 | | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| குமாரசாமி நாகம்மா | பெண் | 58 | செல்வநகர், கிளிநொச்சி | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| சந்தனம் வள்ளியம்மா | பெண் | 46 | உருத்திரபுரம் கிளிநொச்சி | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| சந்தனம் கிருஸ்ணகுமாரி | பெண் | 19 | | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| லக்ஷ்மணன் கனகேந்திரன் | ஆண் | 19 | 5வது பாலம் பரந்தன் | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| ராசேந்திரம் குணசாந்தினி | பெண் | 32 | 5வது பாலம் பரந்தன் | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| செல்லையா வேலம்மா | பெண் | 57 | பெரியபரந்தன் கிளிநொச்சி | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |
| ரங்கநாதன் சுலோசனா | பெண் | 37 | ஒற்றைப்பாலம் கிளிநொச்சி | சிவன் கோவிலடி கோட்டைகட்டியகுளம் |

*சம்பவம் — 07 —*

98 நவ. 25ம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு எனும் பகுதியில் ஷெல் தாக்குதல் ஒன்றில் நால்வர் கொல்லப்பட்டனர். பத்துப் பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| ஜெயசீவரட்ணம் விநோதா | பெண் | 03 | நாவற்காடு அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 12வது மைல்கல் விசுவமடு |
| கிருஸ்ணன் தர்மரட்ணம் | ஆண் | 31 | நாவற்காடு அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 12வது மைல்கல் விசுவமடு |
| முருகையா பிரகாஷ் | ஆண் | 12 | புத்தடி வீதி விசுவமடு | |
| லோகநாதன் அகிலேஸ்வரன் | ஆண் | 17 | இருபாலை தெரு, கோண்டாவில் | விசுவமடு |

காயமடைந்தோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| கோவிந்தசாமி மகேஸ்வரி | பெண் | 43 | பாரதிபுரம் விசுவமடு | |
| ராமையா சின்னம்மா | பெண் | 50 | பாரதிபுரம் விசுவமடு | |
| செல்வராசா தாயம்மா | பெண் | 41 | பாரதிபுரம் விசுவமடு | |
| கிருஷ்ணன் குணரத்தினம் | ஆண் | 39 | நாவற்காடு அச்சுவேலி கிழக்கு, அச்சுவேலி | 12வது மைல்கல் விசுவமடு |
| சிதம்பரநாதன் சிவரங்கினி | பெண் | 16 | சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு | 12வது மைல்கல் விசுவமடு |
| சிதம்பரநாதன் சிவானந்தம் | ஆண் | 20 | சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு | 12வது மைல்கல் விசுவமடு |
| சிதம்பரநாதன் மணிமாலை | பெண் | 55 | சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு | 12வது மைல்தல் விசுவமடு |
| பெருமாள் சந்திரகுமார் | ஆண் | 15 | பாரதிபுரம் விசுவமடு | |
| மகாமணி சிலோன்மணி | பெண் | 30 | பாரதிபுரம் விசுவமடு | |

*சம்பவம் — 08 —*

98 நவ. 02 இல் முல்லைத்தீவு மாவட்டத்தில் நல்லதண்ணித்தொடுவாய் என்ற இடத்தில் கிபீர் தாக்குதலின் போது ஐவர் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடை்ந்தனர்.

கொல்லப்பட்டோர்:

| | | | |
|---|---|---|---|
| விசுவலிங்கம் யோகராணி | பெண் | 38 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| யோகதண்டன் மல்லிகாதேவி | பெண் | 36 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| ராஜலிங்கம் சுதாஸ் | ஆண் | 13 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| கமலநாதன் தனுஜா | பெண் | 15 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| வேலுப்பிள்ளை செல்லத்துரை | ஆண் | 79 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |

காயமடைந்தோர்:

| | | | |
|---|---|---|---|
| கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் | ஆண் | 50 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| சுப்பிரமணியம் கங்காதேவி | பெண் | 16 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| கமலநாதன் சரோஜாதேவி | பெண் | 38 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| கமலநாதன் சோதிமலர் | பெண் | 32 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |
| கமலநாதன் கங்காரூபி | பெண் | 16 | உடுத்துறை, யாழ்ப்பாணம்நல்லதண்ணிதொடுவாய் |



முல்லை - முறிப்பு பகுதியில் 98 நவ. 21 அன்று கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள்

அம்பாறை, மட்டக்களப்புப் பகுதியில் படையினர் மக்களை மனிதக் கேடயங்களாகப் பாவிப்பதும், சம்பளமில்லாமல் அவர்களைக் கொண்டு தமக்குத் தேவையான பங்கர் வெட்டுதல், காடுவெட்டுதல் என்பது போன்ற வேலைகளிலும் ஈடுபடுத்தல்.

கடந்த ஜனவரி முதல் வடக்குக் கிழக்கில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதும், இம்சைப்படுத்தப்பட்டதும், கொல்லப்பட்டதுமான சம்பவங்களின் தொகுப்பாக சரிநிகரில் வெளியான மிக நீண்ட பட்டியல்.

காரணமின்றிப் பொலிஸ் நிலையங்களிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக எந்த அறிக்கையாலும் காட்ட முடியாத நிலைமை.

வெலிக்கடைச் சிறையில் காரணமின்றிக் கடந்த ஒன்றரை வருடங்களாகத் தடுத்து வைக்கப்-பட்டிருக்கும் நடராஜா மகேஸ்வரி என்ற பெண்மணி தன்னுடன் சேர்த்துக் கைது செய்யப்பட்ட தனதும் தனது உறவினருடையதுமான இரு குழந்தைகள் தன்னிடமிருந்து பிரிக்கப்பட்டு ஆறு மாதங்-களுக்கும்மேலாகியும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியாமல் தவிக்கும் நிலைமை.

கிளிவெட்டியில் படையினர் நடாத்திய வெறியாட்டத்திலெ் கொல்லப்பட்ட மக்கள்.

தம்பலகாமத்தில் கொல்லப்பட்டவர்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக செம்மணிப் புதை குழி விவகாரம் இன்னமும் எதுவித நடவடிக்கை-யுமின்றி காரணமின்றிப் பின் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பது.

அரசாங்கம் இப்புதைகுழிகள் தொடர்பாக விசாரிக்க உத்தரவிட்டு விட்டதாகச் சொல்லிய போதும் அதிகாரிகளோ தங்களுக்கு எதுவிதமான உத்தரவும் கிடைக்கவில்லை என வெளிப்படையாக உண்மையைத் தெரிவிக்கும் நிலைமை.

மலையக இளைஞர்கள் தொழிற்சங்கப் போராட்டம் நடாத்தியதன் காரணமாக பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலைமை என்று மிக நீண்ட பட்டியலே வந்து விழுகிறது.

மனித உரிமைகள்தினத்தையொட்டி கொழும்பில் டிச.10இல் விழாக்கொண்டாடிக் கொண்டிருந்த போது வன்னியில் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் அரச படைகள் நடாத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களதும் , காயம்பட்டவர்களதும் பட்டியல் ஒன்று வெளியாகியிருக்கிறது.

இப்பட்டியலை வன்னிப் பிரஜைகள்குழு வெளியிட்டிருக்கிறது.

வழமைபோல இலக்குகள் மீது மிக நேர்த்தியாகக் குறிபார்த்துத் தாக்கியதில் இவ்வளவு பொதுமக்களும் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

இவையெல்லாம் யுத்தம் தமிழ் மக்களுக்கெதிரானதல்ல என்று யாராவது சொல்லக் கூடுமோ?

அப்படிச் சொல்லவும் சிலர் இருக்கவே இருக்கிறார்கள் என்ற உண்மைக்குஒரு சிறு உதாரணம் தான் மேலே சொன்ன படமும் அதற்குப் பதிலாக வந்த கருத்துக்களும்.

சிம்பு



முல்லைத்தீவு மாவட்டம்-சுதந்திரபுரத்தில் கொல்லப்பட்டோரில் ஒரு பகுதியினர்

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவனை தனது புதைகுழியை அவரையே வெட்டும்படி கூறி, இறுதியில் அவ்விளைஞனை சுட்டுக் கொன்று அதே குழியில் தள்ளிய சம்பவத்தை வடக்கு - கிழக்கு யுத்தத்தில் சிக்கிய எல்லைக் கிராமங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் ஆணைக்குழு மட்டக்களப்பில் கூடியபோது சாட்சியமளித்த வணபிதா தயாநிதி வெளிப்படுத்தினார்.



කොමිසන් සභාවේ සාක්ෂි විමසමින්

# "நாம் இன்று இருப்பது அழுது புலம்பக்கூடச் சுதந்திரம் இல்லாத சமூகத்திலேயே"

என்றாவது ஒருநாள் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்பாடுத்த முடியுமானால், யுத்தத்தால் இப் பிள்ளைகளின் மனங்களினுள் ஏற்பட்டுள்ள வடுக்கள் அதன் பின்பு நீண்டகாலத்திற்கு இருக்கும் என்பதை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

**இச்சம்பவம்** தீபாவளித் தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் இடம் பெற்றுள்ளது. அவ்விளைஞனை கொலை செய்த பின் அவரது வீட்டுக்குச் சென்ற சிப்பாய் ஒருவன் 'இம்முறை தீபாவளிக்கு உங்களது பிள்ளைக்கு புதிய உடைகள் வாங்கத் தேவையில்லை. நாம் அவரை இறைவனிடம் அனுப்பிவிட்டோம்' எனக்கூறியதாக ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த மேற்படி வணபிதா தெரிவித்தார். இதன்படி யுத்தம் செய்யும் பொறுப்பைவிட தமிழ் மக்களை இறைவனிடம் அனுப்பும் பொறுப்பும் அரச படைகள் வசம் உள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

கொல்லப்படாத சந்தர்ப்பங்களிலும், கைது செய்யப்படும் தமிழ் இளைஞர் யுவதிகளை அரச படைகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதாக அவர் தெரிவித்தார்.

உதாரணமாக, அவர் இன்னுமொரு சம்பவத்தையும் குறிப்படத் தவறவில்லை.

ஒரு முறை எமது கிராமத்தை இராணுவத்தினர் சுற்றி வளைத்து 20பேரைக் கைது செய்தனர். இவர்கள் அனைவரையும் கை, கால்களைக் கட்டி டிராக்டரில் போட்டுக் கொண்டு சென்றனர். செல்லும் வழியில் சாரதி டிராக்டரை கல்லின் மேல் ஏற்றிவிட்டார். டிராக்டரில் கட்டப்பட்டு இருந்தவர்கள் இதனால் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். இறுதியில் இவர்கள் அனைவரையும் வைத்தியசாலையில் சேர்க்கும்போது, இராணுவ வீரன் இவ்வாறு தெரிவித்தான்.

**"தமிழர்களை இப்படித்தான் கொல்ல வேண்டும். இவர்களுக்காக ஒரு துப்பாக்கி ரவையேனும் வீணாக்கக்கூடாது."**

இப்படித்தான், இராணுவம் மக்களை மதிக்கின்றது. நல்ல அதிகாரிகள் இராணுவவீரர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் பெருமளவிலான இராணுவத்தினர் இப்படித் தான்.

அதற்குப் பின், இச் சம்பவத்தைக் கேள்விப்பட்டு பெற்றோர் வந்து அழத் தொடங்கி விட்டனர். இவர்கள் இவ்வாறு செய்யத் தொடங்கியதும், இராணுவத்தினர் அவர்களைப் பயமுறுத்தத் தொடங்கினர். பொறுக்க முடியாத படசத்தில் நான் இவ்வாறு கூறினேன்.


'குறைந்தது அழுது புலம்பவாவது அவர்களுக்கு இடம்கொடுங்கள். அவர்களின் துக்கத்தை அவர்கள் அப்படியாவது வெளிக் காட்டட்டும்.

இதுதான் இன்றைய நிலைமை. இங்கு தமிழர்களுக்கு அழுது புலம்பக்கூட சுதந்திரம் இல்லை.

ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த மட்டக்களப்பு காந்திசேவைச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பாரதிதாசன் அவர்கள் பேசும்போது கடந்த காலத்தில் வெவ்வேறுபட்ட குழுக்கள் மற்றும் நபர்கள் வந்து இப்பிரதேச மக்களிடம் தகவல்கள் கேட்டுவிட்டுச் சென்ற போதும், அவர்கள் வாழ்க்கையில் இதுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்றார்.

கெவுலியாமடு கிராமத்தின் மக்கள் 1985 தொடக்கம் அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். அத்துடன் இந்நிலைமையை பயன்படுத்திக் கொள்ளும் சில சிங்கள குழுக்கள் அக்கிராமங்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ளன எனப் பாரதிதாசன் அவர்கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.


ஜீவஜோதி மைப்பின் தலைவர் ஆர். இளங்கோவன், கே. சசிகலாவுடன் சாட்சியமளிக்கையில்


" யுத்தம் புரியும் பொறுப்பை விட தமிழ் மக்களைக் கடவுளிடம் அனுப்பும் பொறுப்பையும் அரச படைகள் பொறுப்பேற்றுள்ளதா "

-வண. பிதா ஆர்.தயாநிதி, சாவகச்சேரி

'விவசாயியும் ஓய்வு பெற்ற அரச பயிர்ச்செய்கை ஆலோசகருமான மட்டக்களப்பைச் சேர்ந்த ஆர். சின்னத்தம்பி அவர்கள் சாட்சியமளிக்கும் போது பின்வருமாறு கூறினார். மட்டக்களப்பு பிரதேச மக்களின் பிரதான ஜீவனோபாயம் விவசாயமானபோதும், யுத்தம் காரணமாக, இன்று அவர்களுக்கு வழமையான ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது".

'முன்னேற்றமான தொழிநுட்பம் மற்றும் உபகரணங்களைப் பாவித்து அதிக அறுவடையைப் பெற்றுக்கொள்வதென்பது இன்று எமக்கு ஒரு கனவு மட்டுமே.

பாதுகாப்புக் காரணமாக, விவசாயிகளுக்கு இன்று காணிகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு காணிகளுக்குச் சென்றாலும், குறைந்த வசதிகளைக் கொண்டே விவசாயம் செய்ய வேண்டியுள்ளது. யுத்தத்தைக் காரணம் காட்டி நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஒழுங்காக மேற்கொள்ளவில்லை.

யூரியா தடை இன்னுமொரு பிரச்சினையாகும். அதற்கான நலன்கள் மட்டக்களப்பு விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. யூரியாவுக்கு பதில் அமோனியக் கலவையை பாவிக்குமாறு ஆலோசனையை கூறுகின்றனர்.

இதன்படி வேறு பிரதேசங்களில் யூரியாவுக்கு ரூ.300 செலவழிக்கும்போது, மட்டக்களப்பு விவசாயிகள் அமோனியக் கலவைக்கு ரூ.500வை செலவழிக்க வேண்டியுள்ளது.

அமோனியக் கலவையைப் பாவிப்பதனால், ஏற்படும் பாரிய பிரச்சினை, நிலம் விரைவில் வரண்டு விடுவதாகும் என சின்னத்தம்பி அவர்கள் தெரிவித்தார்.


"இரு சாராரிடமும் அடிபட வேண்டியுள்ளது"

அஹமட் லெப்பை —ஓட்டமாவடி


"பண்ணைக்குச் செல்வதும் கூட விவசாயிக்குப் பிரச்சினை"

— ஆர். சின்னத்தம்பி.


"வெளியார் தமிழ் கிராமங்களை ஆக்கரமித்துக் கொண்டிருக்கின்றனர்"

—பாரதிதாசன்

இவ் அனைத்து விடயங்களையும் யோசிக்கும் போது அரசியல் வாழ்க்கையைப் போன்று தமிழ் மக்களின் பொருளாதார அடிப்படையையும் அழிக்கும் தந்திரமான நடைமுறை ஒன்றுள்ளது என்ற சந்தேகம் சாதாரண தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளது என சின்னத் தம்பி அவர்கள் மேலும் குறிப்பிட்டார்.

ஓட்டமாவடிப் பிரதேசத்திலிருந்து வந்த முஸ்லிம் விவாகப் பதிவாளரான அகமட் லெப்பை அவர்கள் சாட்சியமளிக்கும் போது, 1990ல் புலிகளின் தாக்குதலினால் கிராமத்தை விட்டுச் செல்ல நேர்ந்த முஸ்லிம்கள் பலர் இன்னும் பொலன்னறுவையில் வாழ்கின்றனர். அத்துடன், அவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் கிடைப்பதில்லை என்றார். வேறு எதுவும் செய்ய முடியாததால் சிலர் கிராமத்துக்குத் திரும்பியுள்ளதுடன், புலிகள் மற்றும் இராணுவத்தினருக் கிடையிலான சமர் ஏற்படும் போது தாம் இடையில் சிக்கிக் கொண்டு தவிக்க வேண்டியுள்ளதெனவும் தெளிவுறுத்தினார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் யுத்தத்தினால், சிக்கலுக்குள்ளாகிய சிறுவர்களைப் பாதுகாக்கும் அமைப்பான ஜீவஜோதி அமைப்பின் தலைவர் ஆர். இளங்கோவன் அவர்கள், இங்கு சாட்சியமளிக்கும்போது யுத்தத்தினால், அகதிகளான சிறுவர், சிறுமியர்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் வாய்ப்பு இங்கு அதிகம் உள்ளதெனத் தெரிவித்தார்.

பாடசாலை செல்லும் வயதிலான இவ்வாறான சிறுவர், சிறுமிகள் வேலைக்கென பயன்படுத்தப்படுகின்றனர். உதாரணமாக, அடிப்படைவாதிகளின் மோசமான தாக்குதலுக்குள்ளான மைலந்தனை பூனானி கிராமத்தைச் சேர்ந்த கே. சசிகலா எனும் சிறுமியை ஆணைக்குழு முன் வரவழைத்து இளங்கோவன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"அத்தாக்குதல் நடைபெறும்போது, இச்சிறுமி அவரது பாட்டனுடன் இருந்துள்ளார். அவரைக் கவனிக்க ஒருவரும் இல்லை. இறுதியில் கொழும்பில் வீட்டு வேலைசெய்யவென அழைத்துச்சென்றுள்ளனர். இவர் இரண்டு வருடங்களின் பின் மீண்டும் கிராமத்துக்கு வரவேண்டியேற்பட்டது. அப்பொழுது தான் இவரைச் சந்திக்க வேண்டியேற்பட்டது. கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் இவருக்குக் கற்பித்தனர். நாமும் அவருக்கு உதவி செய்தோம். 5ம் வகுப்பு பரீட்சையிலும் சித்தியடைந்து இப்பொழுது மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் 7ம் வகுப்பு கற்கின்றார்".

### இவ்வாறு எத்தனை பிள்ளைகள் உள்ளனரோ தெரியாது?

பிரச்சினை என்னவெனில், இவ்வாறான சிறுவர்களை ஓரளவாவது புனருத்தாரணம் செய்யமுடிந்தாலும் தமது நெருங்கிய உறவினர்களின் மறைவினால் ஏற்பட்ட அதிர்ச்சியை அவர்களின் மனங்களில் இருந்து நீக்க முடியாது.

யுத்தம் காரணமாக அகதிகளான சிறுவர்களின் பிரச்சினை எவ்வளவு மோசமானது என்று இளங்கோவன் அவர்கள் ஆணைக்குழுவிடம் விளங்கப்படுத்தினார்.

"இந்நாட்டில் யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடிந்த போதும் இச்சிறுவர்களின் மனதில், உள்ள காயங்களை சுகமாக்க முடியாதென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்".

### இரகசியமாக வழங்கப்பட்ட சாட்சியமொன்று...

"நான் இங்கு இரகசியமாக சாட்சியமளிப்பதன் காரணம், எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதனாலாகும். இங்கு சாட்சியமளித்தவர்கள் அரச படைகள் தொடர்பாக கூறிய விடயங்களை நானும் ஏற்றுக்கொள்கிறேன். எனினும், அது முழுமையான கதையல்ல. நான் கூறப்போவது இதுவரை கூறப்படாத விடயமொன்றை.

யாழ். சமூகமும், மட்டக்களப்பு சமூகமும் வெவ்வேறுபட்ட பல வேறுபாடுகளைக் கொண்ட சமூகங்கள் இங்கு உள்ளதென மக்கள் சமாதானமாக சமூகமொன்றை எதிர்பார்த்திருந்தனர். இவ்வாறான நிலைமை ஏற்படுவதை புலிகள் விரும்பவில்லை.

குறிப்பாக, காட்டில் இருக்கும் புலிகள் தலைமைத்துவம் இதை விரும்பாது. இதனால், அவர்கள் பல்வேறு தந்திரங்கள் மூலம் மக்கள் வாழ்க்கையை குழப்புகின்றனர்.

மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கையின் சீரழிவுக்கு இவை வெளிப்படையான காரணமாக இருக்கின்ற போதும் இவை பற்றி எம்மால் கதைக்க முடியாதுள்ளது.

நன்றி : யுக்திய
தமிழில் : ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்





யுத்தம்-வேண்டவே வேண்டாம்.
இவ்வுலகத்தில் - வசந்தம் வர
சமாதான மலர்-பூத்துக்குலுங்க

எங்கள் பயணம்-சமாதானத்துக்கானதே
எங்கள் பிரார்த்தனை - சமாதானத்துக்கானதே
எங்கள் பிரார்த்தனை - சமாதானத்துக்கானதே
சமாதானமே-வாழ்க்கை

சமாதானமாயின்-வாழ்க்கை
யுத்தமாயின்-மரணம்
சமாதானமாயின்-சாது... சாது...
யுத்தமாயின்-டோங்... டோங்

# வாழ்வதற்கான உரிமை




டிசம்பர் 10ஆம் திகதி. சர்வதேச மனித உரிமைகள் தினம். இத்தினத்தை நினைவுகூருமுகமாக கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் என பல நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றில் இம்முறை விசேடமாக பலரது கவனத்தை ஈர்த்திருந்த ஒன்று தான் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமதுதுவத்துக்குமான இயக்கம் இன்னும் சில மனித உரிமைகள் அமைப்புகளுடன் இணைந்து விகாரமகாதேவி திறந்த வெளியரங்கில் ஒழுங்கு செய்திருந்த நிகழ்ச்சிகள். இந் நிகழ்ச்சிக்கு நாட்டில் பல்வேறு இடங்களிலிருந்தும் பெருந்தொகையானோர் இன, மத, சாதி பேதமின்றி கலந்துகொண்டிருந்தனர். அன்றைய தினம் பலத்த மழையின் மத்தியிலும் அந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த பெருந்திரள் மக்களின் அக்கறை இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை எட்டுவதற்கு கொண்டுள்ள உணர்வினை வெளிப்படுத்தியது.

மழையில் நனைந்துகொண்டே ஊர்வலத்தில் மேலெழுந்த குரல்கள் ஆச்சரியப்படுத்தின.

எங்களுக்கு வேண்டியது-வாழ்க்கை
பீதி பயமற்ற -வாழ்க்கை
எங்களுக்கு வேண்டும் - வாழ்க்கை
யுத்த பீதியற்ற - வாழ்க்கை

தசாப்தங்கள் இரண்டு-யுத்தம் புரிந்தோம்
வெற்றியீட்டியோர்-இன்னமும் இல்லை
மரணித்தோர் கணக்கு-நினைவில் இல்லை
வெற்றியீட்டியோர்-எவருமில்லை

வாழ்வதற்கு-இடமளியுங்கள்

இப்படியான கோஷங்களை எழுப்பிய வண்ணம் பலர் ஊர்வலம் சென்றனர். ஊர்வலம் விகாரமகாதேவி பூங்காவில் வந்தடைந்ததும் தமிழ், சிங்கள, முஸ்லிம் பண்பாட்டம்சங்களைக் கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடந்தன. யுத்தத்தின் அவலங்களையும் சமாதானத்தின் அவசியத்தையும் விளக்குகின்ற வீதி நாடகம், போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அன்றைய முழு நாளும் நடந்த இந்த நிகழ்ச்சியின் இறுதியில், இரவு விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்ட நிலையில் சமாதானம் வேண்டி கலந்து கொண்டோர் அனைவரும் ஒரே நேரத்தில் மெழுகுவர்த்தி கொழுத்தி சமாதானத்தை வேண்டி தங்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தினர்.

அன்றைய தினம் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் அமைக்கப்பட்ட எல்லைப்புற கிராமங்களின் விபரங்களைச் சேகரிக்கும் ஆணைக்குழுவின் அறிக்கையும் வெளியிடப்பட்டது.



'எங்களின் கிராமங்களில் மக்களுக்கு தண்ணீருமில்லை- வில்பத்து காட்டை கிட்டிய எங்கள் கிராமத்து மக்கள் இரவு நேரங்களை அக் காடுகளிலேயே கழிக்கின்றனர்.'

**விகாரகம சங்கரத்ன தேரர்**
**தந்திரிமலை எல்லைப்புற கிராம பிரதிநிதி**



'யுத்தத்தை நீடிக்க முயற்சிக்கின்றவர்கள் இன்று எல்லைப்புற மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் என்ன என்று கேட்கிறார்கள். இன்று அவர்கள் இந்தக் கூட்டம் நடக்கும் இடத்துக்கு வந்திருந்தார்களாயின் அதற்கு பதில் கிடைத்திருக்கும்.'

**பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண**
**சமாதான கூட்டமைப்பு**



'அன்று விவசாயிகள் வயலுக்கு மண் வெட்டியை எடுத்துச் சென்றனர் இன்று அவர்கள் துப்பாக்கிகளைக் கொண்டு செல்கிறார்கள். எந்த நேரத்திலும் குண்டுக்குப் பலியாகலாம் என்கின்ற பீதியில் தான் இன்று அந்த விவசாயிகள் விவசாயம் செய்கின்றனர்.'

**வணக்கத்து...ரிய நிர்மால் மெண்டிஸ்**
**அம்பாறை எல்லைப்புற கிராம பிரதிநிதி**



'நாட்டின் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையை நாசமாக்கின்ற அதேபோல பல ஆயிரக்கணக்கான மக்களை அகதிகளாக்குகின்ற இந்த யுத்தத்தை உடனே நிறுத்தக் கோருவதே எங்களின்குரல்.'

**புத்தியாகம சந்தரதன தேரர்**
**புத்தளம் எல்லைப்புற கிராமப் பிரதிநிதி**




நன்றி - நூலகத்திட்டம்



# நிர்வாணப் பட்ட மரம்

கவியுவன்



கடைசி நேர பஸ். பொருத்தப்பாடற்ற வேலையை கடன் கழியாய் செய்து முடித்து விட்டு, உறங்குவதற்கு மட்டுமேயான கூட்டை நோக்கிய விரைவில் நானும் என் நண்பனும்.

பஸ் இப்போதைக்கு புறப்படும்போல் தெரியவில்லை. கூடப் பயணிப்பவர்கள் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். துணிந்த சிலர் ட்றைவரைப் பேசவும் செய்தார்கள். சக பிராணிகளைப் போல், பஸ்ஸின் இழுத்தடிப்பு எல்லைகள் அதிகம் வெற்றிபெறவில்லை. வேலைக்கே சென்றால் சில நிமிடங்கள் அதிகமாகத் தூங்கலாம். அல்லது யோசிக்கலாம். வேறு என்ன இருக்கிறது எங்களுக்கு. அவர்களின் முணுமுணுப்புக்களோ வர வர அதிகமாயின. ஒருவர் தொடங்க இன்னொருவர் தொடர அடுத்தவர் அதை வேறு திசையில் இழுக்க வேடிறாருவர் முடிப்பதாய் வார்த்தைகளினால் ஆன ஓர் அஞ்சலோட்டம். தடங்களற்ற வெளியிலேயே பஸ்ஸினுள் சுற்றி சுற்றி நிகழ்ந்து கொண்டிருந்தது. எல்லோரின் நோக்கமும் ட்றைவரைப் பேசுவதிலும், திட்டுவதிலும், குத்தலாக் கதைப்பதிலும் குறியாய் இருந்தது. ஆனால், ட்றைவர் அது பற்றியெல்லாம் கவலைப் பட்டனவாய்த் தெரியவில்லை. அவனது சகா அலாதியாய் இழுத்தடிக்கும் மணிசத்தம் கேட்கும்வரை புறப்படுவதில்லை என்பதில் உறுதியாய் இருந்தான். அதை நன்றாகத் தெரிந்திருந்தும், நேற்றுப் பேசியதையே திரும்பவும் பேசுகின்றோம் என்பதைக் கூட மறந்தும் புதிதுபோலவும் புதிது புதிதாய் கருத்துக்களை உதிர்ப்பது போலவும் அவர்களின் நளினங்கள். அவர்கள் பேசிக்கொள்வது முழுவதுமாய் விளங்காவிட்டாலும் கூட விளங்கியவரை எரிச்சலாய் இருந்தது. நண்பனுக்கு விளங்கியதோ அதை விடக் குறைவு.

"ஏன் இவ்வளவு அவசரப்படுகின்றார்கள். எப்படியோ பஸ் புறப்படும்தானே" நேரம் இரவு ஒன்பது மணியை நெருங்கிக் கொண்டிருந்தபடியானால், தாய் மொழியை தவிர்த்து தஞ்ச மொழியில் வினவினேன்.

"உனக்கென்ன தெரியும். அவர்கள் என்ன எங்களைப் போலவா? எங்களுக்குத்தான் நாங்கள் எப்போது வேலை முடித்து வருவோம் என்று எதிர்பார்த்திருக்க யாருமேயில்லை. அவர்களுக்கு அப்படியில்லை தானே"

மூக்குகண்ணாடியைச் சரிசெய்தவாறே கொஞ்சம் முறைப்பாகச் சொன்னான். எனக்குத் தெரியும். அவனிடமிருந்து இப்படியான ஒரு பதில் ஒன்றுதான் வரும் என்று நன்றாகத் தெரியும். அவன் சுபாவமே அப்படித்தான். எந்த ஒன்றுக்கும் இருக்கக்கூடிய சகல பக்கங்களையும் மனதினுள் அலசுவான். பொறுக்கியெடுத்துப் பேசுவதுபோல் எப்போதேனும் ஓரிரு வார்த்தைகள் உதிர்த்தாலும் அவ்வளவும் முத்துக்களே.இன்று நேற்றல்ல கிட்டதட்ட ஏழு வருடங்களாக (அதில் இரு வருடங்கள் அறை நண்பனாக வேறு, இப்போது ஒரேயிடத்தில் வேலையும் கூட) அவனுடனான நட்பில் நிறைய சந்தர்ப்பங்களில் என்னைச் செதுக்கியவன். இதய ஆழத்தில் இருந்து பிரச்சினைகளை பிடுங்கியெடுத்து அங்கே மென் இறகுகளால் ஒத்தடம் இட்டவன். எந்த ஒன்றுக்குமான பதிலை கூடுமானவரை செய்கையால் உணர்த்துபவன். வாய், நான் முன்னமே சொன்னது-போல் அதிகம் திறப்பதில்லை. அவனைப் பொறுத்தவரை அது தேவையும் இல்லை.

"அப்படியானால், எல்லோருமாய்ச் சேர்ந்த ட்றைவரை இப்படிக் கரித்துக்கொட்டுவது சரியென்று செய்கின்றாயா"

அவன் பதிலில் திருப்தியுறாதவன் போல் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் உணர்வுகள் நீ புரிந்துகொள்ள வேண்டும். திரும்பவும் சொல்கிறேன். அவர்கள் எங்களைப்போல் இல்லை. அவர்களுக்கென்றொரு வீடு இருக்கும். உறவினர்கள் இருப்பார்கள். இரவுச் சாப்பாட்டைத் தயாரித்து மேசையில் வைத்து விட்டு இவர்களின் வருகைக்காக அவர்கள் பசியுடன் காத்துக்கொண்டிருக்கவும் கூடும். எனவே எந்த வகையிலும் இவர்கள் நேரத்துடன் வீடு திரும்பவே முனைவார்கள். அதனால்தான் இவர்கள் கோபப்படுகிறார்கள்"

வழமைக்கு மாறாக நீண்ட விளக்கம் கொடுத்துவிட்டு வழமையைப் போல் மௌனமானான். பார்வை வெளியே நீண்டது. அவன் எதனைக் குறிப்பாக நோக்குகின்றான் என்பதை அறிவதற்காக அவன் திசையை பின் தொடர்ந்தேன். இலக்கற்ற அவனது பார்வை எங்கு நிலைத்திருக்கின்றது என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. உண்மையில் அவன் எதையுமே பார்க்கவில்லை எனச் சொல்வதுதான் மிகச் சரி.

வீதியைப் பிரித்துப் போட்டிருக்கும் தடுப்-புக்கம்பிக்கப்பால் கிடைக்கும் இடைவெளியை பயன்படுத்தும் நோக்கில் விரையும் வாகனங்கள், எதிர்பக்க நடைவீதியில் கடைசி நேர லாபத்திற்காக வாய் வலிக்க கத்திக்கொண்டிருக்கும் தெம்பிலி வியாபாரி, அவன் முகத்தின் கவலை ரேகைகள் துலாம்பரமாய்க் காட்டும் விதத்தில் வெளிச்சம் பொருந்திய கடலை வண்டியுடன் கடலை வியாபாரி, அவர்களிருவரையும் புறக்கணித்து மறந்துவிட்ட எதையோ எடுத்து வரப்புறப்பட்டது போல், ஓட்டமும், நடையுமான சனங்கள். அவர்களில் யாரேனும் வந்து ஏறிக் குந்திக்கொள்ள மாட்டார்களா என தலையை வெளியே நீட்டி, நீட்டி நோட்டம் பார்க்கும் ஆட்டோ ட்றைவர்கள்....

எல்லாமே புறக்கோட்டை பஸ் தரிப்பிடத்தில் உயரக் கட்டடித்தில் இருந்து வரும் மஞ்சள் விளக்கொளியில் மங்கலாக.

எதுவுமே என்னை ஈர்க்கவில்லை.

ஈர்ப்பதற்கு இவை ஒன்றும் புதிதுமில்லை.

ஏழுவருட நகர (நரக) வாழ்க்கையில் எத்தினையோ முறை பார்த்தாயிற்று.

தலையைச் சற்றே நிமிர்த்தியபோது, 'அக்கரைப்பற்று' பளிச்செனத்தெரிய ஊருக்குச் செல்லும் பஸ் புறப்படத் தயாராய் நிற்பது தெரின்றது.

மனதில் என்னவோ ஒரு சிலிர்ப்பு.

இந்த பஸ்ஸில் இருந்து இறங்கி ஒரே ஓட்டமாய் ஓடி அந்த பஸ்ஸில் ஏறுவோமா என்றொரு விசர்த்தனமான எண்ணம் வந்து வந்த கணத்திலேயே மறைந்து போனது.

இப்பொழுதெல்லாம் நீண்ட சிந்தனைகளும் அதையொட்டி 'இப்படி விசர்த்தனமான எண்ணங்களும் வருவது இயல்பென்றாகிவிட்டது. அன்றும் இப்படித்தான் ஊரில் சவரம் செய்வதற்காக மட்டும் சலுனுக்குச் சென்றிருந்தேன். முடிவெட்டும் பெடியன் என்னைப் போர்த்தி பின்னுக்கு இறுக்கிக் கட்டிவிட்டு உச்சி மயிரில் நாலு வெட்டுவெட்டி எடுக்கும்வரை எனக்கு உறைத்திருக்கவில்லை என் முடிவெட்டப்படுவது. ஏதோ ஒரு உலகத்தில் இருந்து நான் விடுபட்டபோது உச்சிமயிரில் கொஞ்சம் போயிருந்தது. அதன்பின்தான் அடித்து பிடித்துக்கொண்டு சொன்னேன்.

"தம்பி சேவ் எடுத்தா மட்டும் 'போதும்" அவன் என்னை ஒரு மாதிரியாய் பார்த்தான்

"இவ்வளவு நேரம் வெட்டிக்கொள்ள எங்க இருந்த நீங்க"

அங்கு இருந்தவர்கள் எல்லோரும் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டார்கள்.

அன்று முழுவதும் அந்த பெடியனிடம் கேள்வியும் கூட இருந்தவர்களின் நமட்டுச் சிரிப்பும் என்னைத் துளைத்துக் கொண்டிருந்தது.

இரவில், புணர்தலுக்குப் பின்னான களைப்புற்ற நிலையில் கவிதாவுடன் எதையுமே பேசாது முக்டைப் பார்த்தபடி கிடந்தபோது துருவித் துருவிக் கேட்டாள்.

"என்னடா பிரச்சினை, என்னத்துக்கிடா கடுமையா யோசிக்கிறாய்" நீண்ட மௌனத்தின் பின் சலூனில் நிகழ்ந்ததைச் சொன்னேன்.

"என்னெண்டு தெரியல்ல குட்டி, யோசிச்சு யோசிச்சு இப்ப சில நேரம் நான் எங்க இருக்கன், என்ன செய்யிறன் என்ன செய்யவேணும் ஒண்டுமே தெரியுதில்ல குட்டி. இப்பிடியே போனா...." பிறகு என் குரல் பிசிறியது. நிறையப் பேச விரும்புகின்றேன் என்பதையும் பேச முடியாமல் திணறுகின்றேன் என்பதையும் அவள் புகுத்திருக்க வேண்டும். என் தலையை இழுத்து அவள் கழுத்திறக்குள் புகுத்தி மாறி மாறி ஆவேசமாய் முத்தங்கள் தந்தாள். கன்னம் சில்லிட்டது.

"யோசிக்காதடா கண்ணா, நான் இருக்கன்தானே, நம்மட பிள்ளைகள் இருக்குதுகள் தானே, நாங்கயெல்லாம் உனக்காத் தானேடா இருக்கம்" மீண்டும் முத்தங்களால் என் கண்ணிரை ஒற்றியெடுக்க முனைந்தாள். அவள் கொஞ்சம் கொஞ்ச என் சிந்தனை இப்படியே போனது.

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த மூத்தங்களும் தேற்றுதல்களும்? ஆக மிஞ்சினால் இரண்டு அல்லது மூன்று அதன் பின? அதன் பின் என்ன வழமைபோல் பேக்கைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு, பனிக்கும் உன் கண்கள் எனக்குத் தெரியாமல் நீ துடைக்க முனைவதைப் பார்க்காதவன் போல் நடத்துக் கொண்டு அடுத்த முறை அப்பா எப்பம்மா வாற எனக் கேட்டபடி படலை வரை துள்ளிக் குதித்து என் பின்னால் வரும் நம் செல்வங்களை திரும்பித் திரும்பிப் பார்க்க சக்தியற்று விரைவாகப் பிரிந்து போவேன். நான் தூரத்தே புள்ளியாகி மறையும் வரை உங்கள் கண்களும் பின்னே கழன்று மிதந்து வரும். முள்ளந்தண்டு எனக்கதை உணர்த்தும். ஆனாலும் நான் திரும்பிப் பாராது போய்க் கொண்டேயிருப்பேன். உச்சி வெயிலுக்கஞ்சி மாமரத்தின் கீழ் கூடியிருந்து காற்று வாங்கும் அயல் வீட்டவர்கள் என் பயணப் புறப்பாட்டை புதினம் பார்ப்பார்கள் அது அவர்களுக்கு பழகிப்போன புதினமென்றாலும் கூட.

உன் பார்வை எல்லையிலிருந்து நான் மறைந்த மறுகணமே அடக்கி வைத்திருந்த துயரம் பீறிட்டெழும்ப ஓடிச்சென்று மெத்தையில் வீழ்ந்து விம்பி விம்மியழுவாய் போதாதற்கு, நிலாமகன், வந்து "அப்பாவக் கூட்டி வா அப்பாவக் கூட்டிவா" என அடம்பிடித்து நிலத்தில் புரண்டழுவான். பின் பொழுதுகளில் புதையக் கிடந்த முகத்தை நிமிர்த்தி அழுந்த துடைத்துக் கொண்டு வீதியைச் சபித்தபடி எழுவாய். கவனத்தைத் திருப்ப ஏதோ ஒரு பொய் வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டு இளைக்க இளைக்க அதில் அமிழ்வாய். அல்லது முற்றத்தைத் தென்னை மரத்தின் கீழே பாயை விரித்து முதல்நாள் வரை நாம் சேர்ந்தமர்ந்த இடத்தில் போய் தனியே அமர்ந்திருப்பாய். உன்னையறியாமல் உன் கால்கள் நீட்டி நிமிரும். அங்கே எனது முகம் புதைந்து கிடக்காது. உன்ட நிலவு முகத்தைப் பார்த்தபடி அசைவின்றிக் கிடக்க மாட்டேன். ஆனாலும், உன் கைகள் என் முடியினைக் கோதிவிடுவர்போலும், நெஞ்சினில் வருடி விடுவதுபோலும் இச்சையின்றி காற்றில் அசையும். உன்னைத் தனிமையில் விடாது. சிலவேளை உன் உறவுகளும் உன்னைச் சூழ நிற்கும் தீர்த்தம் முடிந்த மறுநாள் சந்தடி அடங்கிப்போய் வெறுமையாய்த் தோற்றும் கோயில் வீதியிலே சில பழசுகள் மட்டும் கூடி நின்று விழா விரைவில் முடிந்துபோன ஏக்கம் பற்றிச் சிலாகிப்பதுபோல், அவ்வப்போது வந்து உனக்கும் பிள்ளைக்கும் முகம் காட்டிவிட்டுப் போகும் என்னைப்பற்றி சில நிமிடங்கள் உங்கள் பேச்சுப்போகும்.

அப்போதும் அங்கே காகங்கள் கரையும். அது என் வருகையைக் கட்டியம் கூறுவதுபோல் உனக்குத் தோன்றாது.

குயில்கள் கூவும் - நீ பதிலுக்குக் கூவமாட்டாய். மேய்யச்சலுக்குப்போன மாட்டுப்பட்டி புழுதியைக் கிளப்பியபடி முக்குவயலால் படையெடுத்துப்போகும், முதல் நாள் என் நாடியை நிமிர்த்தி, நீ குறிப்பிட்டுச் சொன்ன சீமைப்பசுபோன்ற அந்த அழகிய கறுவல்மாடு அன்றும் தன் கன்றை நாக்கால் நக்கியபடி அழைத்துச்செல்லும். இவையெல்லாம் உன் கண்ணில் தட்டுப்பட்டாது. தூரத்து நீர்ப்-பரப்பில் வலை எறிந்து கொண்டிருக்கும் வீச்சுக்காரர்ாகள் கூட உன் கண்ணில் துல்லியமாக விழுந்த சில நாட்கள் முதல் நாளுடன் முடிந்து போயிருக்கும். நீ அன்பாய் வளர்க்கும். கோழிகள் கூட அன்று பட்டினியாய்ப் போகலாம். நீ போடும் குறுணல் அரிசிக்காக வாய்க்குள் குறுகுறுத்தபடி அன்றும் அவை உன்னைச் சூழ நின்றுவிட்டு ஏக்கத்துடன் கூடு திரும்பக் கூடும். அங்கு வேறு எதுவும் மாறி இருக்கப்போவதில்லை.

எல்லாம் உள்ளபடியே, அதனதன் போக்கினிலே... உன்னைத் தவிர இரு மாலைப் பொழுகள் நமக்கு மட்டும் எவ்வளவு வேறுபாடு பார்த்தாயா?

நாம் கூடியிருந்த அதே முற்றம். அதே பாய். அதே தழுவும் மாலைத் தென்றல். கொக்கரித்துத் திரியும் அதே உன் கோழிகள். சடைத்துக் காய்த்து நிற்கும் உன் ஆசை அதே நெல்லி மரங்கள். கூடு கட்டியதுபோல அதே மாவிள் மரம். அதில் இலையைத் துருத்திக் கொண்டு தெரியும் அதே மஞ்சள் பழங்கள். எல்லாம் அது அதுவாகவே... நீயும் மட்டும் தனியே எரிந்து கொண்டிருப்பாய்.

நம் பிள்ளைகள் தேற்றுவதற்காய் நீ வாங்கிக்கொடுத்திருக்கும் இனிப்பையோ கடலையோ மென்றபடி எல்லாம் மறந்து விளையாட்டில் லயித்திருப்பார்கள். - இன்னொரு கணத்தில் என் இல்லாமை உறைத்து உன்னிடம் வந்து கேட்கும்வரை.

நீ சிரமமெடுத்து அடைகாத்துப் பொரிக்க வைத்த குஞ்சுகளை கடித்துக் குதறுவதற்காய் கீரிப்பிள்ளை தூக்கிக் கொண்டோடுவதைப் பார்க்கும் போதெல்லாம் உனக்குள் க்வியுமே துயரம் அதையும் விஞ்சிய துயரத்துடன் அந்த மாலைப்பொழுது கழிந்துபோகும் உன் வரைக்கும்.

நானோ ஓடும் பஸ்ஸில் மூலை இருக்கை ஒன்றில் உட்கார்ந்தவாறே தூரத்தெரியும் வெ... களை வெறித்தபடியிருப்பேன். வைக்கோல் மணக்க மணக்க மாட்டுவண்டிகள் என்னைக் கடந்து போகும். அரசடி தாண்டியதும் வரும் கோரை வெளிகளெங்கும் கொக்குக் கூட்டம் அலை அலையாய் எழும்பும். குட்டையில் மூங்கிக் கிடக்கும் எருமைக் கூட்டம் பஸ்ஸின் இரைச்சலில் தலை நிமிர்த்திப் பார்க்கும். உழைத்துக் களைத்த உழுவர்கள் வியர்த்த மேனியுடன் சைக்கிளை உழக்கியபடி வீடு திருப்பிக் கொண்டி-ருப்பார்கள். வைக்கோல் வேய்ந்த ஒற்றைக் கதவு செம்மண் குடிசைகளின் முன்னால் கந்தல் ஆடைகளுடன் குழுமியிருந்த புதினம் பார்ப்பவர்கள் சேனைப்புறத்துச் சிங்களச் சனங்கள்.

அவர்களைக் காணும்போதெல்லாம் அடிக்கடி நீண்ட பெருமூச்சுகளின் பின் நீ "நீங்க கூலி வேலை செய்யிற ஆளாயாவது ஊரோட இருந்திருக்கலாம். எனச் சொல்வது சொற்களால் திரித்த சாட்டையாய் மாறி முன்னும் பின்னும் விளாசும். அதன் வலிதாங்கமுடியாது, வீதியோடு சேர்ந்து வரும் ஓடையிலே அங்கங்மே 'தொப் தொப்' எனக் குதித்துக் கூச்சலிடும் வால்களின் வாயிலில் தொங்கியவாறே என் சிறுவயதுள் நுழைவேன். மீளப்பெறமுடியாது நான் தொலைத்த அற்புத உலகமொன்று என்னைக் கை நீட்டி அழைக்கும்.

அங்கே நீ இருக்க மாட்டாய்.

நம் பிள்ளைகள் இருக்க மாட்டார்கள்.

எங்கு சென்றாலும் கண்ணுக்குத் தெரியாத இழுத்துப் பிடிக்கும் கயிறுகள் இருக்காது.

துயரை நினைவாகத் தந்துவிட்டுப் போன அனேகர் அருப்பர்.

அப்பா, அண்ணா, அக்கா, கடைசியில் அம்மா என மறைந்து போன எல்லோரும் இருப்பர். சுழிப்பேயில்லாத முகத்துடன் மூத்தண்ணா இறுக்கம் தொற்றிக்கொள்ள முகத்துடன் அடுத்தண்ணா,

→

நன்றி - நூலகத்திட்டம்



வாழ்வை நகங்களுக்கிடையில் அழுத்துவரும் அலட்சியத்துடன் சின்னணா, ஊனக்கால்களை உதறி எறியும் துணிச்சலுடன் குலண்ணா, அப்போதும் அறிவார்ந்த முகத்துடன் கயண்ணா, வெகுளித்தனமான அக்காமார். எல்லோரும் இருப்பர். வாஞ்சனையற்ற முகத்துடன் நண்பர்கள் புழுதி மண்ணில் கட்டிப்புரண்டு சண்டை செய்வார்கள். விளையாடி முடிந்ததும், நன்றியில்லாமல் கிணற்றுக்குள் எறிந்த குண்டுகள் தானே ஒவ்வொன்றாய் எழுந்து வந்து என் கைகளில் உட்காரும். நத்தார் அடை மழையில் இறுகிப்போன முற்றத்து மண்ணில் நான் வரைந்த அர்த்தமற்ற ஓவியங்கள். காலங்களில் கரையாது என்னை விசாரிக்கும், தெரு வெள்ளத்தில் வீட்டுபுல் பூண்டில் பொறுத்திருக்கும் கப்பல் விடுபட்டு கரை சேர்வதற்காய் என் வருகையை அப்போதும் பார்த்திருக்கும். நான் திறந்துவிட மறந்த சுண்டுப்பேணிச் சிறைக்குள்ளே எனக்காக முட்டைகளை இட்டபடி காலத்தை வென்று உயிருடன் இருக்கும், பொன்வண்டுகள். இறகுகளை நசுக்கி, வண்ணங்களை விரல்களில் அப்பி அழகுபார்த்து, துடிக்கத் துடிக்க சாகடித்த பாட்டாம்பூச்சிகள் மட்டும் காற்றில் கலந்திருந்து என் காதுகளுக்குள் முணுமுணுத்துப்போகும். இப்படியாக, நொடிப்பொழுதுகளில் மூடிக்கொள்ளும் இமைக்குள்ளே இரு தசாப்சங்களை தாண்டிவிட்டு மீண்டு வர மனமில்லாமல் உனக்குள்ளும் விதிக்கதுள்ளும் திரும்பி வருவேன். 'தமண' தாண்டிய சிறிது நேரத்தில் வருகின்ற பெயர் தெரியாக் குளமொன்றின் நடுவே நெட்டென நிற்குமே அந்த ஒற்றைப் பட்ட மரம், அதுதான் என்னை நிஜத்திற்குள் இழுத்துவரும். பாவம் அது எப்போது பட்டுப்போனதோ? குளத்தின் நடுவே தனியாக - வந்தமரும் பறவைகளையும் (அவை நல்லவையோ, கெட்டவையோ) தாங்கிக்கொண்டு, முடிவு நாளை எண்ணியபடி...

கண்ணைத் திறந்து பயணித்தால் காட்சிகள் துளைத்து மனம் ரணமாகிப்போகும். மூடிப் பயணித்தாலோ நினைவுகள் குவிந்து அது கனமாகிப்போகும். இரண்டையும் தவிர்க்க தூக்கத்தை நாடியினால் கலங்கலான கனவுகளே மிஞ்சும். மனதுக்கொட்டா வாழ்வினை நோக்கி அந்த இரவுப் பயணம் முழுவதும் விழித்தபடியே கரைந்து போகும்.

கூடப் பயணிப்பவர்கள் விழுந்து விழுந்து தூங்கும் பின்னிரவிலே நான் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும்போது நீ அங்கே ஆழ்ந்துறங்கிக்கொண்டிருப்பாய். அடுத்து வரும் நாட்களிலோ உன்னைவிட ஆழ்ந்துறங்கிப்போவேன் அசதியிலும் களைப்பிலும்...."

இப்பயெல்லாம் நிறைய சொல்ல முனைந்தேன். எதுவும் முடியவில்லை.

அவளை இறுக்கி அணைத்தவாறே விடியும்போது இறந்து கிடக்கமாட்டோமா என்றொரு எண்ணமும் வந்தது. இப்போது என்னூர் பஸ்ஸில் ஓடிச்சென்று தாவி ஏற வேண்டும் போல் எப்படி விசர்த்தனமாய்த் தோன்றுன்றதோ அன்றும் அப்படியே.

அதோ! அது மெதுவாய் மெதுவாய் அசைந்து புறப்படுகிறது. நாளைக் காலையில் என் ஊரை அது தொட்டு நிற்கும். எல்லாம் அதனதன் இயல்பில் நடந்தால் எப்படியும் காலை ஒன்பது மணிக்கு முன்னம் அவர்கள் நான் மிதிக்க விரும்பும் அந்த இனிய மண்ணை மிதித்து நிற்பார்கள். யாரும் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் என் மகளைப் போய் பார்க்க போவதில்லை. ஆனால், அவர்கள் அந்த மண்ணைத் தொடுவார்கள். அவர்களில் ஒருவனாய் இருந்தால் இறங்கியதும் ஒரே ஓட்டமாய்அவளைப் பார்க்கவல்லவா செல்வேன். என் முகம் பார்த்தால் அந்த பிஞ்சு முகம் என்னமாய்த்தான் விரியும். சிலவேளை வருத்தம் கூட இருந்த வடுத் தெரியாமல் பறந்து போகலாம். கவிதாவின் மனதுக்கும் என்ன ஒரு ஆறுதல்? பாவம் அவள் தான் எவ்வளது சிரமப்படுகின்றாள்? மகள் படுக்கையில் முனகியபடி என்னையே கேட்டதாய் நேற்றுப் போனில் அழுதழுது சொன்னாள்.

"வந்து அவளை ஒரு தரம் பார்த்திற்றுப் போங்கோ" என்று மறந்தும் கூப்பிடவில்லை. கூப்பிட்டாலும் அது நடக்காது என்பது தெரியும்தானே. இருந்தும் என்னைக் காப்பதற்காய் என் நிலைமைகளைச் சொன்னேன். இன்னும் விம்முவது தெளிவாய்க் கேட்டது. காசு கட்டிய நிமிடங்களில் அரைவாசி விம்மலிலேயே கழிந்தது. போனை வைத்துவிட்டு கண்ணைத் துடைத்தபடி வெளியே வந்தபோது கவுன்டரில் இருந்தவன் அனுதாபப் பார்வைப் பார்த்தான். 'என்னை பிரச்சினை' என்றறிய [illegible]லாய் உள்ளதுபோல் கண்கள் சுழன்றன. காசையும் தயங்கித் தயங்கியே எடுத்துப்போட்டான். ஏதோ கேட்க அவனது காசையும் தயங்கித் தயங்கியே எடுத்துப்போட்டான். ஏதோ அவனது வாய் அசைந்தது. சத்தம் விரவில்லை. அங்கே கவிதா எப்படி வெளியே போனாளோ தெரியாது. அவசர சமயங்ஙங்களில் அவளிடம் கைக்குட்டையும் இருப்பதில்லை. அவள் சென்ற கோலத்தைப் பார்த்து போனில் அவளைப் பேசியிருக்கின்றேன் என்று யாரும் தப்பர்த்தமும் கொண்டிருக்கக் கூடும். கொண்டால் கொள்ளட்டும். அதுவா பிரச்சினை? மகளுக்கு இப்போது எப்படியோ தெரியாது.

ஏழு வருட நாடோடி வாழ்க்கையில் பிரிந்து வரும் சமயங்களிலெல்லாம் அவளைத் தூக்கிக் கொஞ்சி பதிலுக்கு ஆவளிடமும் முத்தம் பெறாமல் புறப்பட்டதே கிடையாது. இம்முறை வரும்போது அதுவும் நடக்கவில்லை.

நான் புறப்பட்டபோது அவள் வீட்டில் இல்லை. மதல் நாள் அண்ணிவீட்டிற்குச் சென்றிருந்தவள் சரஸ்வதி பூசைக் குஷாலில் அங்கேயே தங்கிவிட்டாள். மறுநாள் நான் கொழும்புக்கு போவேன் என்பதும், போகும்போது அவள் முகத்தைப் பார்க்க விரும்புவேன் என்பதும் தெரியாத வயது.

ஆறு வயதில் இதையெல்லாம் உணர முடியுமா என்ன?

அவளிடம் சொல்லிக்கொண்டு விடைபெறாததே பெரிய சுமையாய் இருந்தது. அதற்குள் இப்போது அவளுக்கு வருத்தம் என அறிந்தவுடன் இன்னும் அதிகமாக...

"கடவுளே! அவளுக்கு ஒன்றும் நிகழ்நது விடக்கூடாது. சென்ற வருடத்து இதே ஐப்பசி மாதத்தில் அம்மாவைத் திருப்பியழைத்துக் கொண்டதுபோல எதுவும் செய்து விடாதே. பாவம் அது பிஞ்சு. என் உயிர். சின்ன மொட்டு. கருக்கி விடாதே."

பிரார்த்திப்பதைவிட என்னால் எதுவும் முடியவில்லை. என்னதான் செய்யமுடியும்?

ஊர் பஸ் இப்போது நிலையத்தைவிட்டு மெதுவாய் அசைந்தது. வளைந்து நெளிந்து கிடைக்கும் இடைவெளியில் புகுந்து மெயின் வீதியைத்தொட்டு வேகம் பிடிக்கத் துடித்துக்கொண்டிருந்தது. கொலன்னாவையைக் கடந்தவுடன் அது பன்னிரு மணித்தியாலங்கள் காற்றாய்ப் பறக்கும். அதுவரை மெதுவாகத்தான் ஊர வேண்டும். வேறு வழியில்லை: தடைகள் அதிகமானபோது அது ஊர்வதையும் பின்னர் வேகமெடுத்துப் பறப்பதையும் நினைத்தபோது மனதில் ஏதோ ஒரு பொறி. சின்ன நம்பிக்கை. சந்தோசச் சாயல்.

"நம்முடைய வாழ்க்கை இப்படியேதான் கழிந்து போகப் போகின்றதா? 'எதேச்சையான திருப்பம்' என்று ஏதேனும் வந்துவிடாது" நண்பனை வி[illegible]னேன்.



"ஏன் திடீரென்று இக்கேள்வி"

'அவன் பதில் கேள்வித் தொடுத்தான்'

"விஷேசமாய் ஒன்றுமில்லை. சும்மாதான். வாழ்க்கை பற்றி யோசித்தபோது இப்படியொரு கேள்வி வந்தது"

"சரி. நீ இதற்கு என்ன பதில் எதிர்பார்க்கின்றாய்"

"ஏதாவது ஒன்று. மனதுக்கு இதமாக"

"அப்படியான ஒன்றை நீயே உனக்குச் சொல்லிக்கொள்ள முடியாதா"

"முடியும். ஆனால், அதில் உண்மையான இதம் கிடைக்காது"

சரி. இதே கேள்வியை உன்னிடம் நான் கேட்டால் உன் பதில் என்னவாயிருக்கும்"

".........."

"ஏன் மௌனம் சொல் உண்மையாகவா? இதமாகவா?"

"பொய்யான பதிலை இதமாகச் சொல்லி உன்னை ஏமாற்ற விரும்பமாட்டேன்"

"அப்படியென்றால்?"

"இதுவே நம் வாழ்க்கை என்பேன்"

"நல்லது. எனது பதில் அதுவல்ல. திருப்பம் என்ற ஒன்றில் எனக்கு அதிகம் நம்பிக்கைக் கிடையாது. அதேவேளை உன்போல் 'இதுவே நம் வாழ்க்கை' என்று சலித்துக்கொள்வதிலும் உடன்பாடில்லை. எங்கோ எப்போதோ பார்த்த வாசகமொன்று என் நினைவிற்கு வருகிறது.

'எந்தக் காரியத்தில் நீ திருப்தியற்றவனாய் இருக்கின்றாயோ அதில், இருந்து தப்பித்துக்கொள்ள உனக்கு ஒரேயொரு மார்க்கமே உண்டு. அந்தக் காரியத்தை இன்னும் எவ்வளவு சிறப்பாக செய்யலாம் என சிந்திக்க முனைவதே அது'

சின்னதோர் இடைவெளியில் அடிக்குரலில் சொன்னான். "ஞாபகம் வைத்துக்கொள். காரியங்களுக்கு மட்டுமல்ல. வாழ்க்கைக்கும் இது பொருந்தும்."

நெத்தியடியான அவனின் பதில் என்னை யோசிக்க வைத்தது.

நான் தேவையில்லாது அதிகம் அலட்டிக்கொள்கின்றேனா என்றும் தோன்றியது.

சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு மீண்டும் யன்னல் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

என்ன நினைத்துக்கொண்டானோ தெரியவில்லை. திடீரெனத் திரும்பி,

"மகளுக்கு இப்போது எப்படி" என்றான்.

"இன்னமும் வார்ட்டில்தான் முன்னேற்றம் ஏதும் தெரியாது. இனி மூன்று நாட்களுக்குப் பிறகுதான் கோல் எடுக்கவாம்.

உனக்குத்தான் தெரியுமே நம் வேலை நேரம் பற்றி. அதற்கிடையில் அவளிடம் இருந்து கோல் வராமல் விட்டால் போதும்."

உன்னிப்பாக எல்லாவற்றையும் கேட்டுவிட்டு தோழமையாய் ஒரு பார்வை பார்த்தான்.

அதிலே, 'உனக்காக நான் என்ன செய்யலாம்' என்பதான வருடல் இருந்தது. கண்கள் கலங்காமல் இருக்க மிகவும் சிரமப்பட்டேன். இமைகள் மூடியபடி அவன் தோளில் ஆதரவாய் சாய்ந்து கொண்டேன். அவன் மறுப்பாய் எதையும் சொல்லவில்லை. வேறு சமயங்களிலென்றால், "பப்ளிக்ல, இது என்ன பழக்கம் கப்பிள்ஸ் மாதிரி" என முறைத்துவிட்டு தலையை நிமிர்த்திவிடுவான். இப்போது ஒன்றும் சொல்லவில்லை. கவிதா என் தோளில் சாய்த்து பயணம் செய்வது அவன் தோளில் நான்.

எங்களின் பஸ் எப்போதோ புறப்பட்டு நீகல் சந்தியைக் கடந்து கொண்டிருந்தது. ட்றைவரைத் திட்டிய இரைச்சல்களும் எப்போதோ அடங்கிப் போயிருந்தன. என் இமைகள் மூடுவதும், திறப்பதும் தன்னிச்சையாக நிகழ்ந்து கொண்டிருந்தது. திறந்த பொழுதெல்லாம், கண்சிமிட்டும் வண்ண விளக்குகளாலான விளம்பரங்கள் ஜாலம் காட்டி மறைந்து மறைந்து தோன்றின. உறங்குவதற்கு இருட்டோ அமைதியோ தேவையற்று நடைபதையில் உறங்கும் [illegible]னிதர்களும் தெரிந்தார்கள். என்ன ஒரு கொடுமை. ஆனால், அவர்கள் அயர்ந்து உறங்குகிறார்கள். அது பெரிய விடயம்.

தலையைச் சரித்து நண்பனைப் பார்க்கி[illegible]றேன். கண்களை மூடி இருக்கின்றான். தூக்கமா? [illegible]ல்லது என்னைப்பற்றி யோசிக்கின்றானா? அல்லது சபிக்கப்பட்டவர்கள் எல்லோரையும் பற்[illegible]யா? அவனும் அடிக்கடி ஒன்றை மட்டும் சொல்வா[illegible]

"ஏன் தான் எங்களுக்கு 'கெம்பஸ்' கிடைத்த[illegible] தெரியல்ல. எங்கட நிலைமை வேதனை வெளியி[illegible] உள்ளவைக்கு எங்க தெரியப்போகுது" இன்னும் அவனுக்கு மணமாகவில்லை. யாரையும் காதலிக்கவும் இல்லை. காதல் உணர்வற்றவன் என்றுமில்லை. மனதில் ஒருத்தியை வரித்திருந்தான் என்று நினைக்கிறேன். அவனது மச்சாள்முறை சொல்லப்படாது மனதிலேயே அமுங்கிப்போன காதல்களில் அவனுடையது ஒன்றாகப் போயிற்று. குடும்பமாய் இருப்பதாய் பேச்சுவாக்கில் ஒரு நாள் சொன்னான். ஆனால், அது பற்றி அதிகம் கவலைப்பட்டுக்கொள்ளவில்லை. எனினும், எங்கோ ஒரு மூலையில் அது ஊமைக்காயமாக இருக்குமென்று நம்புகிறேன். இல்லாவிட்டால் இடையிடையே இருட்டை வெறிக்கும் இவனது பார்வைக்கு என்னதான் அர்த்தம்?

இருந்தும் பெரும்பாலான நேரங்களில் எல்லாம் மறந்து என்னமாக இயல்பாய் இருக்கிறான். இவனைப்போல் எல்லாவற்றையும் இலகுவில் மறந்துவிடமுடியுமென்றால்....?

தலையை நிமிர்த்தி விட்டான். என்ன என்று நிமிர்ந்து பார்த்தேன். அவன் இறங்கும் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் தூரம் கூடவே வர மாட்டானா?

எதுவரை அவன் வரமுடியும்....?

'குட் நைட்' சொல்லிவிட்டு இறங்கிப் போனான்.

அவன் தோளில் சாய்திருந்த தலையை இப்போது யன்னல் கம்பியில் சாய்த்தபடி சரிந்திருக்கிறேன். கன்னம் கம்பியில் படும்போதெல்லாம் குளிராய் இருக்கின்றது. இடையிடையே ட்றைவர் போடும் திடீர் பிறேக்கில் அடிபட்டு வலிக்கவும் செய்கின்றது. இருந்தும் நிமிர்ந்து நேராக இருக்க முனையவில்லை. பஸ்ஸின் முடிவிடம் மட்டும் அப்படியே சலனமில்லாமால் இருந்துவிடலாம் போல்.... நினைவுச் சுழியில் கண்கள் செருகின்றன.

அழுத்தும் துயரம் கவிதையாய் ஒழுகுகின்றது. அது வீணாய்ப் போகாமால் மெதுவாய் சொல்லிப் பார்க்கின்றேன். நீர் முட்டுகிறது. துடைக்கவும் மனமில்லை. அது அதன் பாட்டில் வழிந்து கொண்டிருக்க நான் சோர்வால் அது பற்றிய சுரணையில்லாமல்....

அந்த வேளையிலும் எவ்வளவு உற்சாகமாய் தனியாகவும், குடும்பமாகவும், ஜோடியாகவும் பயணிகள் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். நேரம் செல்லச் வெறுமையான இருக்கைகளின் எண்ணிக்கைகள் அதிகமாயின. கால ஓட்டத்தில் உறவுகளை நான் ஒவ்வொன்றாய் இழந்தது போல பஸ் தன் பயணிகளை ஒவ்வொன்றாய் இழந்து கொண்டிருக்கின்றது. இன்னும் சிறிது நேரத்தில் என்னையும் இறக்கிவிட்டு புகையைக் கக்கியவாறு கிளம்பிச் செல்லும். அப்போதும் அதற்குள் யாரேனும் தூங்கி கொண்டிருப்பார்கள் கலக்கமற்ற மனதுடன்.

எப்போது கிடைக்கும் எனக்கந்த மனது?

0 0 0

இரு நாட்களின் பின் அவனின் குழந்தை குணமடைந்த வீடு திரும்பியதாய் அவன் மனைவி போனில் சிரித்தபடி சொன்னாள். அவனுடன் சிரித்துச் சிரித்துக் கதைத்தாள். அவன் வழமைபோல் பின் தூங்கி முன் எழுந்து வேலைக்குப் போனான். வேலையை வெறுத்தான். நண்பர்களை விரும்பினான். அவர்களைச் சிரிக்க வைத்தான். அவனும் சிரித்துக் கொண்டான். நாட்கள் அதன் பாட்டில் போய்க்கொண்டேயிருந்தது. ஆனால், அந்தக்கேள்வி மட்டும் அவனுள் நுழைந்து, விரிந்து வியாபித்து அவனையே விழுங்கும் நிலையில் வந்து நின்றது. உலக இயக்கமே நின்று விட்டதுபோல் அவனுக்குத் தோன்றிய ஒரு மோனமான கணத்தில் அதன் பதிலை அவன் கண்டுகொண்டான். அப்போது அவன் முகத்தில் பூச்சிகள் ஊர்ந்தன. மயிர்கள் குத்திட்டு நின்றன. பட்டாம் பூச்சிகள் நினைவில் வந்தன. உதடுகள் விரிந்தன. கடைசியாய் துயரமாய்ச் சிரித்தான்.

அதன் பின் அமைதியாய் அடங்கிப்போனான்.

அவன் வீட்டிருந்து 'ஓ'வென்று எழும்பிய அலலக்குரல்கள் அதனையும் கெடுத்தது.

அந்த ஒற்றைப்பட்ட மரம் இப்போதும் நெட்டென நிற்கிறது, குளத்தின் நடுவே தனியாக.

□

நன்றி - நூலகத்திட்டம்

## கனடாக் குறிப்புகள்

# நெஞ்சில் எழுகின்ற நினைவெரியும் நினைவில் உயிர் பரவும் கதை எரியும்...

செல்வம் அருளானந்தம்

ஒக்டோபர் மாதம் ரொறொன்ரோ, கனடா யோர்க்வுட் மண்டபத்தில் மனவெளி நாடகக் குழுவினர் 'சரளா', 'எல்லாப் பக்கமும் வாசல்', 'காலம்' ஆகிய மூன்று நாடகங்களையும் 'கண்ணீரின் மறுபக்கம் குருதி ' என்னும் கவிதா நிகழ்வையும் மேடை ஏற்றினர். மனவெளிக் குழுவினர் இயக்கமாகித் திரட்சியும் வலுவும் பெற்று வருகின்றனர் என்பதை இந்நாடக அரங்கேற்றங்களுடன் நிரூபித்துக் காட்டினர். அந்நாடகங்களைப் பற்றிய சுருக்கமான மதிப்பீடே இக்கட்டுரை.

**சரளா**

சுமார் பத்து வருடங்களுக்கு முன் கல்கி பத்திரிகையில் சுஜாதாவினால் எழுதப்பட்ட நாடகம் இது. அமிர்தலிங்கம் புராந்தகனால் நெறியாள்கை செய்யப்பட்டு அரங்காடலில் முதலாவது நிகழ்ச்சியாக மேடை ஏறியது. இங்குள்ள பெண் விடுதலை அமைப்புக்களை மனதில் கொண்டு முடிவை மாற்றி பிரதியைத் தயார் செய்திருக்கின்றார் போலும் புராந்தகன். மர்மக்கதை என்றால் என்ன விஞ்ஞானக் கதை என்றால் என்ன சுஜாதா எல்லாவற்றையும் அழகாக எழுதுவார். பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளிலும், தனக்கு அக்கறை இருக்கிறதென்பதைக் காட்டுவதற்காக எழுதப்பட்ட நாடகம் என எனக்குத் தோற்றம் தந்தது அது. நாடகத்திற்கான சகல அம்சங்களும் பொருந்தி இருக்கின்ற பிரதி என்றவுடன் புராந்தகன் ஏமாந்திருக்கின்றார்.

தங்கள் கணவன்மார்களால் மனத்தாலும், உடலாலும் இம்சைக்குட்படும் இரண்டு சகோதரிகளின் உரையாடலே நாடகம். அப்பா, அம்மாவுடன் எவ்வளவு சந்தோசமாய் இருந்தோம் எனக் கடந்த காலத்தை நினைவு கூருகிறார்கள் அக்காவும் தங்கையும். ஆனால், அப்பாவும் அம்மாவும் சந்தோசமாக இருந்தார்களா என்பதைத் தங்கை ஆராயவில்லை. இன்றைக்கு இவர்களுக்கு இந்த நிலைமை என்றால் அன்றைக்கு இவர்களின் அம்மாவுக்கு எப்படியான நிலைமை இருந்திருக்கும்?

மனிதர்களுக்கு ஆயிரம் பிரச்சினை. அதுவும் பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு இருக்கும் சோகம் பிரத்தியேகமானது. இது நாடகம் பார்க்க வந்த பெரும்பாலாருக்கு விளங்கும். ஆனால், சுஜாதாவின் எழுத்து நேர்மை சந்தேகத்துக்கு இடமானது என்பதால் அது ஒரு தோதுக்கு எழுதிய நாடகம் என்ற எண்ணமே எனக்கு எழுந்தது. எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் நேர்மை அவசியம் என்று கருதும் எங்களைப் போன்றவர்களால் அப்படிப்பட்ட நாடகத்தைப் பார்க்கும் போது உறுத்துகின்றது. 'எப்படி செ. யோகநாதனை எங்களால் உறுத்தல் இல்லாது வாசிக்க முடியும்?' அப்படித்தான் சுஜாதாவின் பெண்ணிய நாடகமும் எங்களுக்கு!

நாடகத்தில் இரண்டே இரண்டு பாத்திரம். மனவெளி நாடகக் குழுவினர் கண்டுபிடித்த முத்தான நடிகைகளில் ஒருவர் நந்தினி சபேசன்: மற்றையது புராந்தகனின் அனுபவமிக்க தரமான நெறியாள்கை.

புராந்தகனே இங்குள்ள நாடகக்காரர்களில் முன்னோடி. சராசரியாக இருந்த கனடாத் தமிழ் நாடக உலகை தீவிரத் தளத்திற்கு மாற்றியவர்களில் முக்கியமானவர். தேடலும் அறிவும் கொண்ட புதிய பரம்பரையின் பழைய பிரதிநிதிகளில் ஒருவர். இவருடைய தொலைவு என்ற நாடகம் இங்கு முதல் அதிர்வைக் கொடுத்தது. பின் நிரபராதிகளின் காலம் நாடகம், மஹாகவியின் கவிதைகளைக் கொண்டு நெய்யப்பட்ட உய்ய விழையும் உலகு என்ற கவிதா நிகழ்வு, விட்டு விடுதலையாகி என்ற நாடகம் மஹாகவியின் குறும் பாக்களைக் கொண்ட நிகழ்வு என இவருடைய படைப்புக்கள் பெரும் வரவேற்பைப் பெற்றவை. எனக்குள்ள கேள்வி என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு இயக்குநர் ஏன் இந்தப் பழைய பிரதியைத் தூசு தட்டினார் என்பதே. நாடகப் பிரதிகள் கிடைக்காமை பொதுவான தமிழ் நாடக இயக்குநருக்கு இருக்கும் குறையே. அதுவும் ஒருவகையில் புரிந்துகொள்ளக் கூடியது தான்.

**எல்லாப் பக்கமும் வாசல்**

இது ஜெயகரன் எழுதி, நெறியாள்கை செய்த நாடகம். நல்ல சிறுகதையைப் போல இறுக்கமாகவும், அதேநேரம் ஆழ்ந்ததாகவும் தோற்றம் தந்த நாடகம். இருத்தல் பற்றிய கேள்விகள் சிலவற்றை உண்மையாகவே எழுப்பிய நாடகம்.

"ஓர் ஆள் என்றால் பெயர் இருக்க வேண்டும்."

"இல்லை. அதில் இருக்கின்றான். அது தான் பெயர்."

ஜெயகரன் நல்ல கலைஞன் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டும் உரையாடல்.

இந்தக் கனடா வாழ்வில் தமிழர் ஒருவருக்கு அந்நியமாதல் எப்படி நிகழ்ந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் நாடகமே இது.

சபேசன், சின்னத்தம்பி, பி.ஜே. டிலிப் குமார், பாபு என்ற மூன்று சிறப்பான நடிகர்கள். பார்ப்போரின் முழுக் கவனத்தையும் ஈர்த்து மேடையிலேயே குவித்து வைத்தார்கள். அதிலும் டி. திலீப்குமார் நாடகத்துக்காகப் பிறந்த ஓர் அதியப் பிறவி.

தாயகத்தின் நெருக்கடிகளாலோ அல்லது இங்குள்ள அந்நியமான வாழ்வாலோ மனப்பிறழ்வுக்கு உள்ளாகிய ஒருவர். ஊரிலும் இங்குமாய் வாழும் இன்னொருவர். இங்கு வந்து பொருளாதார ரீதியில் முன்னேறிய மூன்றாமவர்.

இவர்கள் மூன்று தடவைகள் ஒரு கோப்பிக் கடையில் சந்தித்து இருந்து உரையாடுவதே நாடகம்.

இதை ஓர் ஓரங்க நாடகமாய் ஆக்கி இருந்தால் இன்னும் சிறப்பாக ஆகி இருக்குமோ என எண்ணுகின்றேன்.

ஜெயகரன் இங்கு மாற்றுக் கருத்துக்கான தளத்தை உருவாக்கிய ஒருவர். அவருடைய சிந்தனைகளும், செயல்களும் இந்த நாடகத்தின் மூலம் வெளிவருகின்றன.

அவருடைய விசாரணைகள் நியாயமானவை. ஆனால், முடிவற்றவை...

நாடகம் என்றால் மாயையை உண்மையாக்கி உண்மையை மாயையாக்கி மேடையில் நிகழ்த்திக் காட்டுவது என்றும் சிலர் சொல்வார்கள். ஆனால், நாடகத்துக்கான கரு உண்மையாய் பொருந்திப் போகாவிட்டாலும் தாக்கமான, இறுக்கமான உரையாடல் மூலம் நடிப்பின் மூலம் நம்பகத் தன்மையைப் பெற்று வெற்றி பெறுகின்றது.

இருந்தும்; கனடாவில் பொருளாதார ரீதியில் வெற்றி பெற்ற ஒரு வீட்டுத் தரகருக்கு குடும்பம், நண்பர்கள் ஆகியன பற்றிய அக்கறையோ, அறிவு ரீதியான தேடல் பற்றிய தேவையோ, இறுதியில் மனம் குழம்பி மிகையாக உணர்ச்சிகளை மேடையில் கொட்டும் அவசியமோ ஏற்பட்டிருக்குமா? அது நாடகத்திற்கு சிக்கலை அவிழ்க்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்த போதிலும் அந்நியப்பட்டுப் போனவர்களுக்கு இலகுவான சமூகச் சூழல் ரீதியிலான விடையை ஆசிரியர் கொடுப்பதாகவே பார்வையாளர்கள் எண்ண இடம் கொடுத்து நாடகத்தை முடித்திருக்கிறார். அது அந்நியமாதல் என்ற உளவியல், இருப்பியல் நாடகத்திற்கு ஒற்றைப் பரிமாணத்தைக் கொடுப்பது போலாகி விட்டதென்றே கருதுகிறேன்.

**காலம்**

முற்றிலும் புதியவர்களால் புதிய முறையில் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் பாராட்டப்பட வேண்டியது. கனடிய நாடக மேடையில் ஓர் ஆரம்ப முயற்சி.

நடிகன் மேடையில், மலையில்லாத இடத்தில் மலை ஏறுகிறான். தண்ணீர் இல்லாத குளத்தில் நீந்துகின்றான். கணப் பொழுதில் காலத்தை மாற்றுகிறான். இவற்றுக்கு வார்த்தைகள் துணை புரியும். ஆனால், வார்த்தைகள் இல்லாத "குறியீட்டு நாடகம்" என்று அறிமுகப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்டது இந்நாடகம். குறியீடு குறிப்பால் உணர்த்துவது. அடையாளம் சின்னம். வாய் பேசாமல் வார்த்தைகள் இல்லாமல் நடிக்கப்படுவது குறியீட்டு நாடகமா? அது எப்படி இருந்த போதும் பார்வையாளர்கள் எதையும் பொறுமையாக அனுபவிக்கத் தயாரானவர்களாக இருந்தமையால் எப்படிப்பட்ட நாடகமும் அப்படிப்பட்ட பார்வையாளர்களால் அமைதியாகவும் பொறுமையாகவும் பார்க்க முடியும் என்பதையும் அம்மண்டபம் எடுத்துக்காட்டியது.

"குருத்துக்கள்" என்ற நாடகக் குழுவின் இந்த நாடகம் முன்பு சுவிற்சர்லாந்தில் மேடை ஏற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஊரில் சலவைத் தொழிலாளி படும் வேலைக் கஷ்டம். அவனுக்கும் முதலாளிக்கும் உள்ள ஆண்டான் - அடிமை உறவு. காணியை ஈடுவைத்து வெளிநாடு செல்ல வைத்த ஈழப் பிரச்சினை. காலம் மாறி முதலாளியும் வெளிநாடு சென்று ஒரே ஃப்க்ரறியில் சலவைத் தொழில் செய்யும் அவலம். முதலாளியால் வேலை செய்ய முடியாமல் திணறும் அற்புதமான நடிப்பு. நல்ல ஆனால், பழி வாங்குவது போன்ற கற்பனை அல்லது உண்மையே இந்நாடகம்.

கேள்வி, உயிர் பிடுங்கிகளின் காலம், அறிவு ஜீவியாய் வளரத் துடிக்கும் அப்பாவிப் பொதுமகனின் கேள்விகள், வீரர்கள் துயிலும் நிலம், தமிழர்கள் மத்தியில் ஒரு குறுக்கு வெட்டு முகம். புலரிக் கலவியும் இரவில் சமருமாய்க் கழிந்த ஒரு காலத்தின் பாடல் என்ற ஆறு கவிதைகள் நிகழ்வாக மேடையில் பாடி, நிகழ்த்திக் காட்டப்பட்டது.

காலத்தின் குரலாய் கவிதை இருக்கும் என்பதற்கு அக்கவிதா நிகழ்வும் ஒரு உதாரணம். "எதிரிகளாலும், புத்திரர்களாலும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட அரச குமாரி" என ஜெயபாலன் சொன்ன அந்தத் தமிழ் மக்களின் துயரமாய், இன்றைய தமிழரின் குரலாய் நான் இதை அடையாளம் கண்டேன். மனவெளியின் குரலாயும் இது இருக்கும் என நம்புகிறேன்.

தமிழர்கள் மத்தியில்: ஒரு குறுக்கு வெட்டுமுகம் என்ற கவிதை (?) சேரன் எழுதியது போல் தோற்றம் தரவில்லை. பிள்ளைகள் தமிழ் பேசுவதும், விடுவதும் தாய் தகப்பனில் மட்டும் தங்கி இருக்கவில்லை என்பதை சூழலின் யதார்த்தத்தில் நம்பிக்கை கொண்டவர்களால், வாழுபவர்களால் மட்டுமே உணர முடியும்.

வீரர்கள் துயில்கின்ற கல்லறையைப் பார்த்து: "கணப்பொழுதில் நெஞ்செரியும்: நெஞ்சில் எழுகின்ற நினைவெரியும், நினைவில் உயிர் பரவும் கதை தெரியும்" என்ற போது கண்கள் குளமாகும். நம்பாதே வார்த்தைகளை நம்பாதே" எனும் போது கேள்விகள் எழும்.

இரண்டு வயதுச் சிறுமி ஆரணியா பாபு தொடக்கம், கலாநிதி பார்வதி கந்தசாமி வரை எனப் பன்னிருவர் பங்குபற்றினார்கள். கோடி கோடி குரல்கள் எழவும் எனப் பாரதி சொன்னானே அப்படிக் குரல்கள் காற்றில் எற்றுண்டு எங்கள் மனதைத் தழுவின.

கடைசிக் கவிதை 'மிகச் சிறப்பாக நிகழ்த்திக் காட்டப்பட்டது. கடல் பெருகி அலைந்த வழியில் எங்கள் எந்தத் தடமும் எஞ்சவில்லை: வேர் அற உதிர்ந்த ஆயிரம் தென்னை மரங்கள் மீது தூவிக் கிடக்கின்றது. மணல்... நகர்கிறது, காலம்: இந்தப் பாடலை போலவே முடிவற்று..." என்று முடிகிறது நிகழ்வு.

யுத்தத்தினால் பலவாறாகப் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை, வாழ்வியலை மனதில் பதியும் மொழியாலும் துயரத்தாலும் நிகழ்த்திக் காட்டியது நிகழ்வு. பார்த்தவர்களை அசத்தினார் சேரன். கவிதைகளுக்கு உயிரும் உள்ளமும் உடலும் கொடுத்தார்கள் நடிகர்கள்.

எல்லாக் கவிதைகளையும் நிகழ்த்திக் காட்ட முடியாது. இருந்தும் சில கவிதைகளைச் சிறப்பாக நடத்திக் காட்டும் முயற்சியில் வெற்றி ஈட்டி இருக்கிறார் சேரன். கவிதைக்குள் கதைகள் இருந்தால் மட்டுமே நிகழ்த்திக் காட்ட முடியும் என்று எண்ணுகிறேன். சேரனின் கவிதைக்குள் மட்டுமா அல்லது எங்கள் ஈழ மண்ணின் எல்லாக் கவிதைகளிலுமே சோகக் கதைகள் உள்ளடங்கி உள்ளதா? அதனால் தான் எங்கள் தனிக் கவிதைகளைக் கூட நிகழ்த்திக் காட்ட முடிகிறதா? அல்லது ஈழக் கவிதைகள் அத்தனையுமே அப்படிப்பட்டவையா? ஏனென்றால், நீலாவணனின் கவிதைகளானாலும் சரி, சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளானாலும் சரி, மஹாகவியின் கவிதைகளானாலும் சரி மேடையில் நிகழ்த்த முடிகிறதே? அக்குணம் ஈழத்துக்குரிய தனிச் சிறப்பா? அல்லது எம் கவிதைகள் என்ற வரைவிலக்கணத்துள் அடங்க மறுக்கிறதா? அல்லது அத்தனையுமே தன்னுணர்ச்சிப் பாடல்களா? எது எப்படி இருப்பினும் அழகாக உச்சரித்துப் பாடி, நிகழ்த்தப்பட்டு மேடையில் காலம், வெளி ஆகியவற்றைக் கடந்து நின்றன சேரனின் கவிதைகள். □

---



## உள்மன வெளிப்பரப்பினில்

-மஜீத்

துயர்களின் மென் இடைவெளிகளுக்கிடையே
அதுவும் நிகழ்ந்தாகிவிட்டது
அழகிய கண்களின் வழியே
ஒரு செங்கால் நாரையாய்
இனி அதுவும் என் தோளில் அமர்தல் கூடும்.

நிகழ்ந்தது பற்றி
புதிதாய் எதுவும் கூறுவதற்கில்லை
அதன் உள்வழியின் பின் கதவினூடே
தாழ் மனப்பரப்பின்
தழும்பல் விசையினூடே
என் நிஜத்தின் பலம் பற்றிய வீரியம் நழுவி
விரல் அசைவுகளில்
இமை வெட்டுக்களில்
குதிகால் கசக்குதலில்
ஒரு புழுவாய் அல்லது
குப்பை எரியும் கணத்துப் புகையாய்
சுழன்று சுழன்று மேலே கிளம்புகையிலும்
உணர்வுகளின் நம்பிக்கை மழைமேகமொன்று
நொருங்கி விழுதல் குறித்தும்
உண்மையும், பொய்யும் மிக ஆழத்தில்
பிரிக்க முடியாதபடி இணைந்திருப்பது குறித்தும்
துயர்களின் மென் இடைவெளிகளுக்கிடையே
கடவுளிடம் என் மனம் பாடிக்கொண்டேயிருக்கும்

98.10.24

நன்றி - நூலகத்திட்டம்



# மாற்று இசை மரபைத் தேடி...

நவம்பர் 4ம் திகதி கொழும்பு லயன்ற் வென்ற் அரங்கு பார்வையாளர்களால் நிறைந்துள்ளது. ஒரு வகையில் இலங்கைத் திருநாட்டின் மேற்தட்டு பார்வையாளர்கள். மேசையில் மங்கல் ஒளியில் தவமியற்றுவதுபோல் தபேலா, கடம், மிருதங்கம், டிரம் செற் ஆகிய இசைக்கருவிகளும், இருக்கைகளும் ஒலிவாங்கிகளும் காணப்பட்டன.

மாலை 7 மணியவில் மங்கள விளக்கேற்றலுடன் பிரதீப்பாஞ்சலி - 3 எனும் இசை நிகழ்வு ஆரம்பமாகியது. பிரதீப் இரத்தினாயக்கா எனும் இளைஞர் பல வருட இசைப் பயிற்சியினை இந்தியாவில் லக்னா இசைக்கூடத்தில் பயின்று இலங்கையில் நடாத்தும் மூன்றாவது இசைநிகழ்வு இதுவாகும. இம்மூன்று இசைநிகழ்வுகளும் இலங்கையில் மாற்று இசைமரபைத் தோற்றுவிக்கும் எண்ணத்துடன் செயல்வடிவம் பெறுகிறது.

நிகழ்வில் காலஞ்சென்ற தனது குருவுக்கு அஞ்சலி செய்யும் கோர்வையுடன் பிரதீப் ஆரம்பித்தார். அவரது மனைவியும், ஆங்கில எழுத்தாளருமாகிய மதுபாசினி இரத்தினாயக்கா தம்புராவுடன் துணை சேர்ந்தார். சித்தார் இசையில் புதிய பரிணாமங்களைத்தேடி நடத்தும் பயணம் என தனது முயற்சிகளை வர்ணிக்கும் பிரதீப் இரத்தினாயக்கா தொடர்ந்த நிகழ்ச்சிகளில் தனது ஆக்கத்திறனையும் இசையில் தாண்ட விரும்பும் உயர்தரத்தையும் நிறுவமுயன்றார்

ரவிசங்கரின் பிரபல இசைக்கோர்வையான 'கிழக்கைச் சந்திக்கும் மேற்கு' என்பதனை வயலின் கலைஞர் லக்ஸ்மணனுடனும், தபேலாக் கலைஞர் சாந்தா சேனரத் யாப்பாவுடனும்,கச்சிதமாக விறுவிறுப்புடனும் தனது சிதாரினுாடாக அமைத்தமை அவரது இசை நேர்த்தியை இரசிக்க வழிகோலியது.

சிறப்பு நிகழ்வாக அமைந்த 'போரின் பின்னால்' இசைக்கோர்வை மூன்று கவிஞர்களின் கவிதை வாசிப்புடன் தொடங்கியது. சிங்களக் கவிஞர் நிகால் கலப்பத்தி தனது கவிதையை முதலில் வாசிக்க, ஆங்கிலக் கவிஞர் ஆன் ரணசிங்காவின் கவிதையை இலக்கிய விமர்சகரான கொழும்பு பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி. நெலுபர் டீ மெல் வாசித்தார். தமிழ்க் கவிஞர் மு. பொன்னம்பலம் தனது கவிதையை எடுத்துரைத்தார். இக்கவிதை வாசிப்பு இசைநிகழ்வின் இடையில் கருப்பொருளுக்கு ஏற்றவிதமாக அமைக்கப்பட்டபோதும், அதனை ரசிகர்களின் உணர்வைத் தொற்றவைக்கும் வண்ணம் இணைத்து ஒரு கலா நிகழ்வாக/ கவிதா நிகழ்வாக மாற்றாதது ஒரு குறையாகவே இருந்தது. ஆயினும், தொடர்ந்து இசைக்கப்பட்ட 'போரின் பின்னால்' இசைக்கோர்வை மிகுந்த கற்பனை நயத்துடனும் ஏற்ற இறக்கங்களுடனும், அமைந்தமை பார்வையாளரை ஒரு போர்க்களத்துக்கு பின்னால் தோன்றும் நிர்ச்சலமான சூழலுக்குள் இட்டுச் சென்றது. இது ஒருவகையில் கவிதை வாசிப்பு ஏற்படுத்தத் தவறிய நாடகத் தாக்கத்தினை உண்டு பண்ணியது எனலாம்.

அதற்கு முக்கிய காரணம் போரின் பின்னால், இசைக்கோர்வை வெறுமனே இசைக்கருவிகளுடன் மட்டும் நிற்காது மனிதக் குரலின் வளமிக்க ஓசையையும், இராக ஆலாபனையையும் பயன்படுத்தியமையே ஆகும்.




போர்தரக்கூடிய பல்வேறு உணர்வுகளையும் பார்வையாளரிடையே ஊட்டியமை நிகழ்வின் நோக்கை பூரணப்படுத்தியது என்பது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. குரலிசையில் ரஷ்மி சங்கீதாவின் குரல் வழங்கிய ஓலம்மிக்க ஏக்க உணர்வு தொலைதூரத்தில் எங்கோ ஒரு பாலையில். காட்டில், தனிமையில், புரளும் மானுடத்தின் துயரினை எமது மனக்கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. இந்தக் குரலுடன் இணைந்த ஆண்குரல்களும் தந்த ஒத்திசையும் உணர்வுத் தாக்கமும், இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் சுரண்டியது. அதற்கு இதம் சேர்த்தாற் போல் பிரதீப் இரத்தினாயக்காவின் சிதார் இசை டிரம் அதிர்வுக்கு அணை போட்டது. கடம், தபேலா, மிருதங்கம் என்பவற்றுடன் இணைந்து வழங்கிய "மகிழ்வு" எனும் அடுத்த "கோர்வையூடாக புதிய இசை முறைகளினாலும் ரசிகர்களை கவர முடியும் என சிதார்க்கலைஞர் பிரதீப் இரத்தினாயக்கா நிரூபித்தார்.

இறுதிநிகழ்வாக பிரதீப் தயாரித்தளித்து மேற்கு ஜாஸ் இசையோடு சேர்ந்த ஒன்று. புல்லாங்குழல், டிரம், கிற்றார் என்பன சித்தாருடன் சேர்ந்து பார்வையாளரை கதிரைகளின் நுனிக்கு நகர்த்தின என்றால் மிகையாகாது.

துாயசங்கீதம் பேணுவோம் எனும் மூடத்தனத்துக்கு சாவு மணி அடிக்கவேண்டிய சமூகக் கட்டமைப்பில் நாம் உள்ளமையை இந் நிகழ்வு துலாம்பரமாகக் காட்டியது. அதாவது கீழைத்தேய தொல்சீர் சங்கீதத்தை அதன் தனித்துவம் காக்கவேண்டி ஆக்க சங்கீதத்துக்கு வழிகோலாது இருக்கும் எம்மவர் போலல்லாமல் கருதி - லய ஒத்திசையுடன் மேற்கு இசைமரபுக் கூறுகளையும், இசை மரபையையும் சிதார் இசைக்கோலத்துடன் இணைத்தமை சபையின் கவனத்தினை ஈர்த்தது. சமகால கருப்பொருட்களை பயன்படுத்தி இசைக்கோலங்கள் ஆக்கவேண்டிய நம் கலைஞர்கள் வெறுமனே மழைய மரபு சங்கீத உருப்படிகளை மட்டும் உருப்போட்டு காலத்தின் குரல்களாக மாறாமல் போகும் அவலத்தினை நாம் அனுபவிக்க வேண்டியுள்ளது.


இவ்விடத்தில் அண்மையில் வெளிவந்த 'கொலோனியல் கசின்ஸ் (Colonial Cousins) எனும் இசைநாடா பற்றி குறிப்பிடுவது சாலச்சிறந்ததாகும். தமிழகத்து சங்கீதக் கலைஞரும் சினிமாப் பாடகருமான ஹரிகரன் மேற்கத்தேய லெஸ்லி எனும் இசைக் கலைஞருடன் இணைந்து வெளியிட்ட நாடா பலரது கவனத்தையும் ஈர்த்தது என்பது பலரும் அறிந்ததே. இசை மரபில் மட்டுமல்லாது தத்துவ மரபிலும் இவ்விரு கலைஞர்களும் இணைந்து படைத்த பிரபல பாடல் கிருஷ்ணா இயேசுவே மீண்டும் வாருங்கள்' என்பது.

இவ்விதமாக இன்று ஈழத்திலக்கியம் போல, ஈழத்திசைமரபு ஒன்றையும் தோற்றுவிக்க வேண்டும் என்று அவ்வப்போது கருத்தாடல்கள் நடைபெற்று வருகின்ற வேளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக கலை கலாசார மன்றத்தினர் அண்மையில் வெளியிட்ட 'வன்னி ஓடை' எனும் இசைநாடா பற்றியும் குறிப்பிடுவது காலத்தின் கட்டாயம் ஆகும்.

அகளங்கள், வீரமணி ஐயர் போன்ற ஈழத்து பாடலாசிரியர்களுடன் மாணவர்கள் தாமும் எழுதிய தத்துவப்பாடல்களை தாமே இசையமைத்து பாடிவெளியிட்டுள்ளார்கள். சினிமா இசையின் மோகத்தில் மட்டும் ஆழ்ந்து போகாது ஈழத்து மண்வாசனையுடனும், வாழ்வு உணர்வுடனும், மெல்லிசை சார்ந்த பாடல்களை வெளியிட்டமை இதுபோன்ற ஆக்க இசைமுயற்சிகளுக்கும் ஈழத்திசை முயற்சிகளுக்கும் கட்டியம் கூறுவது போல ஆகும்.

போராட்டப் பின்னணியோடு நாடக உலகும், கவிதையுலகும் வளர்ந்தமையோடு நாடக முயற்சிகளோடு. நாட்டார் இசையும், புதிய இசை மரபும் வளர்க்கப்பட்டன. அவை இன்னும் தொடரப்பட்டு வளர்த்தெடுக்கப்படுவதற்கு மாற்று இசையாளர்களின் வளர்ச்சி அவசியம். இது புதிய நுாற்றாண்டில் ஈழத்துத் தமிழிசை வளர்ச்சிக்கு வழிகோல வேண்டும் என்ற சிந்தனைக்கு சிங்கள இசைக்கலைஞர்கள் பிரதீப் இரத்தினாயக்காவின் மாற்று இசை நிகழ்வு எம்மவரைத் துாண்டட்டும்.


கந்தையாஸ்ரீகணேசன்



## புகைப்படம்

பெண்ணதும், ஆணதும் புகைப்படம் ஒன்றுள்ளது.
கரு நிறத்தவனாய் அவனும்,
அவனை விட மிக மிக மிக வெள்ளையாய்
அவளும்.
மென்மையான அந்தப் பெண்ணருகே
சிரித்துக் கொண்டிருக்கும் கருத்த நிற அவனுக்கு
அவள் 'ஓம்' பட்டாள்.
புகைப்படம் கறுப்பான வெள்ளையான இவர்களதே.
வெளியே ... வெறுப்பு அவர்களைச் சூழ்கிறது:
மனிதர்கள் நடந்தவாறே
முகஞ்சுளிக்கிறார்கள்.
அவள் தந்தை கத்துகிறார்:
" என் மகளே, நீ என்னை அவமானப்படுத்தி விட்டாய்"
(எனினும்) அவள்
தன் காதலைக் கட்டிக்காக்கிறாள்.
பின் அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள்,
அது 'பிறவுண்' நிறத்தது:
'கலப்பினமாய்' வளர்கிறது.
பின், குழந்தை யுவதியாகிற(ாள்)து,
கருந்தோல் மனிதன்
புகைப்படத்தை மட்டும் விட்டுச் செல்கிறான்
யுவதி பெண்ணாகிறாள்- பெண் நானாகிறேன்
கருப்பான மனிதனுக்கு 'ஓம்' பட்டு
காலங்காலமாய் வெறுப்புச் சூழ வாழ்ந்த தாய்
வெறுப்போடேயே இருக்கிறாள்
ஆக,
இப்போது என்னிடம் இருப்பது -
கருந்தோல் மனிதனதும்
அவனுக்கு 'ஓம்' பட்டு
தன் காதலைக் கட்டிக் காத்த
ஒரு வெள்ளைப் பெண்ணினதும்
புகைப்படம் மாத்திரம்தான்

-ஆங்கில மூலம்: GOANITA BUCHCHEIM



## துயரின் பிரதி

கண்ணாடியில் என்னைப் பார்க்கிறேன்
அது காட்டும் உருவை நான்
மாற்றியாக வேண்டும்
பொறியில் அடைபட்டுக் கிடக்கும்
உணர்வு என்னில்.
எல்லாம் விட்டு
விடுதலையாகித் தப்பித்தோட வேண்டும்

எனக்கான ஒரு தொழில் தேடினேன்
பார்த்த விளம்பரங்கள்
இரண்டு சிவப்புக் கோட்டு அடையாளங்களிடை
இவ்வாறு சொல்லின:
" ஆண் விண்ணப்பதாரிகள் மாத்திரம்"

1993

-ஆங்கில மூலம்: BEVERLEY SCARFE
(யோக்ஷயார் சுரங்கத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த இவர் ஒரு பதினாறு வயதான யுவதி)

தமிழில் : எம்.கே.எம். ஷகீப்

நன்றி - நூலகத்திட்டம்



# தெரிவுகள் - கோணல்கள் - பரிசுகள் - நிராகரிப்புகள் - ஏன் ?

-மு.பொ.

சரிநிகர் 161வது இதழில், சிவசேகரம் அவர்கள் தனது 'போரின் முகங்கள்' கவிதைத் தொகுதிக்கு சுதந்திர இலக்கிய விழாவை நடாத்தும் விபவியினரால் வழங்கப்பட்ட பரிசை நிராகரித்த செய்தியும், அதற்குரிய காரணத்தை விளக்கிய அவரின் கடிதமும், பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஏற்கெனவே இப ''பரிசளிப்புக்கள்' பற்றி ஆழ்வார்க்குட்டி எழுதியவை பற்றியும் கருத்தில் கொண்டு, அம்முடிவுகள் வெளியிட்ட வேளையில் நானும் அங்கிருந்து சிலவற்றை அவதானித்தவன் என்ற வகையிலும் சிலவற்றைக் கூறலாம் என்று எண்ணுகிறேன்.

ஆழ்வார்க்குட்டி எழுதியதில் நிரம்பிய உண்மையுண்டு. ஒரு எழுத்தாளனைப் பரிசுக்குரியவனாகத் தெரிவு செய்யும் போது, அவன் இளையவனானாலும் சரி, முதியவனாலும் சரி அவனது எழுத்தாற்றலை முன்வைத்துப் பரிசு கொடுக்க வேண்டுமே ஒழிய அவனது ஏனைய நிலைமைகளுக்காக இரக்கங்கொண்டோ அல்லது எதிர்மனச் சாய்வுகொண்டோ பரிசு வழங்கவோ, பரிசை நிராகரிக்கவோ கூடாது. இதுவே ஆழ்வார்க்குட்டியின் கட்டுரையில் தொக்கி நிற்கும் கருத்தாகும். இவைபோக, ஆழ்வார்க்குட்டியின் அவதானிப்பிலிருந்து விடுபட்டுப் போனவை. சில பற்றியும் நாம் இங்கு சொல்வது நல்லது.

1995ம் ஆண்டுச் சிறுகதைகள் தெரிவு முதலில் தெ. மதுசூதனன் - நான் ஆகிய எம்மிருவராலேயே செய்யப்பட்டன. ஆனால், அத்தெரிவில் காலஞ்சென்ற எழுத்தாளர் பெனடிக்ற் பாலனின் 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' என்ற சிறுகதைத் தொகுதி ஏழாம் இடத்திற்கு ஒதுக்கப்பட்டதால் (இவரது அத்தொகுப்புக்கு ஏற்கெனவே இலங்கை அரசின் சாகித்திய மண்டபப்பரிசு கிடைத்திருந்தது) கோபங் கொண்ட அவர், சுதந்திர இலக்கிய விழா தமிழ்ப்பகுதிக்கு பொறுப்பாகவிருக்கும் சிவகுருநாதனிடம் நண்பர் என்ற ரீதியல் முறையிடவே அவரது கருத்தால் அள்ளுப்பட்ட சிவகுருநாதனும் எமது தெரிவு தவறானது என்று கருதி - சாகித்தியப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பை நீங்கள் எப்படி ஏழாமிடத்திற்கு ஒதுக்கமுடியும் என்று கேட்டு - எமது தெரிவை நிராகரித்தார்.

95ம் ஆண்டுக்கான தெரிவு பின்னர் செல்வி திருச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், இவர்களின் தெரிவில் பெனடிக்ற் பாலனின் தொகுப்பு எட்டாம் இடத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது!

95, 96ம் ஆண்டுக்களுக்கான நூல் தெரிவுகள் சம்பந்தமான முடிவுகள் 10.11.98 சனிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டபோது இவை வெளியாயின. மதுசூதனன் -மு.பொ. ஆகியோரின் முன்னைய தெரிவு நிராகரிக்கப்பட்டதற்குரிய காரணங்களும், அக்கூட்டத்தில் அலசப்பட்டதால், அதையறிந்த செல்வி திருச்சந்திரன் அவர்களும் ஏனைய நடுவர்களும் சபையோரும் தமது அதிருப்தியை சிவகுருநாதனிடம் தெரிவித்ததோடு, அவர் இப்படி முன்னயை தீர்ப்பை நிராகரித்தது அந்த நடுவர்களை அவமதித்ததற்குச் சமம் என்றும், அது தம்மையும் பாதிக்கும் என்றும் கூறி அதற்காக சிவகுருநாதன் தமது மன்னிப்பை பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சிவகுருநாதனும் அதற்கு இணங்கிய போதும் அவர் தமது மன்னிப்பை சுதந்திர இலக்கிய விழா பரிசளிப்பின் போது கேட்டுக் கொண்டாரே ஒழிய பத்திரிகையில் வெளியிடவில்லை!

அடுத்து 1966ம் ஆண்டு கவிதை நூல் தெரிவு சம்பந்தமாக சில சொல்ல வேண்டும். இத்தெரிவைச் செய்யும் பொறுப்பு அவ்வை, விஜித்சிங் ஆகிய இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வை அன்று தனது முடிவைக் கூறுவதற்கு முன்னர், சு. வில்வரத்தினத்தின் கவிதை பற்றிச் சிலாகித்துப் பேசிய விதம் அவருடைய நூலைத் தான் (காலத்துயர்) பரிசுக்குத் தெரிவு செய்துள்ளார் என்றே அங்கிருந்தோரை எண்ண வைத்தது. ஆனால், திடீரென அவர் இறுதியில் "... இருந்த போதும் போரின் முகங்களையே நான் தெரிவு செய்கிறேன. காரணம் அதில் காணப்படும் அரசியலுக்காக" என்று அவர் கூறி முடித்தது ஒரு வித அசௌகரியத்தை ஏற்படுத்துவது போலிருந்தது. ஆனால், இதற்காக சிவசேகரத்தின் கவிதைகளை நான் இரண்டாந்தரத்துக்கு ஒதுக்குகிறேன் என்பதல்ல. அது வேறு விஷயம். இதற்கிடையில் ஆத்மாவின் மூன்று கவிதைகளை மட்டுமே உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு விஜித்சிங் நின்றது வேடிக்கை. இது ஒரு புறம் இருக்க, சு. வில்வரத்தினத்தின் 'காலத்துய'ருக்கு பரிசு கிடைக்காமல் போனதற்குரிய காரணம் (ஏற்கெனவே விபவியின் சுதந்திர இலக்கிய விழாவின் பரிசு பெற்ற) அவரின் 'காற்று வழிக்கிரமத்தை'விட இது தரங்குறைவாக இருந்ததே எனவும் சிலர் கதைத்தனர். இதில் உள்ள தவறென்னவெனின், போட்டிக்கு வந்த பிறரின் கவிதை நூல்களோடு 'காலத்துய'ரை ஒப்பிட வேண்டுமேயொழிய இதே ஆசிரியனின் முன்வந்த கவிதை நூலோடு அல்ல என்பதே.

இறுதியாக சிவசேகரம் அவர்கள் தான் பெற்றுக்கொண்ட பரிசை பின்னர் நிராகரித்தது சம்பந்தமாகச் சில சொல்ல வேண்டும். அவர் தனது கடிதத்தில் "சு. வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுதியான 'காலத்துயர்' நியாயவீனமாகப் புறமொதுக்கப்பட்டதென்பது எனது கருத்து. கவிதைக்கான பரிசை வில்வரத்தினத்துடன் பகிர்வதை ஒரு கௌரவமாகக் கொண்டிருப்பேன். எனது தொகுதியைப் புறக்கணித்து வேறொருவருடன் நான் பகிர்ந்த பரிசை வில்வரத்தினத்துக்கு மட்டுமே வழங்கியிருப்பினும் மிகவும் களிப்புற்றிருப்பேன்" என்கிறார்.

இங்கு ஒரு சிக்கல் எழுகிறது. சிவசேகரம் அவர்களால் பெயர் குறிப்பிடாது "வேறொருவர்" எனக் குறிப்பிடப்படுபவர் இளங்கவிஞர் ஆத்மா.

சிவசேகரம் அவர்கள் 'ஆத்மா' என்று பெயர் சொல்லாது 'வேறொருவர்' என்று அவரைக் குறிப்பிட்டது ஏன்? அவ்வளவு தூரம் அவர் பெயர் குறிப்பிடப்படுவதற்கே தகுதியற்ற "தீண்டத்தகாத" ஒரு இலக்கியக்காரரா? சிவசேகரத்தின் "போரின் முகங்க'-ளையும், வில்வரத்தினத்தின் 'காலத்துயரையும் புறமொதுக்கி, ஆத்மாவின் மூன்று கவிதைகளைச் சிபாரிசு செய்தவர் விஜித்சிங். இலக்கியரசனை வெவ்வேறாக அமையலாம். ஆத்மாவின் கவிதைகளை வேறுபலர் ரசிக்கலாம். சிவசேகரத்திற்கு வில்வரத்தினத்தின் கவிதைகளை முதன்மைப்படுத்தவும், பரிசை நிராகரிப்பதற்கும் உரிமையுண்டு. ஆனால், இன்னொரு கவிஞரை பேரே குறிப்பிடாது 'வேறொருவர்' என்று ஒதுக்குவதற்கு எந்த உரிமையும் இல்லை. இதுவும் ஒரு வித அதிகாரத்துவப் போக்குத் தான் எனலாமா? ஒரு வேளை 'பிற்போக்கு, இஸ்லாமிய அடிப்படைவாதச் சிந்தனைக் கீற்றுக்கள் உடைய' ஆத்மா போன்ற கவிஞரோடு நான் பரிசைப் பகிர்ந்து கொள்வதை விரும்பவில்லை' என்று சிவசேகரம் கூறியிருந்தால், அதை நாம் விளங்கிக் கொள்ளலாம். மேலும் ஆத்மாவின் மூன்று கவிதைகளைத் தேர்வு செய்த விஜித்சிங் தனது பார்வைக்குக் கிடைத்த ஏனைய கவிதைகள் பற்றி முன்வைத்த விமர்சமும் தான் தேர்ந்த மூன்று கவிதைகள் பற்றிக் கடைப்பிடித்த 'கறார்' போக்கும் அவர் எவராலும் தவறாக வழிநடத்தப்பட்டவராகவோ பிழையான முடிவுக்கு வரச்செய்யப்பட்டவராகவோ கூற முடியாது. அது அவரின் சுயம்புவான முடிவே என்பது துல்லியம். □

**1995ம் ஆண்டுச் சிறுகதைகள் தெரிவு முதலில் தெ. மதுசூதனன் - நான் ஆகிய எம்மிருவராலேயே செய்யப்பட்டன. ஆனால், அத்தெரிவில் காலஞ்சென்ற எழுத்தாளர் பெனடிக்ற் பாலனின் 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக"என்ற சிறுகதைத் தொகுதிக்கு ஏழாம் இடம் வழங்கினோம். (இவரது அத்தொகுப்புக்கு ஏற்கெனவே இலங்கை அரசின் சாகித்திய மண்டலப்பரிசு கிடைத்திருந்தது) ஆனால் இத்தெரிவு தவறானது என விபவியால் நிராகரிக்கப்பட்டு மீளவும் தெரிவுக்காகப் புதிய நடுவர்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் செல்வி திருச்சந்திரன் அவர்கள் தலைமையில் இத் தெரிவு நடைபெற்றது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், இவர்களின் தெரிவில் பெனடிக்ற் பாலனின் தொகுப்பு எட்டாம் இடத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது!**




யாழ் இனிது
(சிறுகதைகள்)
ஆசிரியர்:
சாந்தன்
வெளியீடு:
A.A.H.K.Ghori
'SHARAZ'
First Main Road,
Aannanagar East,
Chennai - 600 102
விலை: 20/- (இந்திய விலை)

சாந்தனுடைய இரண்டாவது சிறுகதைத் தொகுதி இது. இவருடைய முதலாவது சிறுகதைத் தொகுதி (1982ல் 'கிருஷ்ணண் துது' என்ற பெயரில் 'இலக்கியத் தேடல்" அமைப்பில் வெளியீட்டது.

சாந்தனுடைய இந்த 'யாழ் இனிது' தொகுப்பில் 24 சிறுகதைகளும், 'உறவுகள் ஆயிரம்' என்ற குறு நாவலும், தினக்குரல் (14, டிசம்.97) பத்திரிகையில் பிரசுமாகியிருந்த சாந்தனுடைய நேர்காணலும் இடம்பெற்றிருக்கின்றன.

**ராசாத்தி-**



சண்டி லமய்
(சுட்டிக் குழந்தைகள்)
எழுதியவர்:
குமாரதாச ஜயசிங்க
வெளியீடு:
சரசவி வெளியீட்டகம்
இல. 30, ஸ்டான்லி திலகரட்ன வீதி,
நுகேகொடை.

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தில் பணிபுரியும் சிறுவர் இலக்கிய எழுத்தாளரான குமாரதாச ஜயசிங்கவின் சிங்கள நூல் இது. சிறுவர் எழுத்தாளரும், சிங்கள சினிமாவில் நீண்ட நாள் தொடர்புடையவருமான அவரது இந்நூல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. (முதற்பதிப்பு - 1978)

சாலிய, காந்தி, டெர்ரி என்ற மூன்று சிறுவர்கள் செய்யும் சுட்டித்தனங்கள், விளையாட்டுத்தனங்கள் என்பன இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

நூலில் இன ஒற்றுமை, மத நல்லிணக்கம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட சம்பவங்கள் விளக்கப்பட்டுள்ளதுடன் சிறுவர் உளவியலை வெளிப்படுத்தும் வகையிலான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இந்நூல், எளிய மொழி நடை, சிறுவர்களை சிந்திக்கத்தூண்டும் விடயங்கள், அழகிய அட்டைப்படம் என்பவற்றை கொண்டுள்ளதால் குழந்தைகளை நிச்சயம் கவரும் எனலாம்.

**-ரத்னா**

## 99ம் ஆண்டு மலர்

கிழக்கும் மேற்கும் (1997), இன்னுமொரு காலடி (1988) ஆகிய இலக்கியச் சிறப்பு மலர்களைத் தொடர்ந்து நியூஹாம் தமிழர் நலன்புரி சங்கம் 1999ஆம் ஆண்டுச் சிறப்பு மலரினைத் 1999 சித்திரை மாதத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தமிழர்களின் உலகளாவிய அண்மைக்காலப் புலப்பெயர்ச்சி கலை, இலக்கிய. கலாசார மையங்களில் எல்லைகளையும் விரிவுபடுத்தி, அவற்றைப் புதியவகையில் கட்டமைக்க உதவியுள்ளது. மொழி, எழுத்து, இலக்கியம் பற்றிய புதிய சிந்தனைகளின் ஒளியில் நாம் வாழும் காலத்தினை அணுகும் புதிய எழுத்துக்களை ஆக்கத்தாரர்களிடம் வேண்டி நிற்கிறது. மொழியின் தேய்ந்து போன தடங்களிலன்றி மொழிக்கும் எழுத்திற்கும் வலுச்சேர்க்கும் காத்திரமான ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அது வேண்டுகிறது.

ஈழத்து மண்ணின் பன்முகத் தன்மையையும், எம்மக்களின் வாழ்நிலை அனுபவங்களையும், போர்ச் சூழலையும் பிரதிபலிக்கும் ஆக்கங்கள், புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வளர்ச்சியின் சாத்தியங்கள், ஆழ்ந்த இலக்கிய விமர்சனங்கள், ஓவியம், புகைப்படம், திரைப்படம் சார்ந்த ஆக்கங்கள், நாடகம், நடனம், இசை குறித்த படைப்புகள். அனைத்தையும் உள்ளடக்கி அடுத்த ஆண்டுமலர் பொலிவாக வெளிவர அவாவுவதாகவும்அது தெரிவிக்கிறது. ஆக்கங்களைத் தமிழர் திருநாளாம் பொங்கலுக்கு முன் அனுப்பி வைக்குமாறு படைப்பாளிகளை அது வேண்டுகிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
R. Pathmanada Iyer
Tamil Welfare Association,
33A Station Road,
London E12 5BP
United Kingdom.

## சபாலிங்கம் நினைவு மலர்

மனித உரிமைவாதியும், இலக்கியவாதியுமான சபாலிங்கம் கொல்லப்பட்டு 5ம் ஆண்டுகள் நிறைவுறுவதை நினைவு கூர சபாலிங்கம் நண்பர்கள் வட்டம் (பிரான்ஸ்), ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.


இதன் பொருட்டு, மனித நேயத்தைத் தக்க வைக்கும், அனைத்து அராஜகங்களையும் வெளிப்படுத்தும் மற்றும் அராஜகத்துக்கெதிரான கவிதைகள். கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் மற்றும் ஏனைய படைப்பிலக்கியங்களையும் கொண்டதொரு நூலினை வெளியிடுவதற்கு எண்ணியுள்ளது.

இதற்கான படைப்புக்களை அது கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றது. படைப்புக்களை 99 பெப்.18ம் திகதிக்க முன்பாக அனுப்பி வைக்கும்படி அது கேட்டுக் கொள்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
S.Pushparajah,
7, Rue Racine,
95140 Garges,
France.

நன்றி - நூலகத்திட்டம்





## தொடர்ச்சியின் விளைவுகளே இவை!

## இளைய பரம்பரை அறிய உதவுக!

கடிதம்-1

கலை இலக்கியங்களில் தொடர்ச்சியான சமூக நடைமுறையினதும், தொழில்நுட்ப நுணுக்கங்களினதும் பங்கை மறுப்பது சில தூய இலக்கியவாதிகட்குக் கைவந்த கலை. வெங்கட் சாமிநாதன் என்கிற 'தூய அழகியல்வாதி'யுடைய பழைய கட்டுரை ஒன்று சரிநிகரில் (158-159) வெளியாகியுள்ளது.

புதுமைப்பித்தனுடைய நகைச்சுவையான உரைநடையிற் கூட 'அற்புதமான' படிமங்களை வாசிக்கும் ஆற்றல் கொண்ட வெ.சா, சிற்பம் தொடர்பாகவும், அதே விதமான வரட்டுக் கற்பனையையே பிரயோகித்துள்ளார். உலோகத்தின் கடுமையை மீறித் தென்படும் மென்மை, நளினம் போன்ற பலவும் படிமக் கலையிலும், சிற்பத் தொழிலிலும் எத்தனையோ நூற்றாண்டு காலமாகக் கடைப்பிடிக்கப்பட்ட தொழில் நுட்பத்தினதும் வேலை நுணுக்கத்தினதும் பரிணாம வளர்ச்சியின் விளைவு தான்.

கிழக்காசியாவில் தந்தமும் பல வகையான பளிங்குக் கற்களும் மிக நுட்பமான வேலைப்பாட்டுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அங்கும் இந்தியத் துணைக் கண்டத்திலும் கலைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தினது தேவையைக் கருத்திற்கொண்டே செயற்பட்டன. அவற்றின் பெரிய உச்சநிலைகளும் மிகவும் வரையறுக்கப்பட்ட செயற்பாட்டுத் தளமும் சமூகத்தின் தன்மையால் நிர்ணயிக்கப்பட்டவை தாம்.

கலைத்துறைச் சாதனைகள் என்ற வகையில் போற்றற்குரிய இவை ஏதோ' ஒரு அநாமதேயச் சிற்பியின்' சாதனை வரிசையில் அடங்குவன அல்ல. ஒரு சிற்ப மரபின் தொடர்ச்சியான வளர்ச்சியின் உன்னதமான விளைவுகள் என்றே காணப்பட வேண்டும்.

தென்னிந்திய இசைமரபின் சிறப்பை சங்கீத மும்மூர்த்திகள் எனப்படுவோரது அதிமானுடச் சாதனையாகப் பிராமணியம் காட்டுகிற போக்கும் முற்குறிப்பிட்ட அறியாமை சார்ந்ததே. தென்னாட்டு இசை கணிகையர், பாணர் போன்ற படைப்பாளிகளது மரபில் தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்பட்ட ஒன்று. அந்த இசையின் ஊற்றுக் கண்கள் வெகுஜனங்களது வாழ்வும் கலை உணர்வுமே. சாதனையாளர்களாக அடையாளங் காணப்படுவோரது பங்களிப்பின் முக்கியத்தை எள்ளளவும் ஊறுபடுத்தாமல் கலைகளின் வளர்ச்சியின் சமூகப் பரிமாணத்தை நாம் சரிவர அடையாளங் காண முடியும். மறுபுறம் கலையை மனித இருப்பிலிருந்து விலக்கி நோக்கும் போது நமது பார்வை இருளடைகிறது.

கடிதம்-2

சரிநிகரில் வந்த அண்மைக்கால சில கட்டுரைகள் வரவேற்கத்தக்கன. இது நல்லதொரு திசைமாற்றத்தைக் குறிக்குமாயின் மகிழ்ச்சியடைவேன்.

சீன அயற்கொள்கை பற்றிய கட்டுரை, இந்திய அணுஆயுதப் பரிசோதனையையொட்டி ஏற்பட்ட குதூகலிப்பின் போது வெளியாகி இருப்பின் கூடிய பயனளித்திருக்கும்.

மு. கார்த்திகேயன் பற்றிய நினைவுகூரல், இடதுசாரிகள் மீது சேறுவீசுவதையே தொழிலாக்கியுள்ள ஒரு சிறு கும்பலின் அண்மைக்காலச் சிறு சஞ்சிகை முயற்சிகளின் நடுவே, ஒரு நல்ல நினைவு மாத்திரை. மு.கா. போல மக்களுக்காக வாழ்ந்த பல நல்ல கம்யூனிஸ்ட்டுக்கள் பற்றி நமது இளைய பரம்பரை அறியவேண்டும். கைலாசபதி இறந்து சில நாட்களிலேயே கைலாசபதி கற்பித்த சமூக இலக்கியப் பார்வையையும் கைலாசபதியையுமே மறந்து விட்ட ஒரு அறிஞர் குழாம் உள்ள இந்த மண்ணில் போலிகட்கும் பிழைப்பு வாதிகட்கும் ஏது பஞ்சம். முன்னுதாரணமான நல்லவர்கள் பற்றி நாம் மேலும் அறிவது பயனுள்ளது.

**சிவசேகரம், கொழும்பு-3**

## கணையாழிக்கதையை ஒத்திருக்கிறதே!

சரிநிகர் 160வது இதழ் பார்த்தேன். அதில் இடம் பெற்றுள்ள சம்மாந்துறை எம்.எம்.நௌபத் எழுதிய "தேவதையின் சமாதானம்" என்ற சிறுகதையை வாசித்தேன். இன்றைய நமது சூழலை கனவுலக சிந்தனைத் தளத்தில் வைத்து எழுதப்பட்டது போல இருந்தது.

எனினும், கணையாழி ஒக்டோபர் 96 இதழில் இடம் பெற்ற முகையூர் அசதா தமிழில் மொழி பெயர்த்திருந்த (ஆங்கில மூலம் - சம்னர் ஆல்பி) "கடவுளின் குரல்" என்ற சிறுகதையை பல வழிகளில் ஒத்திருந்தது என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

**கல்லூரன், கல்முனை**

# வித்தியாசமான ஒரு சிறுகதை

நீண்ட நாட்களின் பின் வித்தியாசமான ஒரு நல்ல சிறுகதையை படிக்கக் கிடைத்த மனநிறைவுடன் இக்கடிதத்தை எழுதுகின்றேன். ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் விடுதலைக்காகப் போராடும் ஒரு சமூகத்தின் அன்றாட அவலங்கள் - அனுபவிப்புகள் - அவைசார்ந்த உள்ளுணர்வுப் பிரளயத்தின் உச்சங்களுமே மிகச்சிறந்த கலைப்படைப்புக்களாய் மதிக்கப்படுகின்ற இக்காலகட்டத்தில் -

புலம்பெயர்ந்த மக்களின் புண்பட்ட இதய ஓலங்களையும் கடல்கடந்த நிலையிலும் கரைதெரியாமல் தத்தளிக்கின்ற அன்னவர்தம் கலாசார - பண்பாட்டு பரிமாற்றங்களையும்... பாரம்பரிய கட்டமைப்பிலிருந்தும் சற்றே விலகி நின்று கதைப் பொருளாக்கும் பரிசோதனை முயற்சிக்கு ஊடகமாகிவிட்ட இன்றைய நவீனசிறுகதை இலக்கியப் பரப்பில்,

இவற்றையெல்லாம் உள்வாங்கி, இவற்றுக்கெல்லாம் அப்பால் நின்றபடி மனிதநேயத்தையும் மானுட நுண் உணர்வுகளையும் ஆண்டு - அனுபவித்து மிகத்துல்லியமாய் வெளிப்படுத்தலை அவாவி நிற்கும் ஒரு கலைபொக்கிஷமே சகோதரர் எஸ்.எல்.எம். அவர்களின் "அவளும் ஒரு பாற்கடல்". இது மிகவும் அருமையானதொரு கதை. லா.சா.-ராவும், புதுமைப்பித்தனும், ஜே.ஜேயும், நாகராஜனும், ராஜநாராயணனும், ஜெயகாந்தனுமாய்... தனித்தனியே அடைகாத்து வளர்த்தெடுத்த தனித்துவங்களுக்குள்ளிருந்து இந்த இருபதாம் நூற்றாண்டின் அந்திமத்தில் முகிழ்த்துள்ள முற்றிலும் புதிய ஒரு சிருஷ்டிப்பின் தேடலாய் இதனைக் காணல் என்னைப் பொறுத்த வரையிலும் ஒன்றும் மிகைப்பட்ட கணிப்பீடாக தென்படவில்லை.

ஏனெனில், நமது பெரும்பாலான எழுத்தாளர்கள் கலைஞர்களாக இல்லாமல் 'கதாசிரியர்'களாகவே இருக்கிறார்கள். வாசகர் ரசனைக்குத் தீனிபோடுவதற்காக கதைகட்டுபவர்களும் தங்கள் கொள்கை விளக்கத்துக்கு ஏற்றவகையில் பாத்திரங்களையும் சம்பவங்களையும் சோடித்துக் கதைபுனைபவர்களுமே இன்று பிரபலமான எழுத்தாளர்களாக நம்மத்தியில் உலாவுகின்றார்கள். இவர்களுடைய எழுத்தில் சத்தியம் இருப்பதில்லை. அதனால் நமக்கு கலை அனுபவம் கிடைப்பதில்லை. கலைப்பாதிப்பு ஏற்படுவதுமில்லை. ஆனால், "எஸ்.எல்.எம்." அவர்களின் கதைகள் இதற்கு முற்றிலும் எதிரிடையானவை. இவரின் எந்த ஒரு கதையுமே வாசகனுக்குத் தீனிபோடுவதற்காகவோ, கொள்கைப் பிரகடனத்துக்காகவோ புனையப்படுபவையல்ல. இவை படைப்பாளியின் உண்மை அனுபவங்கள். படைப்பாளியின் புறவாழ்வு அவனது அகவாழ்வில் ஏற்படுத்திய பாதிப்புக்களின் வெளிப்பாடுகள். அந்தவகையில் இவைவெறும் கதைகள் மட்டுமில்லை. ஆத்மார்த்தமுள்ள கலையின் வெளிப்பாடுகளுங்கூட.

அந்தவகையில், "எஸ்.எல்.எம்." அவர்களின் படைப்புகள் வெளிப்படுத்தும் சமூக யதார்த்தமும் அவை ஏற்படுத்தும் கலை பாதிப்பும் ஆழமானது. சமூகத்தில் ஊடுருவியுள்ள பொய்மையை, போலித்தனங்களை, முரண்பாடுகளை அவை அம்பலப் படுத்துகின்றன. அவற்றோடு ஒத்தோட மறுக்கும் - அவற்றுக்கிடையே அகப்பட்டு நசுங்கும் மனித உரிமைகளின் அவஸ்தையை உணர்த்துகின்றன. அந்த அவஸ்தையை . வாசகர் மனதிலும் தொற்ற வைக்கின்றன. இதுவே இவரது கலையின் வெற்றியாகும்.

நமது இளைய தலைமுறை "எஸ்.எல்.எம்." அவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன. இவரது கதைகள் காட்டும் கட்டிறுக்கமான உருவ வெளிப்பாடும் பொருள் சார்ந்த வீச்சானமொழி நடையும் கருதி, பள்ளிமாணவர்களின் பாடப்புத்தகத்தில் கூட "மக்கத்துச்சால்வை" சேர்க்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நிறைவாக, பணிவான ஒரு வேண்டுதல்-

இவரிடமிருந்து நல்லாபல சிறுகதைகளைப் பெற்று, "சரிநிகர்" வாசகர்களாகிய எங்களுக்கு வழங்க வேண்டும் என்று உரிமையோடு கேட்டு முடிக்கிறேன்.

**வி.ஏ.ஜுனைத், ஓட்டமாவடி**

## தவறு

டிச.10 - டிச23 1998 தங்கள் சரிநிகர் பத்திரிகையில் வெளியான "தென்னந்தோட்ட சொந்தக்காரர் யார்?" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட செய்தி பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவராகிய என்னையும், சபையையும் கொச்சைப் படுத்தியதுடன், மனவேதனையையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. இச்செய்தி வேண்டுமென்றே அபகீர்த்தி ஏற்படுத்தும் வண்ணம் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்கொண்டு 30.11.98 இல் நடைபெற்ற கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் பிரதியை இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றோம். அது வருமாறு:

தென்மராட்சிப் பகுதியில் பல தென்னந்தோட்டங்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். பல தோட்டங்களில் மிதிவெடிகள் வைக்கப்பட்டுள்ளன. இதனால் உரிமையாளர்கள் தோட்டங்களை பராமரிக்க முடியவில்லை. இதனால் தேங்காய் விலை மிக அதிகரித்துள்ளது. இவ்வாறான தென்னந்தோட்டங்களை தோட்ட உரிமையாளரிடம் ஒப்படைத்து பராமரிக்க வசதிகள் செய்து கொடுத்தால் உற்பத்தியாகும் தேங்காய் பொதுமக்கள் பாவனைக்குவர, தேங்காய் விலையில் வீழ்ச்சி ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால் இவ்விடயத்தினை இராணுவ அதிகாரியிடம் பேசிக் கொள்வதென ப. இரவீந்திரன் முன்மொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**அ. ஸ்ரீரங்கேஸ்வரன்**

**தலைவர்,பருத்தித்துறை பிரதேச சபை**

**புலோலி**

## இப்படித் திருத்துக

தங்களின் 161 இதழில், 12வது பக்கத்தில் வெளியாகிய "யுக்திய" பத்திரிகையின் மொழிபெயர்ப்பு செய்தியில் எனது வாக்குமூலமும் அன்பு நிலைய பரிபாலகர் சுந்தரலிங்கம் அவர்களின் வாக்குமூலமும் கீழ்க்காணும்வாறு இருத்தல் வேண்டும்:

1981ம் வருட குடிசன மதிப்பீட்டின்படி சிங்கள மக்கள் 86,341, தமிழ் மக்கள் 86,743 எனவும், முஸ்லிம் மக்கள் 74,395 எனவும் இடம் பெறுதல் வேண்டும். அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் 427 கிராமங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலனவை மக்கள் இல்லாத சூன்ய பிரதேசங்களாக மாற்றமடைந்துள்ளன. இதுவரை நடைபெற்ற வன்செயல்களினால் 57 முஸ்லிம் பள்ளிகளும், 47 பௌத்த விகாரைகளும், 126 இந்துக்கோவில்களும் சேதமடைந்துள்ளன.

சுந்தரலிங்கம் அவர்களின் வாக்குமூலத் திருத்தம்:

திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தில் பாதிப்படைந்த சிறுவர்களை பராமரிக்க தபோவனம், மெதடிஸ் சிறுவர் இல்லம், சண்முகா இல்லம், அன்பு இல்லம் என சில சிறுவர்கள் நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் "அன்பு இல்லம்" எனப்படும் சிறுவர் நிலையம் எனது பொறுப்பில் இருக்கிறது. இந்நிலையத்தில் யுத்தத்தினால் தாய் தந்தையர் அல்லது பாதுகாவலர்களை இழந்த 192 சிறுவர்கள் இருந்து வருகின்றனர்' என இடம் பெறுதல் வேண்டும். □

## ரத்தம்...

வெள்ளைக்காரர்களின் இராணுவத்தை இலங்கைக்குக் கொண்டு வருவது பற்றியும் கதைகள் அடிபடுகின்றன. இவற்றைக் கேள்விப்படும் போது கிராமத்தவர்கள் "மழை இல்லாத நாளொன்றில் இவர்கள் மீது இடி விழட்டும்" என்றே சொல்லுகின்றனர்.

குமார் பொன்னம்பலம் பிறந்ததும், விக்ரமபாகு கருணாரத்ன பிறந்ததும் இந்நாட்டிலேயே. எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இந்தியர்கள் வரத்தேவையுமில்லை: வெள்ளைக்காரர்களைக் கொண்டு வரத்தேவையுமில்லை. எமது அன்புக்குரிய தாய் நாட்டை பரதேசிகள் சாக்கடையாக்க அனுமதியோம்.

"சகோதரனே நீ மரணிக்கவில்லை, பெருமூச்சாகி இதயத்தில் தங்கிவிட்டாய்" என்றே தெற்கிலுள்ளவர்கள் அழுகின்றனர். வடக்கில் உள்ளவர்களும் அதனையே சொல்லி அழுகின்றனர். இந்த இரு பிரிவினரதும் இரத்தம் ஒரே தாய் நாட்டுக்காக பெருக்கெடுத்து ஓடியது. எப்படி அவ்வாறு நடந்தது? இந் நிலைமையை ஏற்படுத்தியது இம் முதலாளித்துவ ஆட்சியாளர்களே, இவர்களுடன் நாம் கணக்கைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ○

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
- பாரதி

இல:19 -.4, நாவல வீதி, நுகேகொட.

## 1998ம் ஆண்டின் விளிம்பில் நிற்கிறோம்.

பிறக்கப் போகிற புதிய ஆண்டு எப்படி அமையப் போகிறது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்து நிற்கிறது.

மாவீரர் தினப் பேச்சில் புலிகளின் தலைவர் பிரபாகரனால் விடுக்கப்பட்ட சமாதான சமிக்ஞைக்கான பதில் இன்னமும் நம்பிக்கை ஊட்டும் விதத்தில் அரசு தரப்பில் இருந்து வெளிப்படவில்லை.

சமாதானம் வரப்போகும் ஆண்டிலும் ஒரு கனவாக மட்டுமே இருக்கப் போகிறதா? யுத்தமும், மிடியும், இழப்புகளும் மலிந்த ஓராண்டாகவே இதுவும் அமைந்து விடப்போகிறதா என்ற ஏக்கம் இந்த நாட்டின் மக்கள் மனதில் எழுந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஆண்டு பிறக்கும் போதே தேர்தலுடன் பிறக்கிறது. வடமேல் மாகாண சபைக்கான 'ஜனநாயகத்' தேர்தலுக்காக கட்சிகள் கத்தி கோடரி துப்பாக்கிகள் சகிதம் களத்தில் இறங்கியுள்ளன. கூடவே, ஒரு கூடை பொய் வாக்குறுதிகளும்.

இந்த ஆண்டு அடுத்தடுத்து பல தேர்தல்களை சந்திக்கப் போகிற அல்லது, தேர்தலுக்கான முஸ்தீபுகள் தீவிரமாக நடக்கப் போகிற ஒரு ஆண்டாக அமையப் போகிற ஒரு ஆண்டு. அரசியல் பலப்பரீட்சையுடன் அடிதடிப் பலப்பரீட்சையும் நடக்கக் கூடிய ஒரு ஆண்டு.

நடந்து கொண்டிருக்கிற இந்த ஆண்டு யுத்தத்துடன் பிறந்தது. கிளிநொச்சியைக் குறிவைத்து நகர்ந்த ஜயசிக்குறு படைநடப்பின் மரண ஓலங்களும், குண்டுப் புகைகளும், அம்புலன்ஸ் வண்டிகளின் ஹோர்ன் ஒலியும் கட்டியம் கூற அது பிறந்தது படுகொலை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை, கைதுகள் என்று முடிவற்ற மனித உரிமை மீறல்கட்கு மத்தியல் அது வளர்ந்தது.

நாட்டின் பிரதான நகரங்கள் எல்லாம் தடுப்பு முகாம்களும் காவலரண்களும் சோதனைச் சாவடிகளுமாக மலிந்தன. மனிதர்கள் ஒவ்வொருவரும் சந்தேகத்துக்குரியவர்களானார்கள். பொலிஸ் நிலையங்களும் சிறைச்சாலைகளும் கைதிகளால் நிறைந்தன. அரசாங்கத்தின் தீர்வுப் பொதி என்ற காகிதக் கட்டு பேசுவாரற்று தூசுபிடிக்க மூலையில் வீசப்பட்டுக் கிடந்தது.

தமிழர்கள் புலிகளாக்கப்பட்டனர், வந்தேறு குடிகள் என்று இழித்துரைக்கப்பட்டனர். அவர்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்தும் கொலைக்களங்களாகின, சித்திரவதைக் கூடங்கள் முளைத்தன. காணாமற் போனோர்கள் பட்டியல் நீண்டது. செம்மணிப் புதைகுழிகள் பற்றிய திடுக்கிடும் செய்தி வெளியானது.

சமாதானத்துக்கா மக்கள் தேசம் முழுவதும் குரலொழுப்பி நின்றனர். யுத்தம் வேண்டாம் என்று மன்றாடினர். எங்களை நிம்மதியாக வாழவிடுங்கள் என்று அரற்றினர். ஆனால் சமாதானத்திற்கான யுத்தம் தொடர்ந்தது. ஜனாதிபதி சமாதானம் பற்றிப் பேசினர். மந்திரி பிரதானிகள் பேசினார்கள். எதிர்க் கட்சிகள் பேசின. படையினரும் ஏன் புலிகளும் கூடப் பேசினார்கள்.

ஆனால் சமாதானம் வரவில்லை, நிலைமையில் மாற்றம் வரவில்லை.

வந்தது சாவும், சண்டைக்காக கப்பல் கப்பலான ஆயுதங்களும் மட்டும் தான்.

அனுருத்தர் தலைமையில் நடந்த அழிவு யுத்த நடவடிக்கையை நடாத்த அம்மா தலைமை ஏற்றது மட்டும் தான், வந்த மாற்றமாக அமைந்தது.

அகதி முகாம்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இடம் பெயர்ந்தோர் நிவாரணம் வெட்டப்பட்டு பட்டினிச்சாவு வளர்ந்தது. தொற்று நோயும் தன்பங்குக்கு பற்றிக் கொண்டது. வவுனியாவில் சிறுவர்களின் போசாக்கின்மை எதியோப்பியா, ருவண்டா குழந்தைகளைப் போன்ற குழந்தைகளை வன்னியில் உருவாக்கித் தருமளவுக்கு விருத்தியுற்றது.

இது 1998ம் ஆண்டின் கதை.

இனிவரப்போகும் 1999 எப்படி அமையப் போகிறது?

ஜயசிக்குறு நிறுத்தப்பட்டவுடன் ரிவிபல தொடங்கியிருக்கிறது. யுத்த முனையில் சண்டையில் ஈடுபடும் படையினர்க்கு தலைமை தாங்க ஜனாதிபதியே நேரடியாக முன்வந்துள்ளார். படைக்கான ஆட்சேர்ப்பும், ஆயுதம் வாங்கும் முயற்சியும் தீவிரம் அடைந்துள்ளது யுத்த செலவுக்காக வரவு செலவுத் திட்டத்தில் வரலாறு காணாத பெருந்தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்கு, முன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்க நாம் தயாரில்லை என்று ஜனாதிபதி தெளிவாகவே அறிவித்துள்ளார்.

ஆக இவ்வாண்டும் யுத்தத்தினதும் அதன் பிறவிளைவுகளதும் சுமை குறையும் என்ற அறிகுறி இருப்பதாகத் தெரியவில்லை.

அதுவும் தேர்தல்களை எதிர்நோக்குகிற அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிகிற ஆண்டாக இது இருப்பதால் யுத்தம் இன்னமும் தீவிரம் அடையவே வாய்ப்பு இருக்கிறதாகத் தோன்றுகிறது.

பேரினவாத சக்திகளின் வேகம் அதிகரித்து வருகின்றது. தமிழ் எழுத்துக்களை தார்பூசி அழிப்பது முதல் தமிழர்களின் குடியிருப்புக்களை அப்புறப்படுத்த வேண்டும் என்பது வரை அது தன்பாட்டில் செயற்பட்டு வளர்ந்து வருகிறது.

அரசாங்கம் இதுபற்றி அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இன்னும் சரியாகச் சொல்வதானால், பேரினவாதத்திற்கு தலைமை கொடுத்து சவாரிவிட அது முயல்கிறது. எதிர்க்கட்சிகளும் கூடத்தான்.

தமிழ் முஸ்லிம் மலையகக் கட்சிகளான சிறுபான்மைக் கட்சிகளும் இதுபற்றி அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

அவையும் எதிர்வரப் போகும் தேர்தல் பற்றிய அக்கறையில் மூழ்கி இருக்கின்றன. போலும்.

பேரினவாத அடக்கு முறையை விட, தமது மக்களின் அரசியல் சுதந்திரத்தை விட, அவர்களது உரிமகளை விட, ஆசனங்கள் முக்கியமானவை அல்லவா அவர்களுக்கு? ஆக, சமாதானத்திற்கான நம்பிக்கை ஒளிக்கீற்றை இவர்கள் யாரிடமிருந்தும் எதிர்பார்க்க முடியும் என்று நம்ப முடியவில்லை.

சமாதானத்திற்காக துடிக்கும் மக்களுக்கு இன்னொரு அன்றைய சந்திரிக்கா போன்ற வடிகால் தேவைப்படுகிறது.

இன்றைய சந்திரிகாவாலும் சரி , ரணிலாலும் சரி நிரப்பப்பட முடியாத அந்த சந்திரிகாவுக்காக இந்த ஆண்டு விரிந்து கிடக்கிறது.

இன்னொரு ஐந்தாண்டு காலத்தின் பின் வேறொரு சந்திரிகாவுக்காக ஏங்கும் வரைக்கான வடிகால்.

இந்த வடிகால் அரசியலுக்கு வடிகால் கட்டும் பொறுப்பை எடுக்க வேண்டிய ஜனநாயக சக்திகள் விழித்தெழப் போவது எப்போ?

வழி தொடரும் தம்பணியை விட்டு வழிசமைக்க அவர்கள் எழுந்து நிற்கப் போவது எப்போது?

இந்த 1999லாவது அது நடக்குமா?

## வன்னி: புளொட் ஆரம்பித்த பயிற்சி!

இராணுவ செயற்பாடுகளில் கூடுதலான அளவில் ஈடுபட்டுள்ள புளொட் இயக்கத்தினர், இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதற்கு உரிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

குறிப்பாக வவுனியாவில், புளொட் இயக்கத்தினர் தமது உறுப்பினர்களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கும் செயற்பாடுகளை வெளிப்படையாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

காலை நேரங்களில், மாமடுவ வயல் வெளிப்பகுதியிலும் குளத்து வெளிப்பகுதியிலும், துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சியில் இவர்கள் ஈடுபடுவதனால், வெடிச்சத்தங்களைக் கேட்டு ஏதோ விபரீதம் நடந்து விட்டது என்று எண்ணி கிராமவாசிகள் அச்சமடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவுக்குக் கிழக்கே உள்ள சிங்களக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தாம் இதனால் பீதிக்கு உள்ளாகி உள்ளதாக தமது அரசியல் பிரதிநிதிகளிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இது இப்போது அடிக்கடி நடைபெறுவதாகவும், இது குறித்து படை அதிகாரிகளிடமும் தாம் முறையிட்டுள்ள போதிலும் பலனேதும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து பிபிசி புளொட் இயக்கத்தின் இராணுவத் தளபதியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட அவ்வியக்கத்தின் தலைவருமாகிய மாணிக்கதாசனைப் பேட்டி கண்டபோது,

ஆயுதம் தாங்கிய இயக்கங்கள், சாதாரணமாகத் தமது உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதைப் போலவே தாங்களும் தமது உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்கியதாகவும், இதில் புதிதாக ஒன்றும் இல்லையென்றும் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில், இராணுவத்துடன் இணைந்து புலிகளுக்கு எதிராக ஓர் இராணுவ அணியாக வன்னிப் போர் முனைகளில் புளொட் இயக்கம் செயற்படுவதற்கு ஆயத்தமாகி வருவது குறித்தும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதற்காகவே புளொட் இயக்கத்தினர் தமது உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் இராணுவச் செயற்பாட்டில் உள்ள புளொட் இயக்கத்தினர் பொது மக்களின் அன்பைச் சம்பாதிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் வவுனியா நகரில் மில் வீதியில் சென்ற புளொட் இயக்க உறுப்பினர் ஒருவருடைய சைக்கிள் மீது ஓட்டோ ஒன்ற தவறுதலாக மோதியதும், இயக்க உறுப்பினருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே ஓட்டோ சாரதியின் அடையாள அட்டையைக் கேட்டு, நீ யார்? எங்கே இருக்கின்றாய்? உனது சொந்த இடம் எது? என கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார். அதற்கு ஓட்டோச் சாரதி அடையாள அட்டையைக் கொடுக்க மறுத்ததுடன், அவருடைய கேள்விகளுக்கும் பதிலளிக்க மறுத்து விட்டார்.

இயக்க உறுப்பினரான தன்னுடன் மரியாதையாக நடக்க மறுத்துவிட்ட அவரை வந்து கவனிக்கின்றேன் என கூறிச்சென்றிருக்கிறார் புளொட் உறுப்பினர்.

சிறிது நேரத்தில் வாகனம் ஒன்றில் இயக்க வாலிபர்கள் சிலருடன் வந்த அவர் ஓட்டோ சாரதியை நையப் புடைத்திருக்கிறார். கைகால்களில் கடும் காயமடைந்த ஓட்டோச் சாரதி இப்போது வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவருடைய காலில் முறிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இயக்கத்தின் பொறுப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதும், சில மணித்தியாலங்களுக்குப் பின்னர், அவ்விடத்திற்கு வந்த இயக்க முக்கியஸ்தர் ஒருவர், இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவரை குத்துக் கரணமடிக்கச் செய்து தண்டனை வழங்கியிருக்கிறார்.

இந்தப் பகிரங்கத் தண்டனை புளொட்டினரால் வீடியோ படமெடுக்கப்பட்டிருக்கிறது. கடைவீதி மிகுந்த சுறுசுறுப்பாக இருக்கின்ற வேளையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பகிரங்கமான தண்டனையைப் பெருமளவு பொதுமக்கள் திகிலோடு பார்த்திருக்கிறார்கள்.

தாக்கதலுக்கு உள்ளான வறுமையின் பிடியில் உள்ள ஓட்டோ சாரதி தனது குடும்பத்திற்கு உழைத்துக் கொடுக்க முடியாத நிலையில் ஆஸ்பத்திரி வார்டில் கிடக்கின்றார். அவருக்கு ஒரு நாளைக்கு ஒருவர் என்ற ரீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஓட்டோக்கள் தரிப்பிடத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதிகள் தான் உதவி வருகின்றார்கள்.

- விசேட நிருபர்.

## கிளாலி : பலிக்களத்தில் மேலும் பலி!

கிளாலி நீண்ட காலமாக படையினரின் வெறியாட்டத்திற்கு ஆளாகி வந்த ஒரு பிரதேசம். யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது கிளாலியூடாகவே போக்குவரத்து நடைபெற்று வந்தது. அப்போதெல்லாம் கிளாலியூடாகப் பயணம் செய்யும் மக்கள் அக்கரை போய்ச்சேரும்வரை தமது குலதெய்வங்களை வேண்டிக் கொண்டு போவது வழக்கம். இங்கு அடிக்கடி வான் படைத்தாக்குதல் இடம்பெறுவதுண்டு. அத்துடன் கடற்படையினர் படகுகளில் வந்து பிரயாணிகளை வெட்டிக்கொலை செய்த பின் படகிற்கும் சேர்த்து நெருப்பு வைத்த சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

கடந்த 7.12.1998 அன்றும் இங்கு படையினரின் வெறியாட்டம் இடம் பெற்றுள்ளது. இந்த வெறியாட்டத்திற்கு மூன்று மாதக் குழந்தையும் குழந்தையின் சகோதரனும் பலியாகியுள்ளனர். தாயும் இன்னொரு பிள்ளையும் காயமடைந்துள்ளனர். அன்றைய தினம் மதுபோதையிலிருந்த சிப்பாய் ஒருவர் நடத்திய வெறியாட்டத்திலேயே இவர்களிருவரும் உயிரிழந்துள்ளனர்.

நிறைவெறியிலிருந்த இராணுவத்தினர் அருகிலிருந்த கடையில் பீடிவாங்கிப் புகைத்துக் கொண்டு இரவு 7.30 மணியளவில் ஞானப்பிரகாசம் சின்னாசிமுத்து என்பவரின் குடிசைக்குள் புகுந்து அவரை இழுத்து வந்து அருகிலுள்ள சங்கக்கடையின் முன் இருத்திவிட்டு இவரது மகளான அமிர்தராணியின் வீட்டுக்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அமிர்தராணியின் பிள்ளைகளான அமிர்தரன் (15), அமில்டன் (3 மாதம்) ஆகியோர் உயிரிழந்தனர். அமிர்தராணி (35) தீபன் (4) ஆகியோர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தில் வெறியாட்டம் நடத்திய சிப்பாய் இராணுவத்திலிருந்து தப்பியோடி பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டவர் எனத் தெரிய வந்தது.

வழமைபோலவே யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி லொஹான் குணவர்த்தனா மேற்படி சம்பவத்திற்கு பொது மக்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். அத்துடன் அவர் தனது அறிக்கையில் நாங்கள் அவதானமாக இருந்தாலும் இப்படியான சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

221298